# நாடோடி

★★★★

# ஒரு நாள் கூத்து



நாடோடி பிரசுரம்-4

திரு. 80.

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI

ACLTOD
00377

5346

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PA...

# ஒரு நாள் கூத்து

# நாடோடி

ஒரு நாள் கூத்து


PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

பிரசுரம்
நாடோடி
தியாகராயநகர், சென்னை

முதற் பதிப்பு அக்டோபர் 1945
சகல உரிமையும் ஆசிரியருக்கே

விலை ரூபாய் மூன்று

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், ஜி.டி., சென்னை.



அனு

# இவள்தான் அனு!

என் கட்டுரைகளை விடாமல் வாரா வாரம் படித்து வரும் அநேகர், "என் ஸார்! உங்கள் கட்டுரைகளில் அடிக்கடி அனு என்று ஒரு குழந்தை வருகிறதே, நிஜமாகவே அப்படி ஒரு குழந்தை உங்களுக்கு இருக்கிறாளா, இல்லை, அவள் கற்பனைக் குழந்தையா?" என்று கடிதம் எழுதிக் கேட்கிறார்கள்.

உண்மையிலேயே எனக்கு அனு என்று ஒரு வயதுப் பெண் ஒருவள் இருக்கிறாள். இதோ எதிர்ப்பக்கத்தில் இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்று ஒரு குழந்தை உட்கார்ந்திருக்கிறாளே அவள்தான் அனு! அனுராதாவைத்தான் நாங்கள் அனு என்று கூப்பிடுகிறோம்.

இந்த ஒரு வயதுக்குள்ளேயே இவள் தமிழர்களுக்கு எவ்வளவு தொண்டு செய்திருக்கிறாள் என்பதைத் தமிழர்களுக்குத் தெரிவிப்பதற்காகத்தான் அவள் போட்டோவை இந்தப் புஸ்தகத்தில் சேர்த்திருக்கிறேன்.

இவள் ஆறுமாதக் குழந்தையாக இருந்தபோது என்னைப் பார்க்க வந்திருந்த என் நண்பர் ஒருவர், இவள் காதில் விழும்படியாக என் கட்டுரைகளை வானளாவப் புகழ ஆரம்பித்து விட்டார்!

"அனு கேட்டுக்கொண் டிருக்கிறாள்! அவளை வைத்துக் கொண்டு என்னைப் புகழ வேண்டாம்?" என்று எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை.

"உங்கள் ஹாஸ்யக் கட்டுரைகளைப் படித்துச் சிரித்துச் சிரித்து எங்கள் வயிறு எல்லாம் புண்ணாகி விட்டது. இப்படித் தமிழர்களை ஹிம்சிக்கலாமா? இது நியாயமா?" என்று கேட்டார்.

அதைக் கேட்ட அனு அன்றிலிருந்து தமிழர்களை என்னிடமிருந்து காப்பாற்றத் தீர்மானித்து விட்டாள்! என் கட்டுரைகளையெல்லாம், அவ்வப்போது கைக்கு அகப்பட்டதைக் கிழித்தெறிய ஆரம்பித்து விட்டாள்!

நல்ல வேளையாக அவள் தன் தொண்டை வெகு தூரம் நிறைவேற்றுவதற்கு முன்னமேயே நான் என் கட்டுரைகளை யெல்லாம் சுருட்டி வாரி எடுத்து அச்சகத்துக்கு அனுப்பி விட்டேன். அதன் பயனாகத்தான் இதோ "ஒரு நாள் கூத்து" வெளி வந்து விட்டது.

இன்னும் "அட பரமசிவா!", "எங்கள் குடும்பம் பெரிது!", "படித்த பெண் வேண்டாம்!", "ஹே அனு ராதா!", "என்னைக் கேளுங்கோன்னா!" முதலிய புத்தகங்களும் வரப் போகின்றன.

தியாகராயநகர்,
28—9—45

நாடோடி

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஒரு நாள் கூத்து | .... | 9 |
| சோக சிகரம் | .... | 18 |
| இடி பாதை | .... | 23 |
| கல்யாணப் பரீட்சை | .... | 28 |
| முதலுக்கே மோசம் | .... | 35 |
| புளி மூட்டை | .... | 39 |
| "எங்கேயோ பார்த்தாப் போல இருக்கே" | | 45 |
| தலை முறை தலை முறையாய் | .... | 50 |
| நகரப் புனருத்தாரணம் | .... | 53 |
| கிராமத்திற்குப் போ! | .... | 61 |
| தபால் விநோதம் | .... | 65 |
| முறைதான் வித்தியாசம் | .... | 72 |
| முனிசிபாலிட்டி கடிதங்கள் | .... | 76 |
| காலணா வாண்டுகள் | .... | 81 |
| டாக்டரும் டாக்டரும் | .... | 86 |
| கால வித்தியாசம் - 1 | .... | 90 |
| அட நாராயணா! | .... | 93 |
| கால வித்தியாசம் - 2 | .... | 97 |
| ஞாபக மறதி | .... | 100 |
| கால வித்தியாசம் - 3 | .... | 105 |
| ஐயா, பழனி மலை வேலா! | .... | 108 |
| கால வித்தியாசம் - 4 | .... | 114 |
| எலியும் பூனையும் | .... | 118 |
| ஸ்ரீமதி சாஸ்திரி | .... | 122 |
| என்ன ஸார் டிபன்? | .... | 127 |
| ராக லக்ஷணங்கள் | .... | 131 |
| ஏன் ஸார் லேட்? | .... | 134 |
| சில அபிப்பிராயங்கள் | .... | 137 |

## நாடோடி எழுதிய நூல்கள்

நாடகமே உலகம்
பிழைக்கும் வழி
இதுவும் ஒரு பிரகிருதி
ஒரு நாள் கூத்து
அட பரமசிவா! (அச்சில்)
எங்கள் குடும்பம் பெரிது! (அச்சில்)
படித்த பெண் வேண்டாம்! (அச்சில்)
ஷே! அனுராதா! (அச்சில்)
என்னைக் கேளுங்கோன்னா! (அச்சில்)
புருஷர்களுக்கு மட்டும்! (அச்சில்)

# ஒரு நாள் கூத்து

☆

## காலை 8 மணி

[கிருஷ்ணசாமி அய்யர், ராமலிங்க சுவாமிகள் பாடலை ராகம் போட்டுப் பாடிக் கொண்டிருக்கிறார்.]

கிரு: ஆகா! என்ன அருமையான வாக்கியம்! இது வரையில் எத்தனையோ நாள் இதைப் படித்திருக்கிறேன். ஆனால் இன்றைக்குத்தான் இதன் தாத்பர்யம் விளங்குகிறது.

**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்**
**உறவு கலவாமை வேண்டும்.**

[ராகம் போட்டுப் பாடுகிறார்.]

ஆகா! பொய் சொல்லுகிறவர்களுடைய உறவே கூடாதென்றால் நாம் மாத்திரம் பொய் சொல்லலாமா? பொய் சொல்லிப் பொய் சொல்லி என் வாழ் நாளையெல்லாம் வீணாக்கி விட்டேனே! சின்னச் சின்னப் பொய்! சிங்காரப் பொய்! சீ! இனிமேல் விளையாட்டுக்குக் கூடப் பொய் சொல்லக்கூடாது.... ஆமாம், ரொம்ப சுலபமாகத் தான் தீர்மானம் பண்ணி விட்டோம். ஆனால் செய்த தீர்மானத்தின்படி நடப்பது அவ்வளவு சுலபமா!.... பார்ப்போமே, ஒரு நாளைக்குத்தான் அனுஷ்டித்துப் பார்ப்போமே! சத்திய அரிச்சந்திரன் பிறந்த இந்த நாட்டில் ஒரு நாளைக்குப் பொய் சொல்லாமல் இருப்பது அவ்வளவு கஷ்டமான காரியமா, என்ன? பார்த்து விடுகிறேன். இன்றைக்கு நம் தலை போனாலும் போகட்டும்; பொய் சொல்லுவதில்லை; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதில்லை.

## காலை 10 மணி

[ஷோக்முல் சேட் வருகிருன்.]

ஷோக்: அரே, ராம், ராம், க்யோன் ஹை அந்தர்! ராம், ராம்!

கிரு: யாரடா அது, சத்தம் போடுகிறது?

ஷோக்: அரே ராம், ராம். நாம்தான் சேட் வந்திருக்கான்.

கிரு: உனக்கு வேறே வேலை இல்லையா! நான் ஆபீசுக்குப் போகிற சமயம் பார்த்துக் கழுத்தை அறுப்பது தான் வேலையா?

ஷோக்: அரே, நிம்பளுக்கு ஏன் இப்படி மூக்குக்கு மேலே கோபம் வரான்?

கிரு: நிம்பள், நம்பள் எல்லாம் இருக்கட்டும். வந்த காரியம் என்னப்பா, சொல்லித் தொலை.

ஷோக்: அரே க்யா, நம்பள் நிம்பளைத் தேடிக்கிட்டு ஏன் வந்தான் என்று நிம்பளுக்குத் தெரியாது? நிம்பள் கொடுக்கவேண்டிய பணத்துக்காகத்தான் வந்தான். வேறு எதற்காக வருகிருன்? நிம்பள் என்ன சொல்ருன்! வழக்கம்போல் சால்ஜாப்பு சொல்ருன்? பணம் கையில் இல்லை யென்று பொய் சொல்ருன்?

கிரு: நான் எதற்காகப் பொய் சொல்லுகிறேன்?

ஷோக்: அரே, நிம்பள் இதுவரை பொய்யே சொன்னதில்லை! நிம்பள் பணம் இல்லேன்னு பொய் சொல்லிப் பொய் சொல்லி நம்பள் காலை உடைச்சுப் பூட்டான்.

கிரு: அது என்னமோ. இன்றைக்கு நான் தலை போனலும் பொய் சொல்லுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறேன். ஆகையால் உண்மையைக் கூறி விடுகிறேன். இன்று என்னிடம் பணம் இருக்கிறது.

ஷோக்: அப்படியானல் நம் கணக்கைத் தீர்க்கிறான்.

[கணக்குப் புஸ்தகத்தைத் திறக்கிறான்.]

கிரு: கணக்காவது தீர்ப்பதாவது! அதெல்லாம் ஒன்றும் கிடையாது.

ஷோக்: க்யோன்?

கிரு: ஏனா? நான் உனக்குப் பணம் கொடுக்காமல் ஏமாற்றலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். அதனல்—

ஷோக்: அரே, க்யா! நிம்பள் நம்பளை ஏமாத்திப் பூடுவான்?

கிரு: ஆம். நான் இன்னும் இரண்டு மாசத்தில் பம்பாய்க்குப் போகப் போகிறேன். இனிமேல் மெட்ராஸுக்கே திரும்பப் போவதில்லை. அதனல் தான் சால்ஜாப்புச் சொல்லிக் கொண்டே வந்தேன். இன்னும் சால்ஜாப்பு சொல்லத்தான் போகிறேன்.

ஷோக்: அப்படினா, நம்பள் நிம்பள் வூட்டை ஜப்தி பண்ணிப் போடுறான்.

கிரு: நம்பள் வீடா? எது அப்பா நம்பள் வீடு?

ஷோக்: இந்த வூடுதான். இது நிம்பள் வூடு என்று நிம்பளே சொல்லி யிருக்கான்.

கிரு: அட பைத்தியமே! இது என் வீடு அல்ல, அப்பா. உன்னிடமிருந்து பணம் வாங்குவதற்காக அப்படிப் பொய் சொன்னேன்—

ஷோக்: அப்ப நிம்பள் தஸ்தாவேஜு காண்பித்தது?

கிரு: அதுவும் பொய்தான்.

ஷோக்: அரே, சோர்! அப்படியா சமாசாரம்? இதோ நிம்பள் காலை முறிக்காட்டா நம்பள் பேர் ஷோக்மூல் சேட் இல்லே.

[கிருஷ்ணசாமி அய்யர் மீது சேட் பாய்ந்து தன் கையில் இருந்த தடியால் அவர் தலைமீது அடிக்கிறான். அய்யரும் திருப்பி அடிக்கிறார். கூட்டம் சேர்கிறது. கடைசியில் சண்டைக்காரர்கள் விலக்கப்படுகிறார்கள்.]

எல்லாரும்: என்ன ஸ்வாமி! என்ன சமாசாரம்?

கிரு: சமாசாரமா! மடையன்! நான் சத்தியம் சொன்னேன் என்று துளிக்கூடச் சந்தோஷப்படாமல், என்னைத் தடி கொண்டு தாக்கிவிட்டான்! சீ! இது என்ன உலகம்! சத்தியம் சொன்னதற்காக அடியா? இருக்கட்டும். இதற்காக நான் என் பிரதிக்ஞையை மட்டும் கைவிடப் போவதில்லை.

## பகல் 12 மணி

[கிருஷ்ணசாமி அய்யர் தம் ஆபீஸில் மானேஜருக்கு முன்னால் நின்று கொண்டிருக்கிறார்.]

மானேஜர்: என்ன ஐயா இது? வர வர நீர் வேலை செய்கிற லட்சணம் துளிக்கூட நன்றாயில்லை. நேற்று இரண்டு தபால் பாக்கி வைத்துவிட்டீராமே, என்ன சொல்லுகிறீர்?

கிரு: இரண்டு தபால்தானே! என்னமோ பிரமாதப் படுத்துகிறீர்களே?

மானே: பிரமாதப் படுத்துகிறேனா? இரண்டு தபால் என்றால் சும்மாவா இருக்கிறது?

கிரு: அடே யப்பா? இதற்கு முன்னால் முப்பதும், நாற்பதும் பாக்கி வைத்திருக்கிறேன். அதற்கெல்லாம் ஒருவரும் ஒன்றும் சொன்னது கிடையாது—

மானே: என்ன, முப்பது, நாற்பதா? ஒரு நாளைக்கா?

கிரு: ஆம், ஒரு நாளைக்குத்தான்! பின் நான் என்ன பொய் சொல்லுகிறேன் என்று நினைக்கிறீர்? ராமலிங்க

சுவாமிகள் பாடல் தாங்கள் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்—

மானே: ஓய்! பாட்டெல்லாம் இருக்கட்டும். தபால் தான் இப்படி ஊழல் என்றால் நீர் பணம் கணக்கு வைத்துக்கொண்டிருப்பதும் அப்படித்தான் இருக்கிறது. இதோ பாரும், கணக்கை! பெட்டியில் இருக்கும் பணம், கணக்குக்கு ஒரணா குறைகிறது. ஏன் ஐயா இப்படி?

கிரு: யார் கண்டார்கள்? ஒரு வேளை பொடி மட்டைக்காக நான் எடுத்துக் கொண்டிருப்பேன். அதைப் போட்டு விட்டால் கணக்கு சரியாய்ப் போகிறது. அவ்வளவுதானே! இந்தாரும் ஒரணா.

[ஒரணா கொடுக்கிறார்.]

மானே: என்ன ஐயா இது? ஆபீஸ் என்று நினைத்துக் கொண்டீரா, உம்முடைய வீடு என்று நினைத்துக் கொண்டீரா? ஆபீஸ் பணத்தைக் கையாண்டது மல்லாமல் விளையாட வேறு செய்கிறீரா?

கிரு: கையாண்டு விட்டேனா! (சிரிக்கிறார்) ஒரணாவுக்கு இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறீர்களே, இதற்கு முன்னால் நான் ஐம்பதும், நூறும் எடுத்துக் கொண்டிருப்பது தெரிந்தால் என்ன சொல்வீர்களோ?

மானே: ஐம்பதும், நூறுமா? என்ன? உமக்குப் பைத்தியம், கியித்தியம் பிடித்து உளறுகிறீரா? அல்லது நீர் சொல்வது எல்லாம் நிஜந்தானா?

கிரு: எனக்குப் பைத்தியமும் இல்லை, ஒன்றும் இல்லை. இரண்டுமூன்று தடவை கொஞ்சம் பணம் வேண்டியிருந்தது. அதற்காக ஆபீஸ் பணத்தை எடுத்துக் கொண்டேன். அப்புறம் எனக்குச் சம்பளம் வந்ததும் என் கையிலிருந்து போட்டு விட்டேன். உமக்குச் சந்தேகமாயிருந்தால் காஷியரை வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள்.

மானே: அப்படியா சமாசாரம்! உம்மை இனியும் ஒரு கணம் இங்கே வைத்துக் கொண்டால் இந்த ஆபீஸ்

உருப்பட்டாற் போலத்தான். மேல் அதிகாரிகளுக்கு ரிபோர்ட் பண்ணி, உம்மை டிஸ்மிஸ் பண்ணச் சொல்லு கிறேன். அது வரையில் நான் உம்மை 'ஸஸ்பெண்ட்' பண்ணி யிருக்கிறேன், போம்!

கிரு: அவ்வளவுதானே! [போகிறார்.]

## மாலை 2 மணி

[கிருஷ்ணசாமி அய்யரும் அவர் சம்சாரம் லட்சுமி அம்மாளும்.]

லட்சுமி: இது என்ன கூத்தா யிருக்கிறது? காலம் பர சேட்டோடு சண்டை பிடித்துத் தலையில் காயம். இப்ப என்னடான்னு உத்தியோகத்தைத் தொலைத்துக்கொண்டு வந்து நிற்கிறேள்!

கிரு: என்னடீ உளறுகிறே? ஒத்தன் நிஜத்தைச் சொன்னேன் என்று சந்தோஷப் படமாட்டானே! சத்தி யம் சொன்னதற்காக உத்தியோகத்திலிருந்து 'ஸஸ் பெண்டு' பண்ணி விட்டான்.

லட்சுமி: சத்தியமாவது, சஸ்பெண்டாவது, எனக்கு ஒன்றும் புரியவில்லையே.

கிரு: உனக்கு ஏன் புரியும்? உள்ளத்தைச் சொன் னல் நொள்ளைக் கண்ணுக்கும் நோப்பாளம் வரும். ஆமாம், அது இருக்கட்டும், பேசும்போது மூஞ்சியை எதற்காகக் குரங்கு மாதிரி வைத்துக் கொள்ளுகிறாய்?

லட்சுமி: என் மூஞ்சியைப் பார்த்தால் குரங்கு மாதிரி இருக்கிறதா?

கிரு: பின் சந்தேகமா? உன் அழகைப் பற்றிய உண்மையைக் கூறினல் உனக்கும் கோபம் வரும். உன் முகம் குரங்குபோலிருக்கிறது; உன் குரல் கழுதைக் குரல் போலிருக்கிறது—

லட்சுமி: போதும், போதும், நிறுத்துங்கள். அப்படி என்னைக் கண்டால் பிடிக்காதவர் வேறு யாரையாவது கட் டிக்கொண்டு அழுவதுதானே?

கிரு: அழாமல் என்ன? அதுவும்....

லட்சுமி: அட பாவிப் பிராம்மணா! அப்படியா சமாசாரம்? அது தான் சம்பளப் பணத்தைச் சரியாக வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதில்லை! ஐயோ! இனிமேல் ஒரு கணமும் உம்முடன் நான் குடித்தனம் பண்ண முடியாது. நல்ல வேளையாகச் சாயந்திரம் அப்பா வருகிறேன் என்று எழுதி யிருக்கிறார். அவருடன் நான் போய்ச் சேர்கிறேன் ஊருக்கு.

கிரு: நல்ல வேளையில் போய்த் தொலை. நானும் கொஞ்ச நாளாவது அக்கடா என்று இருப்பேன்.

லட்சுமி: ஐயையோ! நாலு குழந்தைகள் ஆச்சு, இப்ப வந்து உமக்கு புத்தி இப்படி விபரீதமாய்ப் போய் விட்டதே! ஐயோ! நான் என்ன பண்ணுவேன்!

### மாலை 4 மணி

[கிருஷ்ணசாமி அய்யர் வெளியில் புறப்படும் சமயம். அந்தச் சமயம் பார்த்து அவர் மாமனார் வருகிறார்.]

மாமனார்: என்ன மாப்பிள்ளை, சௌக்கியந்தானா? எங்கேயோ அவசரமாக வெளியில் போய்க்கொண் டிருக்கிறாப்போ லிருக்கிறது. இன்னும் கொஞ்சம் நாழி கழித்து வந்திருந்தால் தங்களைப் பார்த்திருக்க முடியாது.

கிரு: இப்பவும் தங்களைச் சந்திக்க வேண்டாமென்று தான் நான் அவசரம் அவசரமாக வெளியில் கிளம்பிக் கொண்டிருந்தேன். அதற்குள் வந்து தொலைத்து விட்டீர்!

மாம: வந்து தொலைத்து விட்டேனா! ரொம்ப அழகா யிருக்கிறதே வார்த்தை! புறப்பட்டு வா, புறப்பட்டு வா என்று நீங்கள் கடிதம் எழுதியதனால் தானே நான் வந்தேன்?

கிரு: கடிதமா! எல்லாம் உங்கள் பெண் வாய்க்குப் பயந்து கொண்டுதான் அப்படிக் கடிதம் எழுதினேன்! இல்லாவிடில் தங்கள்மீது எனக்கு என்ன பிரியம்? இதோ இப்படிப் பாரும். இன்றைக்கு நான் பொய் சொல்லுவ

தில்லை என்று சத்தியம் பண்ணி யிருக்கிறேன். ஆகவே உண்மையைக்கூறி விடுகிறேன். உம்மைக் கண்டால் எனக்குத் துளிக்கூடப் பிடிப்பதில்லை. ஆகவே தாங்கள் இனி மேல் இங்கு தலை காட்ட வேண்டியதில்லை.

மாம: காட்டினால் என்ன பண்ணுவீர்?

கிரு: காட்டினால் கழுத்தைப் பிடித்துத்—

மாம: அட பாவிப் பயலே! உனக்கு இத்தனைத் துணிச்சலா! அடி லட்சுமி! இங்கே வா. உன் ஆம்படையான் எனக்கு வைத்திருக்கும் மரியாதையைப் பார்த்தாயோ, இல்லையோ?

[லட்சுமி வருகிறாள்.]

லட்சு: அப்பாவா! வாங்கோ அப்பா! எப்ப வந்தேள்?

மாம: அது இருக்கட்டும். உன் ஆம்படையான் சொன்ன வார்த்தையைக் கேட்டாயோ, இல்லையோ!

லட்சு: என்ன சொன்னார்?

மாம: என்ன சொன்னரா! நான் இனிமேல் இங்கு தலை காட்டக் கூடாதாம். காட்டினால் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவாராம்.

லட்சு: ஐயையோ! அப்படியா சொன்னார்! நான் அப்பவே நினைத்தேன். அவருக்குச் சரியாகப் பைத்தியம் தான் பிடித்திருக்கிறது. நான் வேறு அழகாயில்லையாம், அதற்காக வேறு எவளையோ கட்டிண்டு அழுகிறாராம்....... ஐயோ, அப்பா! என்னால் இனிமேல் ஒரு கணமும் இந்த வீட்டில் இருக்க முடியாது. நான் உங்களுடன் இப்பொழுதே புறப்பட்டு வந்து விடுகிறேன். [போகிறாள்.]

## மாலை 6 மணி

கிரு: சீ, சீ, சீ! என்ன உலகம், என்ன மனிதர்கள்! ஒருவன் ஒரு நாளைக்குப் பொய் சொல்ல வேண்டாமென்று பார்த்தால் இத்தனை திண்டாட்டமா! எல்லாரும் ஜம்ப

மாகப் புஸ்தகத்தில் எழுதி விடுகிறார்கள், உண்மை பேசி இவன் முன்னுக்கு வந்தான், சத்தியமாய் நடந்து அவன் முன்னுக்கு வந்தான் என்று. கடைசியில் ஒருவனாவது உண்மை சொன்னதற்காக நம்மை மெச்சிக் கொண்டானா? கிடையாது. சீ சீ சீ....உண்மையாவது, பேசுவதாவது! அதெல்லாம் நடக்காத காரியம்........சரி. அது தான் சரி. ஒரு கடிதம் எழுதி லட்சுமிக்குப் போட்டு விடுகிறேன் :—

என் ஆருயிர்க் காதலி லட்சுமிக்கு,

இப்பவும் இன்று எனக்கு ஏதோ பயித்தியம் பிடித்துவிட்டது என்றுதான் தோன்றுகிறது. இல்லாவிடில் மயிலைப் பழிக்கும் குயிலும், குயிலைப் பழிக்கும் மயிலும் (சீ சீ...சரியாக வரவில்லை போலிருக்கிறதே)—மயிலைப் பழிக்கும் குரலும் குயிலைப் பழிக்கும் சாயலும் உள்ள—(தூ ! இதுவும் சரி இல்லை)—மயிலைப் பழிக்கும் சாயலும், குயிலைப் பழிக்கும் குரலும் உள்ள உன்னை—

[திரை விழுகிறது.]

# சோக சிகரம்

"இப்படி ஹாஸ்யமாகவே எழுதிக் கொண்டிருந்தால் நீ என்றைக்குத்தான் பெரிய எழுத்தாளராகிறது?"

எனக்கு மிகவும் ஆப்தமான என் நண்பர் ஸ்ரீ ராதா கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் என்னைப் பாத்து இப்படியே தான் கேட்டுக் கொண்டிருக்கிறார். சோக ரஸம் எழுதத் தெரிந்தவர்கள்தான் பெரிய எழுத்தாளர்கள் என்பது அவர் துணிபு.

"நேயர்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்து அவர்கள் வயிறு புண்ணாகும்படி செய்யும் எழுத்தாளர்களைக் காட்டிலும், அவர்களைக் கதறக் கதற அழ வைத்துக் கண் வீங்கும்படி செய்யும் எழுத்தாளர்கள்தான் பெரிய எழுத்தாளர்கள், ஞாபகமிருக்கட்டும்!" என்பார்.

"எப்படியோ ஒருவிதத்தில் நேயர்களை ஹிம்சிப்பதுதான் எழுத்தாளர்களின் நோக்கமென்றால் அது வயிற்று வலியாய் இருந்தால் என்ன, கண் வலியாய் இருந்தால் என்ன!" என்று நான் பதில் கேட்பேன்.

இருந்தாலும் நண்பர் விடமாட்டார். நச்சரித்துக் கொண்டேயிருப்பார். அவர் நச்சரிப்புப் பொறுக்காமல் அழுகைக் கதைகள்தான் எழுத ஆரம்பிக்கலாமாவென்று ஒவ்வொரு சமயம் என் இளகிய மனதிற்குத் தோன்றும்.

ஆனால் கொஞ்ச காலமாக, சோக ரஸக் கதையென்றால் அதைப்பற்றி நினைக்கவும் எனக்கு நடுக்கமாய் இருக்கிறது. அதற்குக் காரணம் சோகரஸக் கதைகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் விளங்கும் "சோக சிகரம்" என்னும் கதைதான்.

இக் கதையை எழுதிய சோகரஸ சோணாசலம் அவர்களைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று

நினைக்கிறேன். சோகரஸக் கதைகள் எழுதுவதில் அவர் பலே கெட்டிக்காரர். அவர் கதைகள் எல்லாம் அமாவாசை இரவில், இடியும், மழையும், மின்னலும், தும்மலுமாய்த்தான் ஆரம்பிக்கும். கதையில் வரும் கதா பாத்திரங்களில் பாதிப்பேருக்குமேல், பிறரால் கொல்லப்படுவார்கள், அல்லது தாங்களாகவே தூக்குப் போட்டுக் கொண்டோ, மோட்டாரில் அகப்பட்டோ, ஆற்றில் விழுந்தோ, அல்லது வியாதியுற்றோ இறந்து விடுவார்கள். எஞ்சியுள்ள பாத்திரங்கள், கதை முடியும் சமயத்தில் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பார்கள், அல்லது கண்ணீர் தேங்கிய விழிகளுடன் ஜன்னல் வழியாக வெளியில் எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

சோகரஸ சோணாசலம் அவர்களின் கதைகளை வாசிக்கு முன்னர் நேயர்கள் முன் ஜாக்கிரதையாக ஒரு டஜன் கைக் குட்டைகளையோ, அல்லது நான்கு மேல் துண்டுகளையோ தயாராக எடுத்து வைத்துக் கொள்வது வழக்கம். ஸ்திரீ நேயர்களா யிருந்தால் புடவைத் தலைப்பைத் தயாராக எடுத்து வைத்துக் கொள்வார்கள். கதை வாசிக்கும்போது கடல் மடை திறந்தாற்போல் கண்களிலிருந்து வரும் ஜலத்தை இத் துணிகளினால் துடைத்து, பிறகு துணிகளை அப்படியே பிழிந்து உலரப் போட வேண்டி யிருக்கும்.

சோகரஸ சோணாசலம் அவர்களின் சோகரஸக் கதைகளினால் நேயர்களின் கண்கள் வீங்கிக் கொண்டே போக, கண் வைத்தியர்களின் பாடு கொண்டாட்டமாகிக் கொண்டு வந்தது. கண் வைத்தியர்கள் சோகரஸ சோணாசலம் அவர்களுக்கு ரகசியமாகக் கமிஷன் கொடுத்து வந்தனர் என்று சொல்லிக் கொண்டார்கள். இது எவ்வளவு தூரம் உண்மையோ எனக்குத் தெரியாது.

ஒரு மாதத்துக்கு முந்தி இருக்கும். என்ன காரணமோ தெரியவில்லை, திடீரென்று சோகரஸ சோணாசலம் அவர்களுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. "உலகத்திலேயே இதைப்போன்ற சோகரஸக் கதை இதுவரை எழுதப்

பட்டது மில்லை, இனிமேல் எழுதப் படப்போவதுமில்லை" என்று எல்லோரும் சொல்லும்படி ஒரு சோகரஸக் கதை எழுத வேண்டுமென்று ஆசை தோன்றியது. வெகு நாள் சிரமப்பட்டு, மூளையைக் குழப்பி யோசித்தார். உலகத்தில் உள்ள எல்லா சோகத்தையும் அப்படியே ஒரே கதையில் பிழிந்து கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தார். கதையில் வரும் கதாபாத்திரங்கள் எல்லாரையும் கதை முடிவுக்குள் கொல்லுவது தான் இதற்குச் சரியான வழி என்ற முடிவுக்கு வந்து சோக சிகரம் என்னும் அக்கதையை எழுதத் தொடங்கினர்.

கதையில், ஒரு குற்றமும் அறியாத அண்ணுமலை என்னும் இளைஞனை எதிர்த்த வீட்டுக்காரர் "நான் உன்னைக் கொல்லா விட்டால் பார்" என்று விளையாட்டுக்குக் கோபித்துக் கொள்கிறார். இந்த வார்த்தை பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும் அண்ணுமலையின் தாயார் காதில் விழுந்து விடுகிறது. அவ்வளவுதான். உடனேயே அவள் மூர்ச்சித்துக் கீழே விழுந்து உயிர் விடுகிறாள். இதைக் கண்ட இளைஞனின் தகப்பனருக்குப் பயித்தியம் பிடிக்க அவர் பாயைச் சுரண்ட ஆரம்பிக்கிறார். கடைசியில் பக்கத்தில் உள்ள நதியில் (ஆழமாக உள்ள இடமாகப் பார்த்து) விழுந்து உயிர் விடுகிறார். இதை யெல்லாம் கேள்வியுறும் இவ்விளைஞனின் தங்கைக்குக் கர்ப்பச் சிதைவு ஏற்படுகிறது. உடனே அவள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட, அங்கு ஐந்தாறு நாளைக்கெல்லாம் கண்ணை மூடுகிறாள்.

இதையெல்லாம் பார்த்த இளைஞனுக்கு இருதயம் உடைந்து விடுகிறது. ஒரு அமாவாசை இரவாகப் பார்த்துத் தற்கொலை புரிந்துகொண்டு உயிர் விடுகிறான்.

அடுத்த அமாவாசை தினம் இதற்கெல்லாம் காரணமான எதிர்த்த வீட்டுக் காரருக்குத் தூக்கமே வரவில்லை. இத்தனை நாளாக நிம்மதியாகத் தூங்கியவர் அன்று தூங்காமல் படுக்கையில் புரள ஆரம்பிக்கிறார். ஒரு குடும்பமே பூண்டு இல்லாமல் அழிந்ததற்குத் தாம்தான் காரணம்

என்ற ஞாபகம் அவரைப் பிடித்து வாட்டுகிறது. அடுத்த கணம் அவர் மாரடைப்பினால் கீழே விழுந்து சாகிறார்.

கதையை எழுதி முடித்ததும் சோகரஸ சோணாசலம் தாம் எழுதிய கதையை முதலிலிருந்து கடைசிவரை ஒரு தரம் படித்துப் பார்த்தார். எதிர்த்த வீட்டுக்காரர் மாரடைப்பினால் கீழே விழுந்து செத்தார் என்னும் கடைசி வரி வந்ததும், கதையில் இருந்த சோகரஸத்தைச் சோணாசலம் அவர்களாலேயே தாங்க முடியவில்லை. அவரும் மாரடைப்பினால் கீழே விழுந்து உயிர் விட்டார்.

இதைக் கண்ட சோணாசலத்தின் மனைவிக்கு விஷயம் ஒன்றும் புரியவில்லை. தன் புருஷன் கையில் இருந்த கதையை அவள் பிடுங்கி வாசிக்க ஆரம்பித்தாள். அதில் அண்ணாமலையின் தங்கைக்குக் கர்ப்பச் சிதைவு ஏற்படும் கட்டம் வந்ததும் இவளுக்கும் கர்ப்பச் சிதைவு ஏற்பட ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு ஐந்தாறு நாளைக்கெல்லாம் கண்ணை மூடினாள்.

இதைக் கண்ட சோணாசலத்தின் நண்பர் திகைத்துப் போய்விட்டார். திடீரென்று தம் நண்பர் உயிர் விட்டதன் காரணம் அவருக்குப் புலப்படவில்லை. உடனே தாமும் அக்கதையைப் படித்துப் பார்க்க ஆரம்பித்தார். அண்ணாமலையின் தகப்பனார் பயித்தியம் பிடித்துப் பாயைச் சுரண்ட ஆரம்பிக்கும் கட்டம் வந்ததும் இவரும் பயித்தியம் பிடித்துப் பாயைச் சுரண்ட ஆரம்பித்தார்.

இப்படியாகத் தானே இக்கதையை வாசித்தவர்களில் சிலர் பிரக்ஞை தவறிக் கீழே விழுந்தார்கள். சிலர் பயித்தியம் பிடித்துப் பாயைச் சுரண்டினார்கள். சிலர் மாரடைப்பினால் மரண மடைந்தார்கள். கதையை வாசித்த கர்ப்ப ஸ்திரீகள் எல்லாருக்குமே ஆஸ்பத்திரியில் குறைப் பிரசவம் ஆக, ஐந்தாறு நாளைக்கெல்லாம் கண்ணை மூடினார்கள். இந்த ஸ்திதியில் இக்கதை பத்து நாளில் ஒரு ஊரையே அழித்துவிட்டது.

இதைக் கண்டதும் பக்கத்து ஊர்க்காரர்கள் நடு நடுங்கிப் போனார்கள். உடனே டில்லி சர்க்காருக்குத் தகவல்

தெரிவிக்கப்பட்டது. அவர்கள் உடனே அமெரிக்குத் தந்தியடித்தார்கள். அமெரி ஓடிப் போய்ச் சர்ச்சிலைப் பார்த்தார். விவரம் முழுவதையும் கேட்டதும் சர்ச்சிலின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. தமக்கு இருந்த சந்தோஷத்தில் தம் வாயில் இருந்த சுருட்டை எடுத்து அமெரி வாயில் வைத்தார். உடனே ஓடிப் போய் வைசிராய்க்கு ஒரு தந்தி யடித்தார்.

அடுத்த நாளே ஒரு போலீஸ் பட்டாளம் வந்து இக்கதையின் கையெழுத்துப் பிரதியைக் கைப்பற்றிச் சென்றது. மறு நாளே இக்கதை ஜெர்மன் பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு ஹிட்லருக்கு அனுப்பப்பட்டது.

ஹிட்லர் இக்கதையை இன்னும் வாசித்ததாகத் தெரியவில்லை. இருந்தாலும் சர்ச்சிலும் தம் நம்பிக்கையைக் கைவிட்டு விட்டதாகத் தெரியவில்லை. என்றைக்காவது ஒருநாள் ஹிட்லர் கட்டாயம் இக்கதையை வாசிக்கத்தான் போகிறார், அப்பொழுது ஒவ்வொருவராக எல்லா ஜெர்மானியரும் மாரடைப்பினால் மரண மடையத்தான் போகிறார்கள், ஜெர்மனி அழியத்தான் போகிறது என்று சர்ச்சிலும், நேச தேசத்தினரும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் ஹிட்லரை முறியடிப்பதற்கு இத்தனை எளிய வழி கண்டு பிடித்துக் கொடுத்ததற்காக இக்கதையின் ஆசிரியருக்குச் சேர வேண்டிய விக்டோரியா பதக்கத்தைக் கொடுப்பதற்காகச் சோகரஸ சோணாசலத்துக்கு யாராவது சொந்தக்காரர்கள் இருக்கிறார்களா என்று விசாரித்து வருகிறார்கள்.

இப்பொழுது நீங்களே சொல்லுங்கள்! நானும் சோகரஸக் கதை எழுதிச் சோணாசலம்போல் ஆகவேண்டும் என்கிறீர்களா, அல்லது வழக்கம்போல் ஹாஸ்யமே எழுதி உயிர் பிழைத்துக் கொண்டிருக்கட்டுமா!

○☆○

# இடி பாதை

கொஞ்ச நாளாக என் நண்பர்களுக்கு என்னைப் பற்றி ஒரு சந்தேகம். இத்தனை நாளாக வேஷ்டி, ஜிப்பா, ஜவாஹர் வெயிஸ்ட் கோட்டுடன் காணப்பட்ட நான் கொஞ்ச நாளாக சூட், பூட், ஹாட் இந்தக் கோலத்துடன் காணப்படுவது ஏன் என்று அவர்களுக்குப் புரியவில்லை. எனக்கு மிகவும் ஆப்தரான ஒருவர், "என்னடா இது! ஆளே அடையாளம் தெரியவில்லையே! ஏதாவது பகல் வேஷமா?" என்று கூடக் கேட்டுவிட்டார்.

ஆகவே உண்மையைச் சொல்லிவிடுகிறேன். இது பகல் வேஷமும் இல்லை, இரா வேஷமும் இல்லை; **மாறு வேஷம்!** முன் காலத்தில் அரசர்கள் மாறுவேஷம் பூண்டு நகர சோதனை செய்யக் கிளம்புவார்கள், என்று கேள்விப் பட்டிருப்பீர்களே! அதைப்போலவே நானும் இந்த மாறு வேஷம் பூண்டு சென்னை நகர் சோதனை செய்யப் புறப்பட்டிருக்கிறேன்.

ஞாபகம் இருக்கட்டும். நான் போட்டுக் கொண்டு வரும் உடை மாறு வேஷம். நீங்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டாலும், தயவு செய்து அடையாளம் தெரியாததுபோல் பாசாங்கு செய்யுங்கள். (இதற்காக எனக்குப் பணம் கொடுக்கவேண்டியவர்களும் இப்படிச் சொல்லி விடாதீர்கள்!)

முதல் முதலாக நடை பாதைகளைப் பற்றி எழுதலாம் என்று பார்க்கிறேன். எங்கேயாவது நடந்துபோக வேண்டுமானால் இந் நடை பாதைகளைத் தானே உபயோகிக்க வேண்டியிருக்கிறது?

"ரஸ்தா யாருக்குச் சொந்தம்?—பாதசாரிக்கா, மோட்டார் யமனுக்கா?" சென்னையில் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் இந்தச் சர்ச்சை ரொம்ப காலத்துக்கு

முன்னரே, உலகத்தின் பெரிய பெரிய நகரங்களில் ஏற்பட்டுவிட்டது. யாரும் தீர்ப்புக் கொடுக்க முன் வராமற் போகவே, பாதசாரிகளும் மோட்டார் யமன்களும், "எனக்காச்சு, உனக்காச்சு" என்று மோதிக் கொள்ளத் தலைப் பட்டனர். இந்த மோதலில் பாதசாரிகள் தான் தோற்றனர் என்று கூற வேண்டியதில்லை.

இதைப் பற்றி வேடிக்கையாக ஒரு கதை சொல்வதுண்டு. ஒரு சமயம் லண்டனில் சிலர் ஓர் ஆஸ்பத்திரிக்காக நன்கொடை வசூலித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒரு மோட்டார் காரரை அணுகிப் பணம் கேட்டதற்கு, "நான்தான் வழக்கமாக ஆஸ்பத்திரிக்கு அனுப்பிக் கொண்டு வருகிறேனே" என்று அவர் பதில் அளித்தார். அதற்கு இவர்கள், "வழக்கமாகப் பாதசாரிகளை அங்கு அனுப்பிக்கொண்டிருப்பது தெரியும். பணம் அனுப்பவில்லையே!" என்றார்களாம்.

நிலைமை இவ்வளவு மோசமாகப் போகவே அதிகாரிகள் இதைப் பற்றி யோசித்தனர்.

"துஷ்டனைக் கண்டால் தூர விலகு" என்று தீர்மானித்தார்கள். ரஸ்தாவை மோட்டார்காரர்களுக்கு விட்டு விட்டுப் பாதசாரிகளுக் கென்று தனியாக நடைபாதை அமைத்தார்கள். ஜனங்களும் நடை பாதையிலேயே நடக்க ஆரம்பித்தார்கள்.

சென்னை நகரில் நடை பாதைகள் ரொம்ப காலமாகவே இருக்கின்றன. ஆனால் ஜனங்கள் அவற்றில் கொஞ்சகாலமாகத்தான் நடக்க ஆரம்பித்திருக்கிறார்கள்—அதாவது நடக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

பாதசாரிகளுக்கென்று தனியாக ஓர் இடம் கிடைத்து விட்டதே, ஹாய்யாக நடந்து செல்லலாம் என்று நினைக்கிறீர்களோ? அதுதான் கிடையாது.

நான் அன்று அப்படித்தான் நினைத்து நடந்துகொண்டிருந்தேன். திடீரென்று 'டங்' கென்று ஏதோ மோதவே

என்ன வென்று பார்த்தேன். எலெக்டிரிக் கம்பம்! "என்ன ஸார்! நடை பாதை முழுவதும் உமக்குச் சொந்தம் என்று நினைத்துக் கொண்டு விட்டீரோ! பார்த்து நடவும்!" என்று அது என்னைப் பார்த்துக் குறும்புத்தனமாகச் சிரிப்பதுபோல் தோன்றிற்று.

"எலெக்டிரிக் கம்பத்துக்கு உள்ள பாத்தியதை எனக்கும் உண்டு. இந்தாரும் ஒரு டங்!" என்று இரண்டு நிமிஷத்துக்கு அப்பால் மோதிற்று "பஸ்கள் நிற்குமிடம்" என்று போட்டிருக்கும் கம்பம். நடை பாதையில் நடக்கும் பாதசாரிகள் இக் கம்பத்தின் மீது மோதிக் கொண்டு, அங்கேயே கொஞ்ச நேரம் நிற்கவேண்டி யிருக்கிறதாகையால், இந்த போர்டைப் "பாதசாரிகள் நிற்குமிடம்" என்று மாற்றி எழுதினாலும் பொருந்தும் என்று தோன்றுகிறது.

இதுபோதாதென்று சென்னை நகர சபையார் சிமிட்டியினால் குப்பைத் தொட்டிகள் கட்டி, அவற்றிற்கு அலங்காரமாக வெண் பட்டை, கறும் பட்டை அடித்து, மிகவும் சிரமப் பட்டு, நடை பாதைகளின் மையத்தைக் கண்டு பிடித்து அந்த மையத்தில் பாதையை அடைக்கும்படி இக்குப்பைத் தொட்டிகளை வைத்திருக்கிறார்கள்.

இந்தக் குப்பைத் தொட்டிகள், இன்னும் ரோடு ரிப்பேருக்காக அங்கங்கே குவிக்கப்பட் டிருக்கும் ஜல்லிகள், தபால் பெட்டிகள், எப்பொழுதும் பூட்டும் சாவியுமாக விளங்கும் "மேயர்ஸ் பம்பு"கள், இன்னும் அங்கங்கே ஆனந்தமாக நித்திரை செய்து கொண்டிருக்கும் பிச்சைக்காரர்கள், இதை யெல்லாம் தாண்டிச் செல்ல வேண்டுமானால், ஒரு 'ஹை ஜம்ப்'பின் றி முடியாது.

சிறு வயதில் 'டிரில்' வாத்தியாருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு ஓடியதெல்லாம் எவ்வளவு பிசகு என்பது சென்னையின் நடை பாதைகளில் நடந்து பார்த்தால்தான் தெரியும். ஏனெனில் மேலே சொன்னபடி 'ஹை ஜம்ப்' வித்தை தெரிவதுடன் 'லாங் ஜம்ப்' வித்தையும் தெரியவேண்டி யிருக்கிறது.

உயரத் தாவிக் குதிக்க மட்டும் தெரிந்தால் போதாதா, அகலத் தாவிக் குதிக்கவும் தெரிய வேண்டுமா என்று கேட்கிறவர்கள், தயவு செய்து என்னுடன் பெல்ஸ் ரோட் முனைக்கு வாருங்கள். எங்கே 'லாங் ஜம்ப்'பின் தயவில்லாமல் நடை பாதையில் நடவுங்கள் பார்க்கலாம்!

"என்ன இது? பன்னிரண்டு ரிக்ஷா வண்டிகள் இப்படி குறுக்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவே?" என்று கேட்கிறீர்களோ? சற்று அதோ இருக்கும் போர்டைப் பாருங்கள். என்ன போட்டிருக்கிறது? "6 ரிக்ஷா வண்டிகள் நிற்குமிடம்" என்று போட்டிருக்கிறதா? அதுதான் 12 ரிக்ஷாக்கள் இங்கே நின்று கொண்டிருக்கின்றன.

"நானும் அப்பொழுது முதற்கொண்டே பார்க்கிறேன். என்னைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே! உமக்கு அத்தனை துணிச்சலா? இந்தாரும் ஒரு டங்!" என்று யாரோ சொன்னது கேட்டது. அடுத்த கணமே என் நெற்றியில் ஓர் இடி பட்டது. யார் என்று நினைக்கிறீர்கள்? ஸ்ரீமான் விருக்ஷம் அவர்கள்தான்.

நடை பாதையில் ஏற்கெனவே யுள்ள மரங்கள் போதாவென்று அங்கங்கே இரும்பு வேலிகள் போட்டு, புது மரங்கள் வேறு பயிரிட்டுக் கொண்டு வருகிறார்கள்!

நடை பாதையில் நடக்கக் கற்றுக் கொள்வது மிகவும் நல்லதுதான். ஆனால் நடை பாதைகள் இப்படி இடி பாதைகளாக விளங்கினால் ஜனங்கள் என்ன செய்வார்கள்? பிறந்தது முதற்கொண்டே ரஸ்தாவின் நடுவில் நடக்கும் வழக்கம்தான் நம் ரத்தத்தில் ஊறி யிருக்கிறது. தாத்தாவும் பாட்டியும், "நடுவோட நடந்து வாடா! ஓரமாய்ப் போய் முள்ளையும் கல்லையும் குத்திக்கொண்டு வராதேடா" என்று படித்துப் படித்துச் சொல்லிக் கொடுத்திருக்கும் பாடம் சுலபத்தில் மறந்து விடுமா என்ன?

ஆகவே நடை பாதைகளில் நடந்து செல்லுவதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்தால் நல்லது. இல்லாவிடில் விளக்கில்லாமல் சைகிள் விடுகிறவர்கள் போலீஸ்காரனைக் கண்டதும் சைகிளை நடத்திக் கொண்டும்,

போலீஸ்காரன் தலை மறைந்ததும் சைகிளில் ஏறிப் பறந்து கொண்டும் வருகிறார்களே, அது மாதிரி ஆகிவிடும். போலீஸ் கட்டுப்பாடு குறைந்ததும் ஜனங்களும் நடை பாதை வழக்கத்தை நழுவ விட்டு விடுவார்கள்........

அடடே! நம் பையை யாரோ சோதனை போட்டு பௌண்டன் பேனாவைத் திருடிக் கொண்டு போய்விட்டார்களே? நல்ல நகர சோதனை!

○☆○

# கல்யாணப் பரீட்சை

காமுவுக்காவது, கல்யாணமாவது என்று அவளுடைய பெற்றோர்கள் நிச்சிந்தையா யிருந்துவிட்டனர். இத்தனைக்கும் காமுவுக்கு அழகில்லை, படிப்பில்லை, குணமில்லை என்றெல்லாம் சொல்ல முடியாது.

காமு அழகு என்று சொன்னால் மட்டும் போதாது. அவள் மூக்குக் கண்ணாடி அழகிகூட. அவள் பி. ஏ. பாஸ் பண்ணி ஒரு வருஷமாகிறது. அவளுடைய தகப்பனார் விசுவநாதம்பிள்ளை ஒரு ரிடையர்டு தாசில்தார். அவருக்குக் காமு ஒரே பெண்ணாதலால், அதுவும் அந்திய காலத்தில் அருமையாய்ப் பிறந்தவளாதலால், பிள்ளைவாள் அவளை அவள் இஷ்டப்படி வாசிக்க வைத்தார். பி. ஏ. பாஸ் பண்ணினதும் அவளுக்கு ஒரு நல்ல வரனைப் பார்த்துக் கல்யாணம் செய்வித்து, தம் திரண்ட சொத்தை அவர்கள் இரண்டு பேருக்கும் எழுதி வைக்க வேண்டுமென்பது அவருடைய ஆசை.

ஆனால் அவருடைய ஆசை நிராசையாய்ப் போய் விடுமோ என்று பயப்பட வேண்டியதாய்ப் போய் விட்டது. ஏனெனில் காமு பி. ஏ. பரீக்ஷையை மிகவும் திறமையாகத்தான் பாஸ் செய்தாள். ஆனால் கல்யாணம்தான் நடக்குமோ நடக்காதோ என்ற பெரிய சந்தேகம் அவருக்கு வந்துவிட்டது.

காமுவைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்காக எத்தனையோ பேர் வந்து கேட்டுவிட்டுப் போனார்கள். அவர்கள் எல்லோருக்கும் காமுவைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்குச் சம்மதம்தான். பிள்ளைவாளும் பாதிக் கல்யாணம் ஆகிவிட்டது என்றுதான் நினைத்தார் ஆனால் காமு சம்மதப்படாததால், கல்யாணம் பாதிக் கல்யாணமாகவே நிற்கவேண்டி வந்தது.

இந்த மாதிரி கல்யாணங்களெல்லாம் நின்று போன தற்குக் காமுதான் காரணம்.

சாதாரணமாக நம் கல்யாணங்களி லெல்லாம் மாப் பிள்ளை பெண்ணைப் பார்க்க வருவான். பெண் நாணிக் கோணிக்கொண்டு மாப்பிள்ளைமுன் வந்து நிற்கும். பிறகு ஒருமூலையில் ஆர்மோனியப்பெட்டி வைக்கப்படும்; பெண் அதனண்டை உட்கார்ந்து கொண்டு அழும். பிறகு எதிர் ஜாமீன், வரதக்ஷிணை முதலிய விஷயங்கள் சரிப்பட்டு வந்தால் கல்யாணம் நடக்கும்.

ஆனால் காமு விஷயத்தில் விஷயங்கள் அலாதியாய் நடந்தன. அன்று காலை பத்து மணி யிருக்கும். காமு வைப் பார்ப்பதற்கு ஒருவர் வந்திருந்தார். காமு ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தாள். பெண் பார்க்க வந்தவர் அவளுக்கு எதிரே ஒரு நாற்காலியில் உட்கார்ந் திருந்தார். பக்கத்தில் பிள்ளைவாளும் உட்கார்ந்திருந் தார்.

"ஏன் ஆரம்பிக்கலாமே!" என்றார் பிள்ளைவாள்.

உடனே பெண் பார்க்கவந்தவர் தாம் எழுதி வைத்துக் கொண்டிருந்த பேப்பரிலிருந்து ஏதேதோ கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். அவற்றிற்குக் காமு பதில் சொல் லிக் கொண்டே வந்தாள்.

"எவரஸ்ட் சிகரத்தின் உயரம் என்ன?"

"29002 அடி."

"இப்பொழுது பிரெஞ்சு பிரதம மந்திரி யார்?"

"டிலாடியர்."

"இங்கிருந்து சூரியன் எத்தனை மைல் தூரம்?"

"92,987,400 மைல்."

"1899-ல் இந்தியாவுக்கு வைஸராய் யார்?"

"லார்ட் கர்ஸன்."

"உலகத்திலேயே மிகவும் பெரிய ரயில்வே ஸ்டேஷன் எது? அதில் எத்தனை பிளாட்பாரம்?"

"நியூயார்க் நகரத்தில் கிராண்ட் ஸெண்ட்ரல் டெர்மினல், 47 பிளாட்பாரம்."

"வெனிஸுலாவின் விஸ்தீரணம் என்ன ?"

"352,051 சதுர மைல்."

இவர் கேட்ட இத்தனை கேள்விகளுக்கும் காமு டக்டக் என்று பதில் அளிக்கவே வாலிபர் திகைத்துப் போய் விட்டார்.

"அவ்வளவுதான். நான் தோற்றேன்" என்று சொல்லிவிட்டு அந்த வாலிபர் எழுந்து போய் விட்டார்.

காமு தன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு ஒரு புது விதி ஏற்படுத்தி யிருந்தாள். சில கதைப் புஸ்தகங்களில் வரும் ராஜகுமாரிகள் தங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வரும் ராஜகுமாரர்களை யெல்லாம் கேள்விகள் கேட்பதுண்டு. யார் அவர்கள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம் சரியானபடி பதில் சொல்லுகிறார்களோ, அவர்களைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வது வழக்கம்.

ஆனால் காமுவுக்கு இத்தனை கல்விச் செருக்கெல்லாம் கிடையாது. தன்னைவிட யார் கெட்டிக்காரர்களோ அவர்களைத் தான் கல்யாணம் பண்ணிக்கொள்வது என்று தீர்மானித்திருந்தாள். அதற்காகக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வருகிறவர்களெல்லாம் இவளைக் கேள்விகள் கேட்க வேண்டும். அவர்கள் கேட்கும் ஏதாவது ஒரு கேள்விக்கு இவளால் பதில் சொல்ல முடியவில்லையானால் இவள் அவர்களைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும். இது தான் அவள் கொண்டிருந்த ஒரே ஒரு நிபந்தனை. ஆனால் இது வரையில் யாருக்கும் அவளுக்குத் தெரியாத கேள்வியைக் கேட்க முடியவில்லை.

விசுவநாதம் பிள்ளைக்கு இதெல்லாம் துளிக்கூடப் பிடிக்கவில்லை. பெண் மாத்திரம் பதினெட்டு வயதுக்குக் குறைந்தவளா யிருந்தால் அவளுக்குக் கன்னத்தில் இரண்டு அறை கொடுத்து, அவர் தங்கை மகன் சுந்தரத்

திற்கு அவளைக் கட்டிக் கொடுத்திருப்பார். ஆனால் ரிடையர்டு தாசில்தார் ஆனதால் சட்டம் தெரிந்தவர். 18 வயதுக்கு மேற்பட்ட பெண்ணை அடக்கி யாளத் தமக்கு அதிகாரம் கிடையாது என்று தெரிந்துகொண்டிருந்தார். அதற்காக அவள் நிபந்தனையின்படியே அவளை மணம் புரிந்து கொள்வதற்காகச் சுந்தரத்திற்கு எவ்வளவு உதவி புரிய வேண்டுமோ, அத்தனை உதவி புரிந்து வந்தார்.

சுந்தரம் பி. ஏ. பரீக்ஷைக்கு ஐந்து தடவை போய்த் தோல்வியுற்றுச் சலிப்புடன் திரும்பித் தன் மாமன் வீட்டில் வசித்து வந்தான். வந்தவன் ஏதாவது உத்தியோக வேட்டையில் இறங்கலாமென்று உத்தேசித்துக் கொண்டிருந்த சமயம் திடீரென்று பிள்ளைவாளின் தூண்டுதலால் இரவு பகலாய் ஏதோ புஸ்தகங்களை மிகவும் கவனமாக வாசிக்க ஆரம்பித்தான்.

இதைக் கவனித்த காமு ஒரு நாள் சுந்தரம் தன் அறையில் ஏதோ வாசித்துக் கொண்டிருந்தபோது உள்ளே நுழைந்து, "என்ன அத்தான்! என்ன வெகு மும்முரமாய் வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள்? பி. ஏ. பரீட்சைக்கா?" என்று கேட்டாள்.

"சீச்சீ! பி. ஏ. பரீட்சைக்காவது? வேறொரு பரீட்சைக்கு."

"எம். ஏ. யா?"

"எம். ஏயும் இல்லை, பி. ஏயும் இல்லை. எல்லாம் நீ வைத்திருக்கும் கல்யாணப் பரீட்சைக்குத்தான்" என்றான்.

ஆனால் இந்தக் கல்யாணப் பரீட்சைக்கும் சுந்தரம் பத்துத் தடவை போய்ப் பார்த்தான். என்னென்ன விஷயங்களைப் பற்றியோ எல்லாம் காமுவைக் கேள்விகள் கேட்டுப் பார்த்தான். ஆனால் காமு எல்லாவற்றிற்கும் பதில் அளித்துவிட்டாள். காமுவுக்கும் தன் அத்தானைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் ஆசைதான். ஆனால் அவன்தான் அவள் பதில் சொல்ல முடியாத கேள்வியாகப் பார்த்துக் கேட்கவில்லையே?

ஒரு நாள் சுந்தரம் தன் மாமா விசுவநாதம் பிள்ளைவாளுடன் மிகவும் வருத்தத்துடன் பேசிக்கொண்டிருந்தான்.

"என்ன சுந்தரம்! ஒன்றும் பிரயோசனம் இல்லை போலிருக்கிறதே?"

"ஆமாம், மாமா! நான் என்ன பண்ணுவேன்? நீங்கள் சொன்ன புஸ்தகங்கள் எல்லாவற்றையும்தான் வாசித்து அதில் எல்லாம் கேள்விகள் கேட்டேன். இதற்காக என் பி. ஏ. புஸ்தகங்களை யெல்லாம் கூட ஒரு தடவை வாசித்தேன். ஆனால் காமு எல்லாவற்றிற்கும் பதில் அளித்துவிட்டாள்."

"ஆமாம், அப்பா! நீ என்ன பண்ணுவாய்? உனக்கு இப்பொழுது இருக்கும் அறிவைக் கொண்டு நீ பி. ஏ. அல்ல, எம். ஏ. அல்ல, ஐ. ஸி. எஸ். கூடப் பாஸ் பண்ணி விடலாம். ஆனால் காமுவும் அல்லவா உனக்கு மேலே படித்துக் கொண்டு போகிறாள்?" என்றார்.

அடுத்த நாள் காமுவை எப்படியாவது ஜயித்துவிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டான் சுந்தரம். அவளைக் கேள்விகள் கேட்டு மடக்குவது என்று நினைத்தான்.

தன் கை நிறைய மணலை எடுத்து வைத்துக் கொண்டு "இதில் எத்தனை மணல் இருக்கிறது? சொல் பார்க்கலாம்" என்றான்.

"லட்சத்து, முப்பத்தேழாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது" என்றாள் காமு.

"நீ சொல்வது தப்பு. எங்கே எண்ணிக் காண்பி, பார்க்கலாம்" என்றான் சுந்தரம்.

"நான் சொல்வது தப்பு என்று நீங்கள் எண்ணிக் காண்பியுங்கள், பார்க்கலாம்" என்று மடக்கினாள் காமு.

சுந்தரம் பேசாமல் எழுந்து போய்விட்டான்.

கடைசியாகச் சுந்தரமும் பிள்ளைவாளும் சேர்ந்து ஏதோ பலத்த யோசனை பண்ணினார்கள். கடைசியாகப் பிள்ளைவாளுக்கு ஏதோ யோசனை தோன்ற அவர் அதைச்

சுந்தரத்திற்குச் சொல்ல, சுந்தரம் முகமலர்ந்து காமுவைக் கல்யாணம் பண்ணிக்கொண்டாய் விட்டதுபோல் கூத்தாடினான்.

அடுத்த நாள் காலை எட்டு மணியிருக்கும். பிள்ளையும் சுந்தரமும் சிரித்துக் கொண்டே காமு இருந்த அறைக்குச் சென்றார்கள்.

"என்ன, ரொம்ப சந்தோஷமா யிருக்கிறீர்கள்?" என்றாள் காமு.

"சுந்தரம் மறுபடியும் பரீட்சைக்கு வந்திருக்கிறான்" என்றார் பிள்ளை.

"நான் எப்பொழுதும் தயார். கேள்விகள் கேட்கலாம்" என்று காமு எழுந்திருந்து நின்றாள்.

சுந்தரம் தன் தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு தன் கேள்வியை ஆரம்பித்தான்.

"இந்தா, காமு! நான் கேட்கும் கேள்விக்கு நீ உடனே பதில் சொல்ல வேண்டும். **நான் என்ன கேள்வி கேட்டால் உனக்குப் பதில் சொல்லத் தெரியாது. சொல் பார்க்கலாம்!"**

காமு திகைத்தாள். அவள் முகம் நாணத்தாலும், சந்தோஷத்தாலும் சிவந்தது. "அத்தான்! நீங்கள் என்னை ஜயித்து விட்டீர்கள். நான் பதில் சொல்லாவிட்டாலும் நீங்கள் ஜயிக்கிறீர்கள். நான் சொன்னாலும் அந்தக் கேள்வியை என்னைக் கேட்டு நீங்கள் ஜயிக்கப் போகிறீர்கள்" என்றாள்.

"அப்பாடா! இனிமேல் கல்யாணம்தான் பண்ணிக் கொள்வீர்களோ, அல்லது சும்மாத்தா னிருப்பீர்களோ, அத்தான் பாடு, அம்மங்காள் பாடு" என்று சொல்லிவிட்டு விசுவநாதம் பிள்ளை அங்கிருந்து நகர்ந்தார். நாமும் இந்த சமயத்தில் காதலர்களை விட்டு நகர்வதுதான் மரியாதை.....

காமுவுக்குக் கல்யாணம் இனிதே நடந்தேறியது. சுந்தரமும் அதே வருஷம் பி. ஏ. க்குப் போய்ப் பாஸ் பண்ணி

விட்டு இப்பொழுது எம். ஏ. க்குப் படித்துக் கொண்டிருக்கிறான்.

இப்பொழுதெல்லாம் கேள்வி கேட்பது காமுவேயொழிய சுந்தரமில்லை. "ஏன் இத்தனை நாழி?" "எங்கே போயிருந்தீர்கள்?" "அன்றைக்கு வைத்திருந்த ரூபாய்க்குக் கணக்கு எங்கே?" என்று இந்த மாதிரி எத்தனையோ கேள்விகள் கேட்பாள். சுந்தரம் பதிலுக்கு ஒரு கேள்வி கூடக் கேட்கமாட்டான். ஆனால் அவனுக்கு காமுவை ஒரே ஒரு கேள்வி—கடைசி கேள்வி கேட்டுவிட வேண்டுமென்று ஆசை. ஆனால் ரொம்ப நாள் அதற்குத் தைரியம் வரவில்லை.

ஒரு நாள் சுந்தரம் காமுவைத் தன்னிடமிருந்த தைரியத்தை யெல்லாம் ஒன்று சேர்த்துத் தன் கேள்வியைக் கேட்டேவிட்டான். "அதெல்லாம் இருக்கட்டும் காமு! கல்யாணம் ஆவதற்கு முன் அது ஏன் என் வயிற்றெரிச்சலை அப்படிக் கொட்டிக் கொண்டாய்? அது என்ன, கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு உலகத்திலில்லாத ஒரு புது வழக்கம் ஏற்படுத்திக் கொண்டாய்?" என்று கேட்டான்

"எதற்கா? எல்லாம் நீங்கள் பி. ஏ. பாஸ் பண்ண வேண்டுமென்றுதான். நான் பி. ஏ. பாஸ் பண்ணியிருக்கும்போது நீங்கள் பண்ணவிட்டால் எனக்கு அவமானமாயிருக்காதா? படிப்பில் உங்களுக்குச் சிரத்தை விழ வேண்டுமென்றுதான் அப்படிப் பண்ணினேன்" என்றாள்.

"காமு! என்ன இருந்தாலும் நீ கெட்டிக்காரி. இங்கே வா பக்கத்தில்! என் கண்ணேல்லியோ?" என்றான் சுந்தரம்.

○☆○

# முதலுக்கே மோசம்

ஜகல் பிரட்டன் அண்டு கம்பெனி மானேஜர் மலைமுழுங்கி மாயாண்டித் தேவன் அவர்களுக்கு,

ஐயா,

இப்பவும் நான் தங்கள் நரைமயிர் கறுக்கும் தைலத்தைச் சென்ற ஒரு மாத காலமாக உபயோகித்துக்கொண்டு வந்தும் துளிக்கூடக் குணம் காணவில்லை. இந்த மாதிரி நீங்கள் ஊரைப் புரளி பண்ணி மருந்து விற்றுக்கொண்டு வருகிறீர்கள் என்று தெரிந்தால் நான் உங்கள் மருந்தை வாங்கியே இருக்கமாட்டேன். இந்தக் கடிதத்துக்கு உடனே தங்கள் பதிலை எதிர் பார்க்கிறேன். நீங்கள் சரியான ஜவாப்புக் கொடுக்காத பக்ஷத்தில் உங்கள் ஜகப் புரட்டை ஜகமெங்கும் பறைசாற்றி விடுவேன் என்பதைக் கண்டிப்பாய் அறியவும்.

இப்படிக்கு,

நரைத்தலை நாராயணசாமிப் பிள்ளை.

நரைத்தலை நாராயணசாமிப் பிள்ளை அவர்களுக்கு,

ஐயா,

தங்கள் கடிதம் கிடைத்தது. தாங்கள் தயவுசெய்து மருந்துப் புட்டியின்மேல் "குணமாகும் வரையில் உபயோகிக்கவும்" என்று நாங்கள் போட்டிருக்கும் குறிப்பைக் கவனிக்கவும். தாங்கள் இன்னும் ஒரு மாதம் இதை உபயோகித்துப் பார்க்கவும். அதற்கு மேலும் குணமாகவில்லையானால் எங்களுக்குத் தகவல் தெரிவிக்கவும். நாங்கள் நீங்கள் கொடுத்த பணத்தை வாபஸ் பண்ணத் தயாராயிருக்கிறோம்.

தங்கள்,

மலைமுழுங்கி மாயாண்டித் தேவன்.

ஜகல் பிரட்டன் அண்டு கம்பெனி மானேஜருக்கு,

ஐயா,

தங்கள் மருந்தை நீங்கள் சொன்னபடி இன்னும் ஒரு மாத காலம் உபயோகித்துப் பார்த்தேன். அது பண்ணி யிருக்கும் அழகான குணத்தை, நீங்கள் நேரில் பார்த்துத் தான் தெரிந்து கொள்ள வேண்டும். நான் அந்த மருந்துக் காகக் கொடுத்த பணத்தை மரியாதையாகத் திருப்பி அனுப்புகிறீர்களா, அல்லது உங்கள் மருந்தின் யோக்கி யதையை நான் ஊரெங்கும் தெரியப் படுத்தட்டுமா?

இப்படிக்கு,

நரைத்தலை நாராயணசாமிப் பிள்ளை.

நரைத்தலை நாராயணசாமிப் பிள்ளை அவர்களுக்கு,

ஐயா,

நாங்கள் உங்களுக்கு எங்கள் நரை மயிர் கறுக்குந் தைலத்தை விற்ற பொழுது, சீக்கிரத்தில், உங்கள் பெய ருடன் சேர்த்துப் பிரயோகிக்கப்படும் "நரைத் தலை" என்ற அடைமொழி எடுபடும் என்று நம்பித்தான் கொடுத் தோம். இருந்தாலும் நீங்கள் இத்தனை கோபத்துடன் எழுதியிருப்பதால், நாங்கள் ஏதாவது தவறுதலான மருந் தைக் கொடுத்து விட்டோமோ வென்று சந்தேகமா யிருக் கிறது. ஆகையால் தய்வு செய்து நாங்கள் உங்களுக்குக் கொடுத்த தைலத்தைத் திருப்பியனுப்பித்தால் அதைப் பரிசீலனை செய்து தகவல் தெரிவிக்கிறோம். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

தங்கள்,

மலைமுழுங்கி மாயாண்டித் தேவன்.

ஜகல் பிரட்டன் அண்டு கம்பெனி மானேஜருக்கு,

ஐயா,

உங்கள் தைலத்தை இத்துடன் திருப்பி அனுப்பி யிருக்கிறேன். அதைப் பரிசீலனை பண்ணவோ, அதைத் திருப்பி யனுப்பவோ நீங்கள் சிரமம் எடுத்துக்கொள்ள

வேண்டாம். பேசாமல் நான் அதற்குக் கொடுத்த பணத்தை வாபஸ் பண்ணவும்.

இப்படிக்கு,

நரைத்தலை நாராயணசாமிப் பிள்ளை.

நரைத்தலை நாராயணசாமிப் பிள்ளை அவர்களுக்கு,

ஐயா,

நீங்கள் திருப்பி யனுப்பிவைத்த தைல பாட்டில்வந்து சேர்ந்தது. அதைப் பரிசீலனை செய்ததில் ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டது என்று தெரிகிறது. நாங்கள் உங்களுக்கு விற்ற தைலம், நரைமயிர் கறுக்குந் தைலமல்ல; ஆனல் அது கூந்தல் வளரும் தைலம். எங்கள் ஆபீஸ் பையன் சீட்டு ஒட்டும்போது தவறுதலாக ஒட்டி விட்டான் போலிருக்கிறது. நீங்கள் மாத்திரம் எங்கள் நரைமயிர் கறுக்குந் தைலத்தை உபயோகித்தால் உங்களை ஒருவரும் "நரைத் தலை" என்று கூப்பிட மாட்டார்கள். நீங்கள் தபால்செலவு நான்கு அணு மாத்திரம் அனுப்பும் பக்ஷத்தில் எங்கள் நரைமயிர் கறுக்குந் தைலத்தை இலவசமாகவே அனுப்புகிறோம்.

தங்கள்,

மலைமுழுங்கி மாயாண்டித் தேவன்.

ஜகல் பிரட்டன் அண்டு கம்பெனி மானேஜருக்கு,

ஐயா,

நான் உங்கள் தைலத்துக்காகக் கொடுத்த பணத்தைத் திருப்பிக்கொடுக்கும்படி எவ்வளவோ மரியாதையாகக் கேட்டும் நீங்கள் வீணுக என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளுகிறீர்கள். தங்கள் கூந்தல் வளரும் தைலம் தங்கள் நரைமயிர் கறுக்குந் தைலத்துக்கு உபயோகமில்லாமல் செய்து விட்டது. அதைத்தான், "நீங்கள் நேரில் வந்து பார்த்தால்தான் தெரியும்" என்று எழுதியிருந்தேன். தங்கள்

கூந்தல் வளரும் தைலத்தை இரண்டு மாதங்கள் உபயோகித்ததின் பயனாய் என் தலை மயிரெல்லாம் உதிர்ந்து போய், நான் இப்பொழுது வழுக்கைத் தலையனாகி விட்டேன். நீங்கள் சொன்னது போல் என்னை ஒருவரும் இப்பொழுது "நரைத்தலை நாராயணசாமிப் பிள்ளை" என்று கூப்பிடுவது கிடையாது. "வழுக்கைத்தலை நாராயணசாமிப் பிள்ளை" என்றுதான் கூப்பிடுகிறார்கள். தங்களுக்கு ஒரு நமஸ்காரம். தங்கள் தைலத்துக்கு ஒரு நமஸ்காரம்.

இப்படிக்கு,

**வழுக்கைத்தலை நாராயணசாமிப் பிள்ளை.**

○☆○

# புளி மூட்டை

சில வாடகை வண்டிக்காரர்களைப் பார்த்திருக்கிறீர்களா? போலீஸ்காரர்களின் காற்றே வீசாத பிரதேசங்களில் உள்ள வண்டிக்காரர்களைத்தான் சொல்லுகிறேன். இவர்களிடம் நீங்கள் வாடகையைக் குறைத்துப் பேசினீர்களோ, வந்தது ஆபத்து! மிகவும் நிதானமாக, "கூட ஆள் போட்டுக் கொள்கிறேன்" என்பார்கள். அவ்வளவுதான்! "ஒரு ஆள், ஒரு ஆள்" என்று ஒவ்வொரு ஆளாகப் போட்டுக் கொண்டே போய், வண்டியைப் புளி மூட்டை மாதிரி அடைக்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஆனால் இந்த வண்டிக்காரர்களை நல்லவர்கள் ஆக்கி விடுகிறவர்கள் இருக்கிறார்கள். அதுவும் அடிக்கொரு போலீஸ்காரன் உள்ள இந்தச் சென்னைப் பட்டணத்திலேயே இருக்கிறார்கள். யார் என்று ஆச்சரியப்படுகிறீர்களோ? வேறு யாரும் இல்லை, எல்லாம் இந்த டிராம் வண்டிக்காரர்கள் தான்.

அன்றொரு நாள் பாருங்கள், நானும் என் நண்பர் ஒருவரும் மயிலாப்பூருக்கு ஒரு கல்யாணத்துக்காகப் புறப்பட்டோம். சரியாக ராத்திரி எட்டு மணிக்கு டின்னருக்குப் போய்ச் சேர்ந்தால் போதும் என்று பட்டது. ஆகவே டிராமில் போகலாம் என்று தீர்மானித்தோம். ஏனெனில் அப்பொழுதுதான் மணி ஆறு ஆகி யிருந்தது. டிராமில் போனால் நாங்கள் கல்யாண வீடு போய்ச் சேர்வதற்கும், அங்கு இலை போடுவதற்கும் சரியாக இருக்கும்.

"எல்லா வண்டிகளும் இங்கு நிற்கும்" என்று போர்டு போட்டிருக்கிறார்களே, அங்கே போய் நின்றோம். அப்பொழுதுதான் கன வேகமாக ஒரு வண்டி வந்து கொண்டிருந்தது. பக்கத்தில் வந்ததும் பார்த்தால், அது திருவல்லிக்கேணி போகும் வண்டி! அதற்குப் பிறகு இன்னொரு

வண்டி வந்தது. அது புரசவாக்கம் போகும் வண்டி! இதற்குப் பிறகு எழும்பூர் போகும் வண்டி!

இப்படியாகத்தானே பாக்கி எல்லா வண்டிகளும் வந்து கொண்டிருந்தனவே யொழிய, மயிலாப்பூர் வண்டியைக் காணோம். நண்பருக்குக் கோபம் வந்து விட்டது. "இந்த டிராம் கம்பெனிக்கு இன்று மூன்று அணு நஷ்டம் வைத்து விடுவோம். வா, நடந்து போகலாம்" என்று கிளம்பினார்.

நல்ல வேளையாக அந்தச் சமயம் மயிலாப்பூர் வண்டி வந்து விடவே நண்பரின் கோபம் தணிந்தது.

மயிலாப்பூர் வண்டி கனவேகமாக வந்து கொண்டிருந்தது. நிறுத்தும்படி நான் கையைக் காட்டினேன். நண்பரும் காட்டினார். ஆனால் வண்டி நின்றால்தானே! அது ஏதோ மெயில் வண்டி போலவும், அங்கு நிற்க வேண்டிய அவசியமில்லை போலவும் கனவேகமாக ஓடிற்று. நாங்களும் வண்டியைத் தொடர்ந்து ஒரு பர்லாங்கு தூரம் ஓடினோம். டிராமின் பின் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த கண்டக்டர் நாங்கள் வருவதை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றாரே யொழிய வண்டியை நிற்கச் சொன்னதாகத் தெரியவில்லை.

கடைசியில் டிராமைப் பிடித்து ஏறினோம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்! அதாவது நண்பர் டிராமின் பிளாட்பாரத்தில் உள்ள இரும்புக் கம்பியைப் பிடித்துக் கொண்டு தொங்கினார். அவர் சட்டையைப் பிடித்துக் கொண்டு நான் தொங்கினேன்.

நாங்கள் இப்படி சர்க்கஸ் செய்ய ஆரம்பித்ததுதான் தாமதம், அத்தனை நாழி வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்த டிராம் நின்றது. பின் கால்மணி நேரத்துக்கு நகரவே யில்லை.

டிராம் வண்டியின் பிளாட்பாரத்தில் அன்று வழக்கம் போலவே ஒரே கூட்டம். கம்பியைப் பிடித்துக்கொண்டு தொங்குவாரும், படியில் ஒரு காலை வைத்துக் கொண்டு,

இன்னொரு காலை வைக்க இடமில்லாமல் ஒற்றைக் காலில் தபஸ் பண்ணுவாரும், வலது பக்கத்திலிருந்து ஏறக் கூடாது என்பதற்காகப் போடப் பட்டிருக்கும் சங்கிலி மீது குரங்கு மாதிரி தொத்திக் கொண்டு உட்கார்ந்திருப் போரு மாகக் கண் கொள்ளாக் காட்சியா யிருந்தது.

பிளாட்பாரத்தில் நின்று பிரயாணம் செய்தால் அப ராதம் போட்டு விடுவோம் என்று சர்க்கார் பயமுறுத்தி யிருக்கிறார்களே, அதற்கு யாரும் பயந்ததாகத் தெரிய வில்லை. உள்ளே போக வேண்டுமானால் முண்டியடித்துக் கொண்டு போக வேண்டும். ஆனால் நாம் என்ன டிராம் கண்டக்டரா, ஜனங்களை மிதித்துக் கொண்டும், துவைத்துக் கொண்டும், இடித்துக் கொண்டும் போவதற்கு?

அடடே! இது என்ன பட்டப் பகல் கொள்ளையா! கண்டக்டர் அந்த பிரயாணியின் பாக்கெட்டில் கையை விட்டுக் கொண்டிருக்கிறாரே! அப்படி யெல்லாம் ஒன்று மில்லை, பயப்படாதீர்கள்! சற்று அந்தப் பிராணி — மன் னிக்கவும், பிரயாணியைப் பாருங்கள். அந்தப் பிரயாணி யின் ஒரு கை வளையத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது, இன்னொரு கையில் தர்மாஸ் பிளாஸ்க்! கக்கத்திலோ ஆபீஸ் கட்டு! தலையிலிருக்கும் தலைப்பாகையோ அவிழ்ந்து புரளுகிறது. இந்த நிலையில் தம்முடைய 'பாஸை' அவர் கண்டக்டருக்கு எப்படி எடுத்துக் காண்பிப்பார்!

அதற்காகத் தான் டிராம் கண்டக்டர் அவர் பாக்கெட் டில் கையை விட்டு, பாஸ் இருக்கிறதா என்று பார்க்கிறார். இந்தக் கண்டக்டர்கள் இருக்கிறார்களே, மிகவும் நல்லவர் கள். நம்முடைய நிலையைக் கண்டு, பரிதாபப்பட்டு, சில சமயம், பர்ஸைக் கூடப் பாக்கெட்டிலிருந்து எடுத்து, டிக் கட்டுக்கு வேண்டிய சில்லறையை எடுத்துக் கொண்டு பாக் கியை வைத்து விடுவார்கள்.........

"அடடே! யார் ஐயா இப்படிப் பிடித்துத் தள்ளு கிறது? கொஞ்சம் இரு ஐயா! யாரையா அது, என் காலை மிதிக்கிறது?"

"ஈசுவரா!" என்று மேலே பார்த்ததும் ஒரு போர்டு தென்பட்டது. வண்டி நிறைந்து விட்டதைத் தெரிவிப்பதற்கு உள்ள போர்டு அது. ஆனால் அத்தனை கூட்டம் இருந்ததே; போர்டைத் தொங்க விட்டார்களா? இல்லை.

எனக்குத் தெரிந்து அந்த போர்டை ஒரு கண்டக்டராவது இதுவரை தொங்க விட்டதாக ஞாபகமில்லை. ஒரு வேளை இலக்கணத் தப்பாக, வல்லின, இடையின பேதம் இல்லாமல், "வண்டி நிரைந்து விட்டது" என்று எழுதி வைத்திருக்கிறார்களே, அதைப் பார்த்து எல்லாரும் சிரிக்கப் போகிறார்கள் என்கிற பயம் போலும்!

எத்தனை பேர் ஏறினால் இவர்கள் வண்டி நிறைந்து விட்டதாகக் கருதுவார்களோ, தெரியவில்லை.

சாதாரணமாக, சென்னையில் உள்ள டிராம் வண்டிகளுக்கு, இரு பக்கமும் பன்னிரண்டு பன்னிரண்டு ஜன்னல்கள் இருக்கின்றன. ஒரு ஜன்னலுக்கு இரண்டு பேர் என்று வைத்துக் கொண்டாலும், பக்கத்துக்கு 24 ஆக, மொத்தம் 48 பேர்தான் உட்கார முடியும். ஆனால் இந்த வண்டியில் எத்தனை பேர் உட்காரலாம் என்று டிராம்வேகாரர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள், தெரியுமா?

ஆனால் இந்த எண்ணிக்கையைக் கூட அவர்களால் நிச்சயமாய் நிர்ணயிக்க முடியவில்லை போலிருக்கிறது. ஒரு வண்டியில் 94, ஒரு வண்டியில் 95, இன்னொரு வண்டியில் 103 என்று அவர்கள் இஷ்டப்படி எழுதி வைத்திருக்கிறார்கள். ஒரு வேளை வளையத்தைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார்களோ என்று பார்த்தாலோ, முப்பதே முப்பது வளையங்கள் தான் இருக்கின்றன. ஆக 48 ம் 30 ம் 78 போக மீதி 25 பேர் எப்படி உட்காருவார்கள் என்று நினைத்தார்களோ? ஒரு வேளை டிராம் ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு டிராமுக்கு வெளியில் தொங்குவார்கள் என்று எண்ணினார்களோ?

டிராமில் இத்தனை நெருக்கடித் தொல்லை இருக்கிறதே, அதற்காக யாராவது கொஞ்சமாவது அலுத்துக் கொள் கிறார்கள் என்கிறீர்களா, கிடையாது.

ரொம்ப காலமாக இப்படியே நடந்து கொண்டு வருவதால், டிராம் என்றால் இப்படித்தான் புளி மூட்டை மாதிரி அடைபட்டும், வௌவாலைப் போல் தொங்கிக் கொண்டும் பிரயாணம் செய்ய வேண்டும் போலும் என்று ஜனங்கள் நினைக்கத் தொடங்கி விட்டார்கள்.

சென்னைப் பட்டணத்தில் மாத்திரம் டிராம் போடவில்லை, இன்னும் எத்தனையோ நகரங்களில் டிராம் போட்டிருக்கிறார்கள், ஆனால் அங்கெல்லாம் ஜனங்கள் சௌகரியமாக, உட்கார்ந்து பிரயாணம் செய்கிறார்கள் என்னும் விஷயம் நம் சென்னை வாசிகளுக்குத் தெரிந்தால், அப்படியே மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விடுவார்கள். ஆனால் டிராமில் மூர்ச்சை போட்டுக் கீழே விழ முடியாது; நின்று கொண்டேதான் மூர்ச்சை போட வேண்டும்!

டிராமில் சாதாரணமாக இடி விழுவது போதாதென்று, இந்த ஸ்திரீகள் இருக்கிறார்களே, அவர்களால் இரண்டு பங்கு இடி விழுகிறது.

அதோ அந்த ஸ்தூலமான ஸ்திரீயைக் கண்டதும் எதற்காக இப்படி நான்குபேர் பயந்து எழுந்து நிற்கிறார்கள்? பயம் ஒன்றும் இல்லை. அந்த ஸ்திரீ உட்காருவதற்கு இடம் கொடுப்பதற்காக மூன்று பேர் எழுந்து நின்றார்கள். அந்த ஸ்திரீக்கும், பக்கத்தில் உள்ள புருஷருக்கும் இடம் விடுவதற்காக ஒருவர் எழுந்து நின்றார்.

ஸ்திரீகளுக்கு இடம் விடுவது என்று சென்னை டிராம்களில் ஒரு வழக்கம் இருக்கிறது. என்னைக் கேட்டால் இந்த டிராம் நெருக்கடியை நிவர்த்திப்பதற்காகவாவது நாம் நமக்கு ஸ்திரீகளின் மீது சுபாவமாக உள்ள இரக்கத்தை மறந்து அவர்களுக்கு இடம் கொடுக்க மறுக்க வேண்டும். அப்பொழுது ஸ்திரீகள் டிராமில் பிரயாணம் செய்வதை நிறுத்திக் கொள்வார்கள். டிராம்வேகாரர்களும் கொஞ்சம் கண்ணைத் திறப்பார்கள்.

இல்லை, போய்விட்டுப் போகிறது, ஸ்திரீகளுக்கு இடம் கொடுத்துவிடுவோம் என்றால், தம்பதி சமேதராக வருகிறார்களே, அவர்கள் தொல்லை சகிக்க முடிகிறதில்லை. அவர்களில் ஸ்திரீக்கு மாத்திரம் இடம் கொடுத்தால் போதாது. தன் மனைவிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ள புருஷனுக்கும் இடம் விட வேண்டும்!

அப்பாடா! எல்லாரும் எழுந்து போகிறார்களே, உட்காருவதற்கும் இடம் கிடைக்கும் போலிருக்கிறதே என்று சந்தோஷமாக உட்காரப் போனேன்.

"என்னடா, மயிலாப்பூர் வந்து விட்டது. நீ மாட்டில் உட்கார்ந்து விட்டாயே!" என்றார் இத்தனை நாழி கூட்டத்தில் மறைந்து காணமற் போயிருந்த நண்பர். "அட ஈசுவரா! அதுதான் எல்லாரும் இறங்குகிறார்களா?" என்று சொல்லிக் கொண்டே வண்டியை விட்டு இறங்கினேன்.

.......என்ன கேட்கிறீர்கள்? சாப்பாட்டுக்குச் சரியாய்ப் போய்ச் சேர்ந்தோமா என்று? அந்த வெட்கக் கேட்டை ஏன் கேட்கிறீர்கள்? இனிமேல் டிராமில் பிரயாணம் செய்வது என்றால், நாளைக்குக் கல்யாணம் என்றால் இன்றைக்கே புறப்பட்டு விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன்.

○☆○

# "எங்கேயோ பார்த்தாப் போல இருக்கே!"

"என்ன ஐயா, முழிக்கிறீர்? ஆள் யாரென்று தெரியவில்லையோ? எங்கேயோ பார்த்தாப் போல இருக்கோ?"

அனுமான் லஞ்ச் ஹோமில் எனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த அந்த ஆசாமி இப்படி அதட்டிக் கேட்டதும் நான் கதிகலங்கிப் போய் விட்டேன்.

ஆரம்பிக்கும்போதே அந்த ஆசாமி சற்று எடக்காகத்தான் ஆரம்பித்தார். "என்ன ஐயா! கண் தெரியுமா? டில்லி ஆசாமி யாகப் போய் விட்டீர், இல்லையா" என்று இந்த தோரணையில் அவர் தம் சம்பாஷணையை ஆரம்பித்தார்.

என் கண் பார்வையைப் பற்றிச் சந்தேகப்பட்டவர் யார் என்று தெரிந்து கொள்வதற்காக நான் கையில் வைத்துக் கொண்டிருந்த காப்பி டம்ளரைக் கீழே வைத்துவிட்டு, நிமிர்ந்து பார்த்தேன். அவரைப் பார்த்ததுமே நான் ஆடு திருடின கள்ளனைப் போல் விழிக்க ஆரம்பித்து விட்டேன். (எல்லாரும் சொல்வது போல் நானும் சொல்கிறேனே யொழிய, உண்மையில் ஆடு திருடின கள்ளனை நான் பார்த்ததில்லை.) நான் அப்படி விழித்ததற்குக் காரணம், எதிரே இருக்கும் ஆசாமியை எங்கேயோ பார்த்தாப் போல இருக்கே யொழிய, ஆள் யார் என்று ஞாபகம் வரவில்லை.

இத்தகைய ஞாபக மறதி உங்களுக் கெல்லாம் உண்டோ, என்னமோ, எனக்கு மிகவும் உண்டு. இதனால் எத்தனையோ தடவைகளில் அவதிப்பட்டும், சில சமயங்களில் அவமானப்பட்டும் இருக்கிறேன்.

முன்னெல்லாம், அதாவது என் தம்பிக்குக் கல்யாண மாகி அவனுக்கு ஒரு மாமனர் வரும் வரையில், நான் இம் மாதிரி எங்கேயோ பார்த்தாப் போலத் தோன்றும் ஆசாமி களைக் கண்டால், பேசாமல், "யார் என்று தெரிய வில் லையே! எங்கேயோ பார்த்தாப் போல இருக்கே!" என்று வினயமாகக் கேட்டு விடுவது வழக்கம்.

ஒரு சமயம் என்ன ஆச்சு என்றால், என் தம்பி மாமனரிடமே அப்படிக் கேட்டு விட்டேன்! என் தம்பி கல்யாணத்தன்று அவரை நான் பார்த்தவன்தான்; பிறகு இரண்டு வருஷங்களுக்கு, வெளியூர் போயிருந்ததால், பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவே யில்லை, ஆகவே, இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவரைப் பார்க்க நேர்ந் ததும், "யார் என்று தெரியவில்லையே, எங்கேயோ பார்த் தாப் போல இருக்கே!" என்று கேட்டு விட்டேன்.

அவ்வளவுதான். வந்து விட்டது பிரமாதமாகக் கோபம், என் தம்பிக்கு. அவன் மாமனர் கூடக் கோபித் துக் கொண்டதாகத் தெரிய வில்லை. உடனே புறப்பட் டான் ரயிலில். என் மாமனர் இருந்த ஊருக்குச் சென் றான். அவர் வீட்டை யடைந்தான். "தாங்கள் யார் என்று தெரியவில்லையே, எங்கேயோ பார்த்தாப் போல இருக்கே" என்று அவரைக் கேட்ட பிறகுதான் அவன் கோபம் தணிந்தது. ஆகவே அன்றிலிருந்து நான், "எங்கேயோ பார்த்தாப் போல இருக்கே" என்று கேட்கும் வழக் கத்தை விட்டு விட்டேன். அதற்குப் பதில் இம்மாதிரி சந்தர்ப்பம் நேர்ந்தால், ரொம்ப தளுக்காகப்பேசி, தபாய்த் துக் கொள்ளும் வழக்கத்தைக் கையாள ஆரம்பித்தேன்.

அன்றும் இதே முறையைத் தான் கையாள வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கையில், "என்ன ஐயா, நம்மை மறந்தாச்சோ, இல்லையோ?" என்று அந்த ஆசாமி திரும்பவும் கேட்டார்.

"என்ன ஐயா, தமாஷ் பண்ணுகிறீர்? நீராவது என்னை மறப்பீர்? நான் உம்மை மறப்பேனு? ஹீ, ஹீ, ஹீ, ஹீ!" என்று ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தேன்.

“அது தானே பார்த்தேன்! டில்லியிலிருந்து எப்ப வந்தாப் போலே?” என்று கேட்டுக் கொண்டே அவர் தம் முன்னால் வைக்கப்பட்டிருந்த இட்லி சாம்பாரை ஒரு கை பார்க்க ஆரம்பித்தார்.

“வந்து நான்கு நாள் ஆகிறது.”

“யார் கிட்டே ஐயா கதை விடுகிறீர்? பத்து நாளைக்கு முன்னாலேயே பார்த்ததாக நம்ப விசு சொன்னானே?”

அவர் “நம்ப விசு” என்று யாரைக் குறிப்பிட்டார் என்று எனக்குப் புரியவில்லை. விசு என்பது பையனா, பெரியவரா என்பதும் தெரியவில்லை. சரி, என்ன பண்ணுகிறது என்று நினைத்து, “இல்லையே. ஹீ, ஹீ, ஹீ, ஹீ” என்று இழுத்தாற்போல் சொல்லி வைத்தேன். இம் மாதிரி சமயங்களில் அந்த ‘ஹீ, ஹீ, ஹீ, ஹீ’ என்னும் அசட்டுச் சிரிப்பு எவ்வளவு உதவியா யிருக்கிறது என்பது இத்தகைய நெருக்கடியில் இருந்தவர்களுக்குத் தான் தெரியும்.

“என்ன ஐயா, வந்து பத்து நாள் ஆகிறது, ஒரு நாள் கூட நம் வீட்டை எட்டிப் பார்க்கக் கூடாது?”

“ஈச்வரா! இந்த மனுஷன் சீக்கிரம் காப்பி சாப்பிட்டு விட்டுத் தொலைய மாட்டாரா? இப்பத் தானே இட்லி முடிந்து, வடைக்கு வந்திருக்கிறார்” என்று மனதுக்குள் நொந்துகொண்டே, “இல்லே, வந்ததிலிருந்து வரணும்னு தான். ஒழியல்லே” என்று ஒரு போடு போட்டேன்.

“இப்பொழுதெல்லாம் ஒழியுமா, ஐயா? முன்னெல்லாம் காரியம் ஆகவேண்டி யிருந்தது, ஒழிந்தது” என்று பதில் வந்தது.

“சரி, ஆள் யார்ரோ தெரியவில்லை. தன்னால் நமக்குக் காரியம் ஆனதாக வேறு கூறுகிறார். இவர் இருக்கும் இடத்தை எப்படியாவது கண்டு பிடித்தாக வேண்டும்” என்று மனதில் பட்டது.

நான் இதற்கென்று வழக்கமாக ஒரு தந்திரம் கை யாளுவதுண்டு. “என்ன, பழைய வீட்டில் தானே இருக்

கிறீர்கள்?" என்று கேட்டு வைப்பேன். அப்பொழுது அவர்கள், தாங்கள் வீடு மாறியிருந்தால் தங்கள் புது விலாசத்தையோ, அல்லது பழைய வீட்டிலேயே இருந்தால், "நமக்கெல்லாம் போக்கிடம் ஏது? எல்லாம் அந்த மாரிச் செட்டி பத்தாம் நம்பர் தான்" என்று பழைய விலாசத்தையோ தெரிவித்து விடுவார்கள். ஆள் யார் என்று கண்டு பிடிப்பதற்கு இது மிகவும் உதவியாயிருக்கும்.

ஆனால் இந்த தந்திரம் இந்த ஆசாமியிடம் பலிக்கவில்லை. "எல்லாம் பழைய வீட்டில் தான் ஐயா, இருக்கிறேன். சொந்த வீட்டை விட்டு விட்டு, எங்கு போய் இருக்கச் சொல்கிறீர்?" என்று பதில் கேட்டார்.

"பழைய வீடு தானா? ஹீ, ஹீ, ஹீ, ஹீ, அப்படியானால் கட்டாயம் வருகிறேன்" என்றேன்.

இதற்குள் அவர் வடை சாப்பிட்டு முடித்தார்.

"சரி, மேலே காப்பி தான். அத்துடன் நமக்குச் சனி விட்டது" என்று இருந்தேன். ஆனால் சனி விட்டாலும் அவர் விட மாட்டார் என்று தோன்றிற்று. தோசைக்கு ஆர்டர் கொடுத்து விட்டார்!

ஈச்வரா! அந்தப் பாழும் ஸர்வர் தான் அதைச் சீக்கிரம்கொண்டு வருவானா? மாட்டான். காலை ஆறு மணிக்கே தான் எல்லாம் வார்த்துக் குவித்து வைத்திருக்கிறானே, அதில் ஒன்றை உடனே எடுத்துக் கொண்டு வந்து தந்தால் என்ன? ஆனால் அப்படிச் செய்ய மாட்டான். "தோசை ஒண்ணு" என்று ஹோட்டல் அதிரும்படி கத்திவிட்டு, பத்து நிமிஷம் கழித்து, பழைய தோசை ஒன்றையே சற்றுச் சுட வைத்துக் கொண்டு வந்து கொடுப்பான்.

தோசை சாப்பிட்டு முடிப்பதற்குள் ஆசாமி என்னைக் குடைந்து தள்ளி விட்டார். நானும் கூடிய வரை, இப்படியும் படாமல், அப்படியும் படாமல் பதில் சொல்லிக் கொண்டே வந்தேன். கடைசியில் காப்பி வந்தது. நானும் "அப்பாடா" என்று ஒரு பெரு மூச்சு விட்டேன்.

காப்பியைக் குடித்துக் கொண்டே, "ஆமாம் மணி வந்து—" என்று ஆரம்பித்தார்.

"மணியா? இப்பொழுது 8-30 ஆகிறது. எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கு" என்று கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னேன்.

"உம்மை மணி கேட்கவில்லை, ஐயா. டில்லியில் மணி எங்கே இருக்கான் என்று கேட்டேன்."

"இது யாரடா மணி?" என்று சற்று யோசிப்பதற்குள், "என்னய்யா, நம்ம மணி தெரியாது?" என்று கேட்டார்.

"ஓ! அவனா? மணியா? அப்படிச் சொல்லும். நான் வேறு யாரோன்னு நினைத்தேன்....ஏன், இருக்கானே?"

"அவன் ஷட்டகன் ராமுவைத் தெரியுமோன்னோ?"

"என்ன, இப்படிக் கேட்கிறேள்? அப்புறம் உங்களைத் தெரியுமோன்னு கூடக் கேட்பேள் போலிருக்கே? ஹீ, ஹீ, ஹீ, ஹீ" என்று எழுந்தேன். அவரும் எழுந்தார். வெளியே வந்து, பணம் கொடுப்பதற்காக, தம் கையில் உள்ள பர்ஸை எடுத்து, அதைத் திறந்து பார்த்ததும், ஏதோ தேள் கொட்டி விட்டது போல் கையைச் சொடக்கினார்.

"என்ன?" என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை, ஆத்துக்காரி ஏதோ ஒரு டானிக் வாங்கிக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னாள். பணம் எடுத்துக் கொண்டு வர மறந்து விட்டேன். ஒரு பத்து ரூபாய் இருந்தால் கொடும். நீர்தான் வீட்டுக்கு வரேன்னு சொல்லி யிருக்கிறீரே? அப்ப வாங்கிக்கொண்டு போமேன்" என்றார். வேறு வழியின்றி பணத்தை எடுத்துக் கொடுத்தேன்.

ஆள் யாரென்று இன்னும் ஞாபகம் வரவில்லை. "யார்னு தெரியல்லையே" என்று முன்னாலேயே சொல்லி யிருக்கலாம் போல் தோன்றுகிறது.

○☆○

# தலைமுறை தலைமுறையாய்

## 1900-ஆம்

[நாராயணசாமி அய்யரும் அவர் மகன் பத்து வயது ராமுவும்.]

**நாரா:** தடிப் பயலே! இத்தனை நாழி எங்கேடா போயிருந்தே?

**ராமு:** எங்கேயும் போகல்லையே! பள்ளிக்கூடந் தானே போயிருந்தேன்?

**நாரா:** அயோக்யக் கழுதை! எங்கே, என்னைப் பார்த்துச் சொல்லு! பள்ளிக்கூடமா போயிருந்தே?

**ராமு:** இல்லே, வந்து, வந்து........

**நாரா:** என்னடா வார்த்தையை முழுங்கறே? நிஜத்தைச் சொல்றயா, உதைக்கட்டுமா?

**ராமு:** இல்லே அப்பா! அவாத்துக் கிட்டன் இருக்கானே, அவனோடே கோவில்லியோ........

**நாரா:** அந்தத் தத்தாரி தானே?

**ராமு:** அவனோடே கோவில்........

**நாரா:** என்னடா! முழுங்கறே! அவனோடே கோவில் குளத்துக்குப் போய்க் குதித்துக் கொண்டிருந்தாய், அதானே?

**ராமு:** ஆமாம்........

**நாரா:** தினம் பள்ளிக்கூடம் போறேன், பள்ளிக்கூடம் போறேன் என்று குளத்திலா போய்த் துளைகிறாய்! (அடிக்கிறார்) உன்னைத்தாண்டி, இங்கே வாயேன்! உன் பிள்ளை யோக்யதையைப் பார்த்தாயோன்னோ! நான் எதாவது சொன்னால் சிபார்சு பண்ண வந்து விடுகிறாயே, அவன் பள்ளிக்கூடம் போகிற லட்சணத்தைப் பார்........

[ராமுவின் தாயார் வருகிருள்.]

தாயார்: எதற்காகக் குழந்தையைப் போட்டுக் கொல்றேள்?

நாரா: ஆமா, உன் குழந்தையைப் போட்டுக் கொன்னுட்டா! நாங்கள்ளாம் வாசிச்ச காலத்தில் இப்படியா இருந்தோம்? நாங்க ளெல்லாம் மணலில் எழுதி எழுதிப் பழகிக் கொண்டோம். இப்ப என்னடான்னு ஆளுக்கு ஒரு ஸ்லேட்டு! ஸ்லேட்டு மிச்சமே தவிர படிப்பு ஒன்றையும் காணேம்!

தாயார்: அவன் படிக்காவிட்டால் போறுன். உங்கள் பழம் பெருமை இங்கே ஒருவருக்கும் வேண்டாமே!

## 1920-ல

[முன்பு பத்து வயதாயிருந்த ராமு இப்பொழுது ராமசாமி அய்யராகத் திகழ்கிருர். அவருக்குப் பத்து வயதில் சீனு என்று ஒரு மகன் இருக்கிறுன்.]

ராம: என்னடா பயலே! எங்கேடா போயிருந்தே?

சீனு: பள்ளிக்கூடம்தானே போயிருந்தேன்!

ராம: பள்ளிக்கூடம் போயிருந்தாயா? நான்தான் பள்ளிக்கூடத்துக்கு வந்து பார்த்தேனே?

சீனு: இல்லே. அடுத்த தெரு கோபு இருக்ானே இல்லையோ....

ராம: அவனேடே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாய்! அதானே?

சீனு: .......

ராம: என்னடா! ஆடு திருடின கள்ளனைட்டம் விழிக்கிருய்? தினம் பள்ளிக்கூடம் போகிறேன், பள்ளிக்கூடம் போகிறேன் என்று ரயில்வே ஸ்டேஷனுக்கா போய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிருய்?

[அடிக்கிறார். சீனுவின் தாயார் வருகிறாள்.]

**தாயார்:** எதற்காகக் குழந்தையைப் போட்டுக் கொல்றேள்?

**ராம:** நான்தான் கொன்னுட்டேன், நீதான் கொல்லாமல் வளரேன். அவன் படிக்கிற யோக்யதையைப் பார்த்தாயோ, இல்லையோ? இதற்கு ஒரு ஒரு பென்சில், நோட்டு! நாங்கள் வாசித்த காலத்தில் நோட்டும் கிடையாது, பென்சிலும் கிடையாது. எல்லாரும் ஸ்லேட்டில் தான் எழுதி வாசித்தோம். இப்படியா பாடம் படிக்காமல் நின்னோம்!........

**தாயார்:** ஐய! போதுமே உங்கள் பழம் பெருமை!

## 1940-ஹூ

[முன்பு பத்து வயதாயிருந்த சீனு இப்பொழுது மிஸ்டர் சீனிவாஸ் ஆகிவிட்டார். அவருக்கு மோஹன் என்று ஒரு பையன்.]

**சீனு:** டேய் மோஹன்! இங்கே வா. காலம்பர பள்ளிக்கூடம் போக ஒழியவில்லை போலிருக்கு!

**மோஹன்:** இல்லையே! பள்ளிக்கூடம்தானே போயிருந்தேன்?

**சீனு:** யாரிடம்டா காது குத்துகிறாய்? காலையில் பத்து மணி ஸினிமா ஆட்டத்துக்கு நீ போயிருந்தது எனக்குத் தெரியாது என்று நினைக்கிறாயா? நான் ஏதாவது சொன்னால் உங்கம்மா சிபார்சுக்கு வந்து விடுகிறாள். இந்த மாதிரி நீ படிக்கிற படிப்புக்கு உனக்கு பௌண்டன் பேனா வேறு! நாங்கள்ளாம் படிக்கிறபோது பௌண்டன் பேனாவும் கிடையாது, ஒன்றும் கிடையாது. நீயும் படி படி என்று படிக்கிறாயே, நாங்கள்ளாம் படிக்கிற காலத்திலே.........

[மோஹனுடைய தாயார் வருகிறாள்,]

**தாயார்:** வழக்கம் போலே ஆரம்பிச்சாச்சோ, இல்லையோ? ஐய! யாருக்கு வேண்டியிருக்கு உங்கள் பழம் பெருமை!

○☆○

# நகரப் புனருத்தாரணம்

முன் காலத்தில் எல்லாம் படித்தவர்களுக்கு அடையாளம் கிராப்புத் தலையும், மூக்குக் கண்ணாடியும். ஆனால் இப்பொழுதோ திருப்பதியில் மொட்டைத் தலையனைக் கண்டாயா என்பதுபோல் யாரைப் பார்த்தாலும் கிராப்புத் தலையும் மூக்குக் கண்ணாடியுமாய்த் தான் விளங்குகின்றனர். ஆகவே இப்பொழுதெல்லாம் படித்தவனைக் கண்டு பிடிப்பதற்கு அடையாளம் அவன் கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றிப் பேசுகிறானா என்று கவனிப்பதுதான்.

படித்தவன் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றிப் பேசாமல் இருக்க மாட்டான். கிராம வாழ்க்கை சம்பந்த மாகத் தான் வாசித்த புஸ்தகங்களைப் பற்றிச் சொல்லாமல் இருக்க மாட்டான். மூன்று வயதுக் குழந்தையா யிருந்தபோது தன் பாட்டியைப் பார்ப்பதற்காகக் கிராமத்திற்குப் போன வைபவத்தைப் பற்றியும், தான் அப்பொழுது கண்டு களித்த கிராமக் காட்சிகளைப் பற்றியும் சொல்லாமல் இருக்க மாட்டான்.

ஆகவே, நானும் படித்தவன் என்று காட்டிக்கொள்வதற்காக, கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றி அநேக புஸ்தகங்கள் படித்தேன். அவற்றைப் படித்ததும் எனக்கு ஏதாவதொரு கிராமத்தைப் பார்த்துத்தான் ஆகவேண்டுமென்ற ஆவல் பீறிட்டுக்கொண்டு வந்தது. கிராமத்திற்குப் போய், கிராமப் புனருத்தாரண வேலை கொஞ்சம் செய்து விட்டு வரவேண்டுமென்றும் ஆசைப்பட்டேன். அதற்காக நான் என்னுடைய புஸ்தகங்களை யெல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு ஒரு கிராமத்தைப் பார்க்கச் சென்றேன்.

நான் கிராமத்திற்குப் போனதும் எனக்கு ஒரு பெரிய ஏமாற்றம் ஏற்பட்டது. கிராமங்களைப் பற்றி நான்

வாசித்த புஸ்தகங்களிலிருந்து கிராமங்கள் எல்லாம் வெகு துர்க்கந்தத்துடனும், குப்பை கூளங்களுடனும்தான் விளங்குமென்று எதிர் பார்த்தேன். ஆனால் அங்கு நகரங்களில் காணப்படுவது போல் நடு ரோட்டில் உருட்டி விடப்பட்ட குப்பைத் தொட்டிகளைக் காணோம். நகரங்களில் தென்படும் துர்நாற்றத்தையும் காணோம். இதற்கு எல்லாவற்றுக்கும் மேலாக நான் போன சமயத்தில் கிராமப் பஞ்சாயத்துக் கூட்டம் ஒன்று நடந்து கொண்டிருந்தது.

என்ன வாக்குவாதம் போங்கள்! கடைசியில், விசாரித்துப் பார்த்ததில் வாக்கு வாதத்தின் விஷயம் அப்படிப் பிரமாதமாய் ஒன்றுமில்லை. கிராமத்துக்கு அரை மைலுக்கு அப்பாலுள்ள காட்டுப் பிள்ளையார் கோவிலில் வருஷத்துக்கு ஒரு தடவை பிள்ளையார் சதுர்த்தி யன்று கொழுக்கட்டை நைவேத்தியம் நடக்குமாம். வழக்கம்போல் பத்துக் கொழுக்கட்டை நைவேத்தியம் பண்ணுவதா, அல்லது இந்த வருஷத்திலிருந்து ஒன்று சேர்த்துப் பதினொரு கொழுக்கட்டை நைவேத்தியம் பண்ணுவதா என்பதுதான் விவாதத்தின் விஷயம். அவர்கள் கொண்டு வந்த வாதப் பிரதி வாதங்களைக் கவனித்தபோது வீண் தர்க்கம் செய்வதில் நம் சென்னைக் கார்ப்பொரேஷன் அங்கத்தினர்கள் இவர்களிடம் பிச்சை வாங்க வேண்டும் என்றே தோன்றிற்று.

நான் கிராமப் புனருத்தாரணம் செய்வதற்காக வந்திருக்கிறேன் என்று தெரிந்ததும் அவர்கள் எல்லாரும் என்னை ஒரு விதமாகப் பார்த்தார்கள்.

"எத்தனை நாள் இங்கு இருக்கப் போகிறதாக உத்தேசம்?" என்று கேட்டார் ஒருவர்.

"ஒரு வாரம்." என்று பதில் அளித்தேன்.

"ஆமாம், ஹரிஹி! கிராமப் புனருத்தாரணம் என்றால் என்ன ஓய்?" என்று ஒருவர் இன்னொருவரைக் கேட்டார்.

“இது தெரியாதாங்காணும் உமக்கு! போன வருஷம் கூட ஒரு பென்ஷன் உத்தியோகஸ்தர் இங்கு வந்து விட்டு அடுத்த நாளே சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போகல்லே?”

“ஓ! அவரா! நம்ப கிணற்றுக்கெல்லாம் கம்பி வலை போடணும் என்று சொன்னாரே, அவரா?” என்று அவரை நினைத்து எல்லாரும் சிரித்தார்கள்.

மறு நாள் காலை சாப்பிட்டு விட்டு வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்து, என் புஸ்தகத்தை எடுத்து, “கிராம முன்னேற்ற ஊழியனின் முதல் வார வேலை” என்னும் அத்தியாயத்தைப் படிக்கத் தொடங்கினேன்.

இந்தப் புஸ்தகத்தை எழுதியவர் ஒரு வெள்ளைக்காரர். இவர் ஒரு தடவை இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் போகும்போது 'ம்பாய்த் துறைமுகத்தில் ஒரு நாள் தங்கியிருந்தார். நாம் இந்தியாவில் பிறந்து, இத்தனை வருஷங்களாக இங்கேயே வளர்ந்தும் இந்தியாவைப் பற்றி ஒரு புஸ்தகம் கூட எழுதத் தெரிந்து கொள்ளவில்லையே? ஆனால் அவர் சாமர்த்தியத்தைப் பாருங்கள்! என்ன இருந்தாலும் ஆங்கிலேயரல்லவா? ஆகவே இந்த ஒரு நாள் அனுபவத்தை வைத்துக்கொண்டு, ஆஸ்திரேலியாவிற்குப் போய்ச் சேர்வதற்குள் இந்தியாவைப் பற்றிப் பத்துப் புஸ்தகங்கள் எழுதித் தள்ளி விட்டார்!

அந்தப் பத்தில் ஒன்று கிராம முன்னேற்றத்தைப் பற்றியது. அதைத்தான் நான் அப்பொழுது வாசித்துக் கொண்டிருந்தேன். சாப்பிட்ட அசதியில் படிப்பு ஒன்றும் ஓடவில்லை. தென்றல் காற்றும் ஜில்லென்று வீசிற்று. சற்றுக் கண்ணை மூடினேன்.

* * * *

அந்தக் கிராமத்தின் மூலையில் ஒரு பிரம்மாண்டமான கூட்டம். கிராமத்து ஜனங்களெல்லோரும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். அப்பொழுது நாணு அய்யர் எழுந்திருந்து, “இக்கூட்டத்திற்கு நான் பெரிய பண்ணை சின்ன சாமி அய்யரைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்

கிறேன்" என்ருர். பெயர் சின்னசாமியா யிருந்தாலும் ஆசாமி ஒரு விதத்தில் பெரியசாமியாய்த்தா னிருந்தார். அவர் தனது தலைமைப் பீடத்தில் அமர்ந்ததும் தலைமை யுரையை ஆரம்பித்தார்:—

"மகா ஜனங்களே! இன்று நாம் இங்கு கூடியிருப்ப தின் நோக்கம் நீங்கள் எல்லாரும் அறிந்ததே. அது தான் நகரப் புனருத்தாரணம். நம் நாட்டில் எத்தனையோ நக ரங்கள் இருக்கின்றன. இவற்றில் எத்தனையோ ஆயிரக் கணக்கான ஜனங்கள் வசிக்கிருர்கள். ஆகவே நாடு சுய ராஜ்யம் அடையவேண்டுமானுல் கிராம வாசிகளாகிய நாம் எல்லாரும் நகரப் புனருத்தாரணம் செய்யவேண்டியது மிக மிக அவசியம். நம் பாரத நாட்டில் எத்தனை நகரங்கள் இருக்கின்றன, அவற்றின் ஜனத்தொகை என்ன என்ப தைப் பற்றி எல்லாம் நான் கணக்குப் போட்டு வைத்திருக் கிறேன். ஆகவே நாமெல்லாரும் நகரப் புனருத்தாரண வேலையை மேற்கொண்டோமானுல் நகரங்கள் உத்தாரண மாவதுடன், நாமும் தேசத்துக்கு நம் கடமையைச் செய் தவர்களாவோம். இப்பொழுது நமது நாணு அய்யர் நகர பரிபாலன வேலையை ஆரம்பிப்பது எப்படி என்பதைப் பற்றிப் பேசுவார்."

கரகோஷத்துக் கிடையே சின்னசாமி அய்யர் உட் கார்ந்தார். நாணு அய்யர் பேச எழுந்தார்.

"மகா ஜனங்களே! நான் என்னவோ அதிகம் சொல்லிவிடப் போவதாக நீங்கள் நினைத்து ஏமாருதீர்கள். என்னைவிட இவ்விஷயத்தைக் குறித்துத் தெரிந்த அநே கர் இந்த சதஸில் இருப்பார்கள். ஆகவே நான் ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் சொல்லிவிட்டு என் பேச்சை முடித் துக் கொள்ளுகிறேன். நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது 'நகர உத்தாரண முதல் வார வேலை' என் பதைப் பற்றி. நகர உத்தாரண வேலையை ஆரம்பிப்ப தற்கு முன் நீங்கள் மிகவும் கவனிக்க வேண்டியது இம் முதல் வார வேலையே. ஏனெனில் இதைப் பொறுத்துத் தான் இருக்கிறது, நீங்கள் உங்கள் உத்தாரண முயற்சி

யில் வெற்றி யடைவதும், அடையாததும். இந்த முதல் வார வேலையில் மாத்திரம் நீங்கள் வெற்றி யடைந்து விட்டீர்களானல், நீங்கள் இந்தப் பெரிய கட்டடத்திற்கு அஸ்தி வாரம் போட்டாற் போல. அஸ்தி வாரம் பலமா யிருந்தால் தானே கட்டடமும் பலமாக இருக்கும்? இன்னென்று. அஸ்திவாரம் போட்டு விட்டால் நாம் கட்டடத்தை எப்பொழுது வேண்டுமோ, அப்பொழுது அமைத்துக் கொள்ளலாம். ஆகவே இந்த அஸ்திவார விஷயத்தைப் பற்றி நான் இவ்வளவு தூரம் அஸ்திவாரம் போட்டுப் பேச வேண்டியதாயிற்று.'' இப்படிச் சொல்லிவிட்டு நாணு அய்யர் கீழே உட்கார்ந்தார்.

"இத்தனை நாழிகை நாணு அய்யர் நகரப் புனருத்தாரணத்திற்கு அஸ்திவாரம் போடுவதைப் பற்றிப் பேசினர். இனி மேல் நமது தீக்ஷிதர் அஸ்திவாரத்தின் மேல் கட்டடம் கட்டுவதைப் பற்றிப் பேசுவார்'' என்ருர் தலைவர்.

தீக்ஷிதர் எழுந்து, தம்முடைய உத்தரீயத்தைச் சரிப்படுத்திக் கொண்டு, ஒரு கனைப்புக் கனைத்து விட்டுப் பேசத் தொடங்கினர்.

"மகா ஜனங்களே! தலைவர் சின்னசாமி அய்யர், நான் என்னமோ கட்டடம் கட்டப்போவதாகச் சொன்ஞர். நான் இதுவரையில் கட்டடம் கட்டினது கிடையாது. முன்பு எனக்கும், என் தம்பிக்கும் பாகம் நடந்தபோது, காளிமுத்து ஆசாரி, ஒரு அறையின் நடுவில் ஒரு சுவரை எழுப்பி இரண்டாகத் தடுத்துக் கொடுத்தான். அப்பொழுது அதை அவன் எப்படிச் செய்கிருன் என்று கவனித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு பெரிய உண்மை புலப்பட்டது. அதாவது, ஆசாரி செங்கல்களை ஒவ்வொன்ருக எடுத்து அடுக்குகிருன் என்று தெரிந்து கொண்டேன். அதைப் போலவே இந்த நகரப் புனருத்தாரண வேலைக்குச் செங்கல்கள் என்று கருதும் சில விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

"முதலாவதாக, நகர வாசிகள் ஏதாவது வியாதி வந்தால் உடனே டாக்டரைத் தேடிக்கொண்டு ஓடுகிருர்கள்.

டாக்டரும் இதுதான் சமயமென்று பணத்தைக் கறந்து விடுகிறார். நமக்கும்தான் வியாதி வருகிறது. ஆனால் நாம் டாக்டரைத் தேடிக் கொண்டா ஓடுகிறோம்! வெங்கடாசல பதியை வேண்டிக் கொண்டு இரண்டணாவை முடிந்து வைத்தால் வியாதி தன்னைப்போல் பறந்து விடுகிறது. அப்படிப் பறக்காவிட்டால் அவனவனுடைய பிராரப்த கருமம். ஆகவே நகர வாசிகள் இந்த மாதிரி டாக்டரிடம் ஓடும் வழக்கத்தை ஒழிக்க வேண்டும். டாக்டரிடம் போவதனால் வியாதி குணமாகிவிடும் என்ற நம்பிக்கை பிறந்து விட்டால், தெய்வ நம்பிக்கை மிகவும் குறைந்து விடும்.

"இரண்டாவதாக, நகரவாசிகளிடம் உள்ள இன்னொரு கெட்ட குணத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். சாயந்திர வேளைகளில் நாம் எல்லாரும் பொழுது போக்குவதற்கு என்ன செய்கிறோம்? கோவில், குளத்துக்குப் போகிறோம்; அல்லது, வயல் வெளிகளுக்குப் போகிறோம். ஆனால் நகர வாசிகள் என்ன பண்ணுகிறார்கள்? சினிமாவுக்குப் போகிறார்கள்; அல்லது ரேடியோ கேட்கவேண்டுமென்கிறார்கள். மகா ஜனங்களே! இன்னொரு தமாஷைப் பார்த்தீர்களா? நமக்கெல்லாம் சாயந்திர வேளைகளில் பொழுது போகவில்லையாம். அதனால் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொள்ளுகிறோமாம். அதற்காகக் கிராமங்களில் ரேடியோ வைக்கப் போகிறார்களாம். மகா ஜனங்களே! இந்த ரேடியோச் சனியன் நமக்கு வேண்டாம். இந்த ரேடியோப் பித்துப் பிடிக்காமல் நாம் நகரவாசிகளைக் காப்பாற்றவேண்டும். இல்லாவிடில் நம் நகரங்கள் பாழடைந்து போய் விடுவது நிச்சயம்.

"ஜனங்களே! இந்த நகரப் புனருத்தாரண வேலையின் அம்சங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் இப்பொழுது ஒவ்வொன்றாக எடுத்துச் சொன்னால் கால தாமதமாகும்.

"மகா ஜனங்களே! நாம் நகரவாசிகளின் மேல் இரக்கம் கொள்ள வேண்டும். ஏனெனில் அவர்களும் ஒரு காலத்தில் நம்மைப்போல் கிராம வாசிகளாய் இருந்தவர்க

ளல்லவா? நாம் அவர்களைச் சீர்திருத்தினால் தான் நம் நாடு க்ஷேமமடையும்.

"இதற்காக அதிகப் பிரயாசை யொன்றும் தேவையில்லை. ஏனெனில், அதிர்ஷ்டவசமாக நகரங்களின் எண்ணிக்கை, கிராமங்களின் எண்ணிக்கையை விடக் குறைவு. பத்துக் கிராமத்துக்கு ஒருவர்முன் வந்தால்கூடப் போதும்; இந்த நகரப் புனருத்தாரண வேலையை வெகு துரிதமாகச் செய்துவிடலாம். இத்துடன் நான் என்னுடைய சிறிய பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிப் பலத்த கரகோஷத்தினிடையே உட்காரப் போனார் தீக்ஷிதர்.

அந்த சமயத்தில் தீக்ஷிதர் மனைவி அங்கு தோன்றி, "நன்னாப் பேசிண்டு, நின்னேள்! எருமை மாடு அவிழ்த்துண்டு ஓடிப் போயிடுத்து! அதைப் பிடித்துக் கட்ட ஆத்திலே ஒத்தர் இல்லை. எப்பொழுது பார்த்தாலும் இந்த நகரப் புனருத்தாரணத்தைப் பற்றித்தானா பேச்சு? அந்த நகரங்கள் நரகமாய்ப் போக!" என்று கை விரல்களைச் சொடுக்கினாள்.

தீக்ஷிதர், "உஸ்! கத்தாதே! எனக்கு மானம் போகிறது!" என்று கன்னத்தில் போட்டுக்கொண்டு எருமை மாட்டைத் தேடிப் பிடித்துக் கட்டுவதற்காகத் தம் மனைவியின் பின்னால் சென்றார்.

தீக்ஷிதர் போன பிறகு தலைவர் எழுந்திருந்தார். "இன்னும் யாராவது பேச விரும்புகிறீர்களா?" என்று கேட்டார். ஒருவரும் பதில் பேசாமல் இருக்கவே, தலைவர் தாமே பேச ஆரம்பித்தார்.

"மகா ஜனங்களே! இப்பொழுது பேசின இரண்டு பேர் பேச்சிலிருந்தே நகரப் புனருத்தாரணம் எவ்வளவு அவசியம் என்பதை நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். நகர வாசிகளை நாம் இப்படியே விட்டுவிட்டால் கொஞ்ச நாளில் அவர்களுடைய துர்ப் பழக்கங்கள் நமக்கும் தோன்றி, நம்முடைய சமூகமே நாளடைவில் அழிந்து போய்விடும்.

"நகர வாசிகளின் நிலைமை மிகவும் சீர்கேடா யிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனல் இந்த லட்சணத்தில் அவர்கள் நம்மை உத்தாரணம் செய்யக் கிளம்பி யிருக்கிருர்கள்! வேறு ஒரு உதாரணமும் வேண்டாம். நேற்று ஒரு பிள்ளையாண்டான் வந்திருக்கிருன், பார்த்தீர்களா, நம்மை யெல்லாம் உத்தாரணம் பண்ணுவதற்கு!"

இதைக் கேட்டதும் எல்லாரும் கொல்லென்று நகைத்தார்கள். அந்த நகைப்புச் சத்தத்தைக் கேட்டு நான் விழித்துக் கொண்டேன்.

* * * *

என் எதிரே கூட்டத்தையும் காணேம், ஒன்றையும் காணேம். ஆனல் நான் முதல் நாள் பார்த்த ஐந்தாறு கிராம வாசிகள் உட்கார்ந்து கொண்டு சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

"என்ன அய்யர்வாள்! புனருத்தாரண வேலை ரொம்ப பலமாக நடக்கிருப் போல இருக்கே" என்றுர் ஒருவர்.

அன்று சாயந்திரமே நான் அந்தக் கிராமத்தை விட்டுக் கம்பி நீட்டினேன்.

# கிராமத்திற்குப் போ!

டாக்டர் நஞ்சுண்ட ராவ், எம். பி. பி. எஸ்., முதலில் ஒரு சின்ன போர்டு போட்டுக் கொண்டுதான் தம்தொழிலை ஆரம்பித்தார். ஆனல் அவருக்கு வரும்படி ஒன்றும் வருவதாகக் காணேம்.

அதற்காக ஒரு பெரிய போர்டு ஒன்று தொங்க விட்டார். அப்பொழுதும் பிரயோசனமில்லை. பிறகு, இரண்டு போர்டு, மூன்று போர்டு. பிறகு அந்த போர்டுகளுக்குத் தனியாக மின்சார விளக்குகள். அதிலும், சிவப்பு, பச்சை, நீலம் என்று இதே மாதிரி பலநிறப்பட்ட பல்புகள். இந்த மாதிரி எத்தனையோ செய்து பார்த்தும், செலவுதான் அதிகமாயிற்றே யொழிய வரும்படி ஒன்றையுங் காணேம்.

ஒரு நாள் நஞ்சுண்ட ராவ், ஒரு பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தபோது அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்த பத்திரிகையில் ஒரு கூட்டத்தில் பேசின சில பெரிய மனிதர்கள் கூட்டத்தில் இருந்தவர்களை யெல்லாம் கிராமத்திற்குப் போகும்படி கேட்டுக்கொண்டதாகப் போட்டிருந்தது. அதை வாசித்துப் பார்த்ததும் அவருக்கு உடனே கிராமத்திற்குப் போகவேண்டுமென்று தோன்றவில்லை. ஆனல் அதற்குப் பதிலாகத் தம் நோயாளிகளைக் கிராமத்திற்குப் போகும்படி சொல்ல வேண்டும் என்று தோன்றிற்று.

கொஞ்ச நாளில் நஞ்சுண்ட ராவ் பெரிய பணக்காரராகி விட்டார். முன்பு தம் வாசலுக்கு முன் தொங்கவிட்டிருந்த போர்டுகளை யெல்லாம் ஒவ்வொன்ருகக் குறைத்து கடைசியில் போர்டே இல்லாமல் செய்து விட்டார். போர்டு இல்லாமல் 'பிராக்டிஸ்' செய்வதுதான் பெருமை யென்று எண்ணினர்.

அதோடு, நமது டாக்டர் ஜனங்களைக் கிராமத்துக்குப் போகச் சொல்வதிலும் ஒரு புதிய முறையைக் கையாண்

டார். நோயாளியைப் பரிசோதித்து, அவனுக்கு ஏற்ற கிராமமாகச் சொல்ல ஆரம்பித்தார். அவரிடம் வரும் நோயாளிகளுக் கெல்லாம் ஒரு சீட்டுக் கொடுக்கப்படும். அதில் நோயாளியின் உடம்பின் குண தோஷங்கள் எழுதப்பட்டு, கடைசியில் சிலர் வேண்டிக் கொள்வார்களே, "நான் குணசேகரத்தில் ஒரு மண்டலம் இருக்கிறேன், இரண்டு மண்டலம் இருக்கிறேன்" என்று, அதுமாதிரி, "தஞ்சாவூர்க் கிராமங்களில் எதிலாவ தொன்றில் 37 நாட்கள் இருக்க வேண்டும்" "கோயமுத்தூர் ஜில்லாக் கிராமங்களில் ஏதாவதொன்றில் 42½ நாட்கள் இருக்க வேண்டும்" என்று இது மாதிரி 'பிரிஸ்கிரிப்ஷன்' எழுதிக் கொடுப்பார். டாக்டரின் அதிர்ஷ்டமோ, அல்லது நோயாளிகளின் அதிர்ஷ்டமோ, அவர்கள் உடம்பும் குணமாகிக் கொண்டு வந்தது. டாக்டரின் பெயரும் பிரசித்தியாகிக் கொண்டு வந்தது.

ஒரு நாள் டாக்டரைப் பார்ப்பதற்கு ஒருவர் வந்து சேர்ந்தார். டாக்டர் அவரைப் பற்றிப் பூரா விவரங்களும் விசாரித்தார்.

"உம்முடைய பெயர் என்ன?"

"ராமகிருஷ்ணப் பிள்ளை."

"வயது?"

"42."

"தகப்பனர் பெயர்?"

"வேலுசாமிப் பிள்ளை."

"தாயார், தகப்பனர் இருக்கிறார்களா?"

"தாயார் இல்லை; தகப்பனர் இருக்கிறார்."

"உமக்கு என்ன உடம்பு?"

"நாளுக்கு நாள் பலஹீனமாகிக் கொண்டு வருகிறது."

"இந்தமாதிரி எத்தனை நாளாக இருக்கிறது?"

"சென்ற ஐந்து வருஷ காலமாய்."

"ஐந்து வருஷ காலமாய் வாயை மூடிக் கொண்டா இருந்தீர்?"

"வாயை மூடிக் கொண்டா இருப்பேன்? வாயைத் திறந்துதான் எத்தனையோ டானிக்குகள் சாப்பிட்டுப் பார்த்தேன்."

"சை! சை! சை! என்ன இருந்தாலும் நம் ஜனங்கள் மூட ஜனங்கள், ஸார்! டானிக் சாப்பிடுவதெல்லாம் பழைய காலம், இப்பொழுதுதெல்லாம் புதிய புதிய முறைகள் தான் கையாள வேண்டுமாக்கும்."

"அதற்காகத்தான் உங்களிடம் வந்தேன்."

"சரி, ஒன்று கேட்க மறந்து விட்டேனே..........உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?"

"ஆகிவிட்டது."

"குழந்தைகள் உண்டா?"

"உண்டு."

"சரி. இந்த மாதிரி எத்தனையோ பேர் வந்து என்னிடம் தங்கள் உடம்பைக் காட்டிவிட்டுப் போயிருக்கின்றனர். உங்களுக்கு மருந்து, மாயம், டானிக், கீனிக், ஒன்றும் தேவையில்லை. பேசாமல் ஒரு கிராமத்தில் போய் 41¾ நாட்களாவது வாசம் செய்தல் நலம். அப்பொழுது தான் உங்கள் உடம்பு குணமாகும்" என்றார் டாக்டர்.

இதைக் கேட்டு ராமகிருஷ்ணப் பிள்ளை கொல்லென்று சிரித்தார்.

"ஏன் ஸார் சிரிக்கிறீர்கள்? நான் சொல்லுவது உமக்குச் சிரிப்பா யிருக்கலாம். ஆனால் கிராமத்திற்குப் போவதை விட வேறு நல்ல வழி எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. எத்தனையோ பேர் என் சொற்படி கேட்டு உடம்பு தேறியிருக்கிறார்கள்" என்றார் டாக்டர்.

பிள்ளை, "சரிதான் ஸார். ஆனால் நான் இருப்பதே கிராமம்தானே? நான் பிறந்தது முதற்கொண்டு இந்த 42 வருஷங்களாக கிராமத்தில்தான் இருந்து வருகிறேன். இதுதான் முதல் தடவை நான் டவுனுக்கு வருவது" என்றார் பிள்ளை.

இந்தப் பதிலைக் கேட்டு, டாக்டர் திகைத்துப் போவார் என்று தான் பிள்ளை எண்ணினார். ஆனால் டாக்டர் சற்றுக்கூடத் திகைப்படையாமல், "அது சரிதான் ஸார். ஆனால் கிராமத்துக்குக் கிராமம் வித்தியாசம் கிடையாதா? உம்முடைய உடம்புக்கு நீர் திருச்சினாப்பள்ளி ஜில்லாவைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் வசித்தல்தான் நல்லது என்று நான் சொல்லுவேன். அதற்கு என்ன சொல்லுகிறீர்?" என்றார்.

ராமகிருஷ்ணப் பிள்ளை முன்னைவிட அதிகமாகச் சிரித்துக்கொண்டு "நான் ஆங்கரை கிராமத்தில் வசிக்கிறேன். அது திருச்சி ஜில்லாவைச் சேர்ந்ததுதான்!" என்றார்.

○☆○

# தபால் விநோதம்

தபால் இலாகாவைச் சம்பந்தப்பட்ட எதுதான் விநோதமா யில்லை? ஏன், அந்தத் தபால்காரனையே எடுத்துக் கொள்வோம். கடிதம் வந்திருக்கிறது, அல்லது அவன் தான் வந்திருப்பது இதைத் தெரிவிப்பதற்கு அவன் கூப்பிடும் குரல்கள்தான் எத்தனை விதம்? ஒவ்வொரு ஊரிலும் ஒரு விதம். ஒவ்வொரு தபால்காரனும் ஒரு விதம். "அம்மா, தபால்!" "அய்யா, தபால்!" "ஸார், தபால்" "தபால் ஸார்" "ஸார், போஸ்ட்மேன்!" "போஸ்ட் ஸார், போஸ்ட்!" "போஸ்ட்!" என்ற இந்தக் குரல்கள் விநோதமாயில்லையா?

ஏன், உங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் தபால் பெட்டியைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன்! அதில் உங்கள் கடிதத்தைப் போட நீங்கள் முயற்சி பண்ணி எப்பொழுதாவது வெற்றியடைந்த துண்டா? கடிதம் உள்ளே போய் விட்டதா என்று தெரிந்து கொள்வதற்காக நீங்கள் உங்கள் கையை உள்ளே விட்டு, அது சிக்கிக் கொண்டு ரோட்டில் போகிறவர்கள் எல்லாம் உங்களைப் பார்த்துச் சிரித்திருக்கிறார்களா, இல்லையா?

இதெல்லாம் போனால் போகிறது. நமக்கு வரும் கடிதங்களைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன்! அவற்றில் என்னென்ன விநோதங்கள் பொதிந்து கிடக்கின்றன! நாம் ஒரு கடிதத்துக்காக வெகு ஆவலாய்க் காத்துக்கொண்டிருப்போம். ஆனால் அந்தக் கடிதம்தான் வராது. இன்னொரு கடிதம் வரக்கூடாது, வரக்கூடாது என்று தபஸ் பண்ணிக் கொண்டிருப்போம். அந்தக் கடிதம்தான் திடுதிப்பென்று வந்து நிற்கும்.

ஆனால் நான் இங்கே குறிப்பிட விரும்பும் விநோதங்கள் இவற்றைப் பற்றியே அல்ல. ஒரு கார்டு வாங்குவ

தற்கோ, அல்லது ஒரு கவர் வாங்குவதற்கோ, அல்லது ஒரு மணியார்டர் அனுப்புவதற்கோ தபாலாபீசுக்குப் போனல் அங்கே நடக்கும் விநோதங்களைத் தான் குறிப்பிடப் போகிறேன்.

சமீபத்தில் ஒரு தபால் தலைமை யதிகாரி பத்திரிகை களில் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில் தபால் சிப்பந்திகள் பொது ஜனங்களை மரியாதை யில்லாமல் நடத்துகிறார்களென்றும், அவர்களுக்கு வேண்டிய உதவி யைச் செய்வதில்லை யென்றும், இனி மேல் அவர்களிடம் மிக மரியாதையுடன் நடந்துகொண்டு, வேண்டிய உதவி யைச் செய்ய வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார். அறிக்கைக்கு முன் நிலைமை எப்படி இருந்தது என்ப தையும், அறிக்கைக்குப் பின் அது எப்படி மாறலாம் என்பதையும் இங்கே சற்று விவரிக்கலாம் என்று நினைக் கிறேன்.

## அறிக்கைக்கு முன்

### 1

கிருஷ்ணசாமி நாயக்கர் ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக்கொண்டு லொங்கு லொங்கென்று ஓடி வருகிறார்.

"ஸார்! ஒரு மணியார்டர் பாரம் தாருங்களேன்!"
"கடைசி ஜன்னலில் கேளுங்கள், ஸார்!"
கடைசி ஜன்னலுக்குப் போகிறார்.
"ஸார்! ஒரு மணியார்டர் பாரம் தாருங்களேன்!"
"முதல் ஜன்னலில் கேளுங்கள்."
முதல் ஜன்னலுக்கு ஓடுகிறார்.
"நடு ஜன்னலில் கேளுங்கள்."
நடு ஜன்னலுக்கு நடக்கிறார்.
"இங்கிருந்து மூன்றாவது ஜன்னலில் கேளுங்கள்."

இப்படியாக ஜன்னலுக்கு ஜன்னல். கடைசியாகத் தாம் முதல் முதலில் கேட்ட ஜன்னலுக்கே வந்து சேர் கிறார்.

"என்னய்யா, நான்தான் முதல் ஜன்னலுக்குப் போகச் சொன்னேனே?"

"இல்லே ஸார்! இங்கே தான் வாங்கிக்கொள்ளச் சொன்னார்கள்."

"சரி, இந்தாரும், எடுத்துக்கொண்டு தொலையும். காலையிலிருந்து இந்தக் கழுத்தறுப்புத்தான்."

## 2

குப்புசாமிப் பிள்ளை ஒரு தந்தி பாரத்தை எடுத்துக் கொண்டு தந்தி யடிப்பதற்காக ஓடி வருகிறார். "ஸார்! ஸார்! இந்தத் தந்தியைக் கொஞ்சம் அனுப்புங்கள். என் மனைவிக்கு உடம்பு சரியா இல்லை. ஊருக்குத் தந்தி யடிக் கணும்" என்கிறார். ஆனால் தந்தி கிளார்க் இதை யெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல் ஒரு 'கோமளத்தின் கொலை'யிலோ, அல்லது ஒரு 'மங்களபுரி மர்ம'த்திலோ ஆழ்ந்திருக்கிறார். "ஸார்! ஸார்! கொஞ்சம் தயவு பண்ணுங்கள் ஸார்!" என்று குப்புசாமி பிள்ளை கதறுகிறார். ஆனால் அந்த ஆசாமி இதை யெல்லாம் கவனிக்காமல் தாம் வாசித்துக் கொண்டிருந்த அத்தியாயம் முடிந்த பிறகு, ஒரு பெருமூச்சு விட்டு, "என்னய்யா இது, காரியமா யிருக்கிற போது தொந்தரவு படுத்துகிறீர்? நீர் வந்த உடனேயே கொடி கட்டிப் பறக்கணும் என்கிறீரா, என்ன?" என்று கோபித்துக் கொள்கிறார்.

## 3

தபாலாபீஸ் மூலையில் எழுதுவதற் கென்று ஒரு பெஞ்சி போடப்பட்டிருக்கிறது. ஆனால் அதை யாரும் உபயோகிப்பதில்லை. ஏனெனில் அதற்கு இரண்டு கால் ஊனம். நாம் யாராவது அதில் உட்கார்ந்தால் அதன் மற்ற இரண்டு கால்களையும் உடைப்பதோடு கூட நம் இரண்டு கால்களையும் உடைத்துக்கொள்ள வேண்டியதுதான். அதற்காக எல்லாரும் வராந்தாவில் நின்றுகொண்டு கடிதத்தைச் சுவரில் வைத்துக் கொண்டு எழுதிக் கொண்டிருப் பார்கள். அதோடு கூட இவர்கள் எழுதும் கார்டின் நிறத்

துக்கும் தபாலாபீஸ் சுவரின் நிறத்துக்கும் வித்தியாசமில்லாததால் கவனக் குறைவாகச் சுவரிலும் எழுதிக்கொண்டு போவதுண்டு. அதோடுகூட யாராவது எழுதிக் கொண்டிருந்தால் அவரைச் சுற்றிப் பத்துப் பேர் நின்று கொண்டிருப்பார்கள். எதற்கு? அவர் உபயோகித்துக் கொண்டிருக்கும் பேனுவையோ, பென்சிலேயோ இரவல் வாங்கிக் கொள்ளத்தான்.

4

ராமசாமி நாயுடு அவசர அவசரமாகத் தாம் போட்டிருக்கும் சேவிங்ஸ் பாங்கியிலிருந்து பணம் எடுப்பதற்காக வருகிறார்.

"சேவிங்ஸ் பாங்கி" என்று போட்டிருக்கும் ஜன்னலில் ஒரே கூட்டமாயிருக்கிறது. காரணம் என்ன என்று விசாரித்ததில் சேவிங்ஸ் பாங்கி கிளார்க்கு டிபன் சாப்பிடப் போயிருக்கிறார் என்று தெரியவருகிறது. ராமசாமி நாயுடு ஒரு மணி நேரம் காத்துப் பார்க்கிறார். குமாஸ்தா வருவதாகக் காணோம். கூட்டமும் அதிகரித்துக்கொண்டே போகிறது. கடைசியில் கிளார்க்கு வந்து சேர்கிறார். கூட்டத்தினர் நான் முந்தி, நீ முந்தி என்று அடித்துக் கொள்கின்றனர். அவ்வளவுதான். குமாஸ்தா கோபித்துக் கொண்டு ஜன்னல் கதவைச் சாத்திக்கொண்டு போய் விடுகிறார். ராமசாமி நாயுடு பணம் வாங்காமலே திரும்ப வேண்டி வருகிறது.

## அறிக்கைக்குப் பின்

1

கிருஷ்ணசாமி நாயக்கர் முன்போல் ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு ஓடி வருகிறார்.

"சார்! ஒரு மணியார்டர் பாரம் தாருங்களேன்!"

"மணியார்டர் பாரமா, ஸார்! இதோ தருகிறேன், ஸார்! எல்லாம் உங்களுக் கில்லாத மணியார்டர் பாரமா ஸார்!"

ஐந்து நிமிஷம் கழித்து "இங்கே ஒரு பாரம் கூடக் காணோம், ஸார். தயவு செய்து முதல் ஜன்னலில் கேட்கிறீர்களா? அல்லது நானே கேட்டு வாங்கித் தரட்டுமா?"

"இல்லே ஸார், நானே கேட்டு வாங்கிக் கொள்கிறேன்."

முதல் ஜன்னலுக்குப் போகிறார்.

"மணியார்டர் ப்ாரமா ஸார்! உங்களுக்கு இல்லாததா, ஸார்! இதோ தருகிறேன், ஸார்."

ஐந்து நிமிஷம் கழித்து, "இங்கே ஒரு பாரம் கூடக் கிடையாது ஸார்! தயவுசெய்து கடைசி ஜன்னலில் கேட்கிறீர்களா, அல்லது நானே கேட்டு வாங்கித் தரட்டுமா?"

இந்த மாதிரி முன் போலவே ஜன்னலுக்கு ஜன்னல் தாவுகிறார். மணியார்டர் பாரம் கிடைக்காவிட்டாலும் மரியாதை எதேஷ்டமாகக் கிடைக்கிறது.

## 2

குப்புசாமிப் பிள்ளை முன் போலவே ஒரு தந்தி பாரத்தை எடுத்துக் கொண்டு தந்தி யடிப்பதற்காக ஓடி வருகிறார். தந்தி கிளார்க்கும் முன் போலவே தான் "கோமளத்தின் கொலை"யிலோ அல்லது ஒரு "மங்களபுரி மர்மத்"திலோ ஆழ்ந்திருக்கிறார். ஆனால் அவர் வாயினின்றும் அது என்ன, தேனா பொழிகின்றது?

"தந்தியா, ஸார்! இதோ வந்துட்டேன் ஸார்! இதோ வந்துட்டேன்!"

கதைப் புஸ்தகத்தை வாசித்துக் கொண்டே போகிறார். பத்து நிமிஷம் கழித்து, குப்புசாமிப் பிள்ளை பக்கம் திரும்பிப் பார்க்கிறார்.

"தந்தியா ஸார்! தந்தியா! இதோ வந்து விட்டேன், ஸார்! இதோ வந்து விட்டேன்."

இது மாதிரி பத்துத் தடவை நடக்கிறது. கடைசியில் அவர் வாசித்துக்கொண்டிருந்த புஸ்தகமோ, அல்லது அத்தியாயமோ முடிகிறது.

"தந்தியா! இதோ வந்து விட்டேன். ரொம்ப நாழி காத்துக்கொண்டிருந்தீர்களோ! அடடடடடா! என்னைக் கூப்பிடக் கூடாதோ, ஸார்!"

## 3

முன் போலவேதான் தபாலாபீஸ் சுவரில் காகிதத்தை வைத்துக்கொண்டு எல்லாரும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது போஸ்ட்மாஸ்டர் அவர்களைப் பார்க்கிறார். "ஏன் ஸார்! எல்லாரும் நிற்கிறீர்கள்? அதோ பெஞ்சி போட்டிருக்கிறதே. அதில் உட்காரக் கூடாதோ! கீழே விழுந்து விடுவோம் என்று பயப்படாதீர்கள், ஸார்! எல்லாம் ரிப்பேர்ப் பண்ணியாய் விட்டது" என்கிறார்.

அந்த பெஞ்சி சற்று ஸ்தூல சரீரமான ஒருவருக்கே இடம் கொடுக்குமோ என்பது சந்தேகமா யிருக்கும் பொழுது, போஸ்ட் மாஸ்டர் எல்லாரையும் அதில் உட்கார்ந்து எழுதும்படி சொன்னால் அவர்கள் கேட்பார்களா? ஒருவராவது நகருவதாகக் காணோம்.

"எழுதுவதற்குப் பேனாகூட வைக்கப் பட்டிருக்கிறது, ஸார்" என்று மேலும் சொல்கிறார் போஸ்ட் மாஸ்டர்.

"அப்படியா!" என்று தைரியமாக ஒருவர் போய் உட்காருகிறார். என்ன ஆச்சரியம்! போஸ்ட் மாஸ்டர் சொன்னதுபோல் பேனா அங்கு இருக்கிறது! ஆனால்!.... ஆனால்....பேனாவில், நிப்பு இல்லை; மைக்கூண்டில் மை இல்லை.

## 4

ராமசாமி நாயுடு அவசரம் அவசரமாகத் தாம் போட்டிருக்கும் பணத்தை சேவிங்ஸ் பாங்கியிலிருந்து எடுப்பதற்காக வருகிறார். முன்போலவேதான் கூட்டமா யிருக்கிறது. ஆனால் முன்போல் சேவிங்ஸ் பாங்கி கிளார்க்கு டிபன் சாப்பிட, கீப்பிட ஒன்றும் போகவில்லை. ஆனால் அறிக்கையின் பிரகாரம் வராந்தாவில் போய்க் கொண்டிருக்கிறவர்களை யெல்லாம் தாமே வலுவில் கூப்பிட்டு உபசரித்துக் கொண்டிருக்கிறார்.

"வாங்கோ, ஸார்! வாங்கோ ஸார்! என்ன கார்டு வேண்டுமா! முதல் ஜன்னலுக்குப் போங்கள்!"

"வாங்கோ, ஸார்! வாங்கோ ஸார்! என்ன தந்தியடிக்கணுமா! கடைசி ஜன்னலுக்குப் போங்கள்!"

"வாங்கோ, ஸார்! வாங்கோ ஸார்! என்ன பார்ஸலா! பக்கத்து ஜன்னலுக்குப் போங்கள்!"

இந்தமாதிரி தம்மைத் தேடி வந்தவர்களை யெல்லாம் விட்டுவிட்டு பாக்கி எல்லாரையும் விசாரித்துக் கொண்டிருக்கிறார். இதற்குள் இவர் ஜன்னலண்டை கூட்டம் அதிகரிக்கிறது. கடைசியில் மணி மூன்றானதும், "நாளைக்குத்தான். நான் என்ன பண்ணுவேன்? மூன்று மணி வரையில் தான் நான் இந்த ஜன்னலைத் திறந்து வைத்திருக்கலாம்" என்கிறார்.

* * * *

இந்த சமயத்தில் யாரோ வாசலில் கத்தும் சப்தம் கேட்டது. "அம்மா! தபால்! அம்மா! தபால்!" என்று தபால்காரன் கத்தும் சப்தம் கேட்டது. சரி, மாமனார்தான் நாம் எழுதிக் கேட்டபடி பணம் அனுப்பி யிருக்கிறாரோ என்று ஆவலுடன் வாசலுக்கு ஓடினேன். ஆனால் அதற்குப் பதிலாக அவர் என்னை பணம் இருந்தால் அனுப்பும்படி எழுதி யிருந்தார்!........தபால் விநோதங்களில் இதுவும் ஒன்று!

# முறைதான் வித்தியாசம்

அன்று காலை அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் என்னைப் பார்ப்பதற்கு வந்தார். வரும் பொழுதே அவர் மூகம் மூன்ரும் பேஸ்து வைத்தவன் மூஞ்சி மாதிரி இருந்தது. நான் அப்பொழுதுதான் காப்பி சாப்பிட்டுவிட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். என்னைக் கண்டதும், "என்ன போங்கோ, ஸார்" என்று 'சூ'க் கொட்டினர்.

"என்ன அண்ணுசாமி அய்யர்! என்ன சமாசாரம்?" என்றேன்.

"நான் அப்பவே ஒற்றைக் காலில் நின்றேன் காணும்!"

"எதற்கு?"

"மூடியவே மூடியாது என்று கதறினேன்."

"?"

"கத்து, கத்து என்று கத்தினேன்."

"?"

"கிணற்றில் விழுந்து விடுவேன் என்று பயமுறுத்தினேன்; வீட்டை விட்டு ஓடி விடுவேன் என்று வீறிட்டேன்."

"?"

"ஆனால் யாராவது நான் சொன்னதைக் கேட்டால் தானே? என் கழுத்தில் கொண்டு வந்து கட்டி விட்டார்கள்."

"என்ன ஐயா? ஏதாவது புரியும்படி சொன்னல் அல்லவா தேவலே?"

"இரும், ஐயா, இரும்! அதுதான் சொல்லிக்கொண்டு வருகிறேனே? அந்தக் காலத்தில் நான் கல்யாணமே

வேண்டாம் என்று பிடிவாதம் பிடித்தேன் காணும். எங்கப்பா கேட்டாரா? இன்றைக்கு இவளைக் கட்டிக்கொண்டு கஷ்டப்படுவது நானா, எங்கப்பாவா?"

"ஆமாம், என்ன சமாசாரம்? சற்று ஆச்வாசப் படுத்திக்கொண்டு சொல்லுமே?"

"சொல்வதற்கு என்ன ஐயா இருக்கிறது? எவன் சொன்னது அது, சம்சாரமா சாகரமா என்று? அவன் வாயில் சர்க்கரைதான் போடவேண்டும்."

"யுத்தம் முடியட்டும், சர்க்கரையும் கிடைக்கட்டும், அப்பொழுது போடலாம். இப்பொழுது சமாசாரத்தைச் சொல்லும்."

"சமாசாரம் என்ன ஐயா சமாசாரம்? எல்லாம் நம் சம்சாரத்தைப் பற்றிய சமாசாரம்தான். அப்பாடா! ஒரு புருஷனை என்னவென்று ஆட்டி வைக்கிறாள்! ஒரு காரியம் நம் இஷ்டமாய்ச் செய்ய முடிகிறதில்லை.

நான் ஏதாவது கறிகாய் வாங்கிக் கொண்டு வந்தால், இது சொத்தை, இது சொள்ளை என்று என் மூஞ்சி மேலேயே வீசி எறிகிறாள். காலையில் எழுந்து, ராத்திரி தூங்குகிற வரைக்கும், சில சமயம் நான் தூங்கின பிறகு கூட, அவள் ஏதாவது சொல்லிக்கொண்டு இருப்பாள். நான் என்ன காரியம் செய்தாலும் சரி, அதைப் பற்றிக் குற்றம் சொல்லாவிட்டால் அவள் மண்டை நூறு சுக்காக உடைந்து விடும். நாழி கழித்து வந்தால், ஏன் நாழி கழித்து வந்தாய்; சீக்கிரம் வந்தால் ஏன் சீக்கிரம் வந்தாய்; ஏதாவது வாங்கிக்கொண்டு வந்தால், ஏன் வாங்கிக் கொண்டு வந்தாய்; வாங்காவிட்டால், ஏன் வாங்கவில்லை—என்று இந்த மாதிரி நம் கழுத்தை அறுத்துக் கொண்டிருந்தால் நாம் என்றுதான் சுகப்படுகிறது? இதற்காகத்தான் ஐயா, நான் அப்பொழுதே கல்யாணம் வேண்டாம் என்று பிடிவாதம் பிடித்தேன். எல்லாருக்கும் சம்சாரங்கள் வாய்த்திருக்கிறார்களே, இப்படியா இருக்கிறார்கள்?"

பாவம், அண்ணுசாமி ஐயருக்கு அழுகை வந்துவிட்டது. துண்டை எடுத்துக் கண்ணைத் துடைத்துக் கொண்டார். நான் அவரைச் சமாதானப் படுத்த ஆரம்பித்தேன்.

" அண்ணுசாமி ஐயர் ! உங்களுக்கு உலகம் இன்னும் தெரியவில்லை. அதனுல்தான் இதைப் பெரிய விஷயமாகக் கருதி என்னிடம் குறைப்படுகிறீர். எல்லாம் வீட்டுக்கு வீடு வாசற்படி. அங்கங்கே அப்படி அப்படித்தான் இருக்கிறது. என்னைக் கேட்டால், உலகில் புருஷனை அதிகாரம் பண்ணுத சம்சாரமே கிடையாது என்று கூறுவேன். பகவானே ஸ்திரீகளை அப்படிச் சிருஷ்டித்திருக்கும்போது நாம் என்ன செய்யலாம்? ஆனல் ஒரு வித்தியாசம். அங்கங்கே அதிகாரம் பண்ணுகிற முறைதான் வித்தியாசமா யிருக்கும்."

" இந்த வயிற்றெரிச்சலுக்கு முறை வேறேயா ?"

" ஆமாம் ஐயா ! ஆமாம் ! நான் இதை யெல்லாம் பொருட்படுத்துவது கிடையாது. போயும் போயும் நம் சம்சாரம்தானே ஐயா நம்மைக் கோபித்துக் கொள்கிருள் ? தெருவில் போகிற யாரும் நம்மைக் கோபித்துக் கொள்ளவில்லையே ? ஆபீசுக்குப் போனல் துரை நம்மை என்ன பாடு படுத்துகிருன் ? என்ன அதிகாரம் பண்ணுகிருன் ? அவனுக்கு இருக்கும் சுதந்திரம் நம் மனைவிக்கு நம்மிடம் கிடையாதா, என்ன ? அதுவும் வீட்டிலேயே இருந்து வேலைகளைச் செய்து கொண்டிருப்பவர்களுக்குச் சற்று கோபம் வரத்தான் செய்யும். புருஷர்களாகிய நாம்தான் சற்றுத் தணிந்து போனல் என்ன கெட்டுப் போகிறது ? இன்னும்........"

இந்தச் சமயம், " இந்தாங்கோ, உங்களைத்தானே !" என்று என் மனைவி என்னைக் கூப்பிடும் குரல் கேட்டது. " இதோ வந்து விட்டேன் " என்று அண்ணுசாமி அய்யரிடம் சொல்லிவிட்டு உள்ளே சென்றேன்.

என் மனைவி என்னைக் கூடத்தில் எதிர்கொண் டழைத்தாள். " நான் சமையல் கிமையல் பண்ணணுமென்று

எண்ணமா, வேண்டாமென்று எண்ணமா? இப்படித் திண்ணையில் உட்கார்ந்து வம்பளந்துகொண்டிருந்தால் கறிகாய் யார் வாங்கிக்கொண்டு வருகிறது என்று நினைத்துக் கொண்டேள்?''

''என்ன இது, காப்பி சாப்பிட்டு விட்டுச் சற்றுத் திண்ணையில் உட்கார்ந்ததற்காகப் பிரமாதமாக அதிகாரம் பண்ணுகிறாயே?''

''ஆமாம், நான்தான் உங்களை அதிகாரம் பண்ணுகிறேன்! இன்னும் ஒத்த ரொத்தர்போல் இருந்தால் நீங்கள் என்ன சொல்வீர்களோ! நான் என்ன உங்களைப் பாவி என்கிறேனா, பரப்பானென்கிறேனா? நாழி கழித்து வந்தால் ஏன் நாழி கழித்து வந்தேள் என்கிறேனா? ஏதாவது கண்ட கறி காயை வாங்கிக் கொண்டு வந்து நின்றால், ஏன் இதை வாங்கிக் கொண்டு வந்தேள், அதை வாங்கிக் கொண்டு வந்தேள் என்கிறேனா? மாசா மாசம் தங்கைக்குப் பணம் மணியார்டர் பண்ணுகிறேளே, ஏன் பண்ணுகிறேள், என் தங்கைக்குப் பணம் அனுப்பு என்று கேட்கிறேனா? இல்லை, என் தம்பிக்குப் பணம் அனுப்பு என்கிறேனா? சினிமாவுக்குக் கூட்டிக்கொண்டு போகக்கூடாதா என்கிறேனா? டிராமாவுக்குக் கூட்டிகொண்டு போகக் கூடாதா என்கிறேனா?........'' என்று இப்படி அடுக்கிக் கொண்டே போனாள்.

நான் கூடத்தில் இருந்தவாறே வாசல் திண்ணையைப் பார்த்தேன். அண்ணாசாமி அய்யர் ஆறுதலான முகத்துடன் தம் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். நான் குறிப்பிட்ட முறை வித்தியாசம் என்ன என்பதை அவர் தெரிந்து கொண்டு விட்டார் என்பது அவர் முகத் தோற்றத்திலிருந்து விளங்கிற்று.

○ ☆ ○

# முனிசிபாலிட்டி கடிதங்கள்

அப்பாடா! இந்த வாயாடிபுரம் முனிசிபாலிட்டியுடன் வாயாட யாரால்தான் முடியும்! அதற்காகத்தான் நான் அதற்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டிய விஷயங்களை யெல்லாம் கடித மூலமாகவே அறிவிப்பது என்று தீர்மானித்தேன்.......அப்பாடா! கடிதம் எழுதி எழுதிக் கை சளைத்துவிட்டது. அதற்கு நான் எழுதிய கடிதங்களையும், அது எனக்குப் பதில் அனுப்பிய அழகையும் கீழே கொடுத்திருக்கிறேன். நீங்களே வாசித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

வாயாடிபுரம் முனிசிபல் சேர்மன் தூங்குமூஞ்சி ராவ் அவர்களுக்கு, நடுத்தெரு நாலாம் நம்பர் வீட்டிலிருக்கும் "நாடோடி" எழுதிக் கொள்வது.

2—1—37

ஐயா,

இந்த முனிசிபாலிட்டியால் ஜனங்களுக்கு உபகாரம் ஒன்று மில்லாவிட்டாலும், உபத்திரவம் அதிகமாக இருக்கிறது. போயும் போயும் உங்கள் குப்பைத் தொட்டியை வைக்க என் வீட்டு வாசல்தானா அகப்பட்டது? நீங்கள் குப்பைத் தொட்டியை என் வீட்டு வாசலில் வைத்தாலும் வைத்தீர்கள், ஊர் எச்சில் இலையெல்லாம் என் வீட்டுத் திண்ணையில்தான்! தங்கள் வீட்டுத் திண்ணையில் இருந்து கொண்டே ஜனங்கள் எச்சில் இலையைக் குறிபார்த்து எறிகிறார்கள். அது குப்பைத் தொட்டியில் விழாமல் என் வீட்டுத் திண்ணையில்தான் விழுகிறது. அப்படித் தப்பித் தவறி ஜனங்கள் குப்பைகளை அந்தத் தொட்டியில் போட்டாலும், போடும்போது அந்தக் குப்பைத் தொட்டியை வாசலில் உருட்டி விட்டுப்போய்விடுகிறார்கள். நான் வீட்டைவிட்டு வெளியே போக நேர்ந்தாலும், அல்லது வெளியே யிருந்து வீட்டிற்குள் வர நேர்ந்தாலும், வேஷ்டியைக் கச்சம் கட்டிக்

கொண்டு ஒரு "ஹை ஜம்ப்" செய்யவேண்டி யிருக்கிறது. இந்த விஷயத்தைக் குறித்து நீங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறீர்களா? இல்லையா?

இப்படிக்கு,
"நாடோடி"

**நடுத்தெரு நாலாம் நம்பர் வீட்டிலிருக்கும் "நாடோடி" அவர்களுக்கு, வாயாடிபுரம் முனிசிபல் சேர்மன் தூங்குமூஞ்சி ராவ் எழுதிக்கொள்வது.**

13—3—37.

ஐயா,

தங்கள் வீட்டிற்கு எதிரில் இருக்கும் குப்பைத் தொட்டியைப் பற்றி எங்கள் எஞ்சினியருக்கு எழுதிக் கேட்டதில், அவர் அதைப் பரிசீலனை செய்ததாகவும், அதில் ஒரு பழுதும் இல்லையென்றும் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

இப்படிக்கு,
தூங்குமூஞ்சி ராவ்.

**வாயாடிபுரம் முனிசிபல் சேர்மன் தூங்குமூஞ்சி ராவ் அவர்களுக்கு, நடுத்தெரு நாலாம் நம்பர் வீட்டிலிருக்கும் "நாடோடி" எழுதிக் கொள்வது.**

14—3—37.

ஐயா,

தங்கள் கடிதம் இன்று காலை கிடைத்தது. உங்கள் பெயருக்கேற்ப நான் 2-1-37-ல் எழுதின கடிதத்துக்கு இரண்டரை மாதங்கள் கழித்துப் பதில் போட்டிருக்கிறீர். நீங்கள் குப்பைத் தொட்டியைப் பரிசீலனை செய்தால் என்ன, செய்யாவிட்டால் என்ன? நான் கொடுக்கவேண்டிய முனிசிபல் வரி பாக்கி ரூ. 4-3-11-க்கு மாத்திரம், ஆளுக்கு மேலே ஆள், நோட்டீசுக்கு மேலே நோட்டீசு அனுப்புவீர்களே தவிர, இந்தக் குப்பைத்தொட்டியை எடுப்பதற்கு ஒரு முயற்சியும் எடுத்துக்கொள்ள மாட்டீர்கள். குப்பைத் தொட்டியை எடுக்கப் போகிறீர்களா, அல்லது அதை நானே உதைத்து எறிந்து விடட்டுமா?

இப்படிக்கு,
"நாடோடி"

நடுத்தெரு நாலாம் நம்பர் வீட்டிலிருக்கும் "நாடோடி" அவர்களுக்கு, வாயாடிபுரம் முனிசிபல் சேர்மன் தூங்குமூஞ்சி ராவ் எழுதிக் கொள்வது.

15—3—37.

ஐயா,

தாங்கள் நேற்று எழுதிய கடிதம் கிடைத்தது. நாங்கள் ரொம்பவும் நாள் கழித்துப் பதில் போடுவதாக அதில் கண்டிருக்கிறீர்கள். அதனால்தான் கடிதம் கிடைத்தவுடனேயே பதில் எழுத ஆரம்பித்துவிட்டேன்.

தாங்கள் கொடுக்கவேண்டிய முனிசிபல் வரி பாக்கி ரூ. 4-3-11ப் பற்றி உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததைப் பற்றி மிகச் சந்தோஷம். அதைத் தீர்ப்பதற்குச் சீக்கிரம் ஏற்பாடு பண்ணவும்.

இப்படிக்கு,
தூங்குமூஞ்சி ராவ்.

வாயாடிபுரம் முனிசிபல் சேர்மன் தூங்குமூஞ்சி ராவ் அவர்களுக்கு, நடுத்தெரு நாலாம் நம்பர் வீட்டிலிருக்கும் "நாடோடி" எழுதிக் கொள்வது.

16—3—37.

ஐயா,

வரவர இந்த முனிசிபாலிட்டியில் வாழ்வதை விட, தூக்குப் போட்டுக்கொண்டு செத்துப் போய்விடலாம் என்று தோன்றுகிறது. நீங்கள் அந்தக் குப்பைத் தொட்டியை எடுக்க ஏதாவது முயற்சி செய்யப் போகிறீர்களா, அல்லது நானே அதை உதைத்துத் தள்ளி விடட்டுமா?

இப்படிக்கு,
"நாடோடி"

நடுத்தெரு நாலாம் நம்பர் வீட்டிலிருக்கும் "நாடோடி" அவர்களுக்கு, வாயாடிபுரம் முனிசிபல் சேர்மன் தூங்குமூஞ்சி ராவ் எழுதிக் கொள்வது.

1—4—37.

ஐயா,

தாங்கள் செலுத்த வேண்டிய முனிசிபல் வரி பாக்கி ரூ. 4-3-11ப் பற்றி 15-3-37-ல் நாங்கள் எழுதின கடிதத்

திற்கு இதுவரையில் பதிலைக் காணோம். நீங்கள் அதைச் செலுத்த ஏதாவது ஏற்பாடு செய்யப் போகிறீர்களா, இல்லையா?

இப்படிக்கு,
**தூங்குமூஞ்சி ராவ்.**

**வாயாடிபுரம் முனிசிபல் சேர்மன் தூங்குமூஞ்சி ராவ் அவர்களுக்கு, நடுத்தெரு நாலாம் நம்பர் வீட்டிலிருக்கும் "நாடோடி" எழுதிக் கொள்வது.**

2—4—37.

ஐயா,

நான் 16-3-37-ல் எழுதின கடிதத்திற்குப் பதிலைக் காணோம். அந்தக் குப்பைத் தொட்டியை எடுக்கப் போகிறீர்களா, இல்லையா?

இப்படிக்கு,
**"நாடோடி"**

**நடுத்தெரு நாலாம் நம்பர் வீட்டிலிருக்கும் "நாடோடி" அவர்களுக்கு, வாயாடிபுரம் முனிசிபல் சேர்மன் தூங்குமூஞ்சி ராவ் எழுதிக் கொள்வது.**

3—4—37.

ஐயா,

நீங்கள் கொடுக்கவேண்டிய வரிப் பணம் பாக்கி ரூ. 4-3-11-க்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்போகிறீர்களா, இல்லையா?

இப்படிக்கு,
**தூங்குமூஞ்சி ராவ்.**

அடேயப்பா! தலை சுழல்கிறது. இந்த மாதிரி நான் குப்பைத் தொட்டியைப் பற்றி எழுதின கடிதத்துக் கெல்லாம் அந்தத் தூங்குமூஞ்சி ராவ் வரிப் பணத்தைப் பற்றி எழுதிக்கொண்டே யிருந்தார். அவர் குப்பைத் தொட்டியை எடுத்த பாடும் இல்லை; நான் வரி கொடுத்த பாடும் இல்லை. அந்தக் குப்பைத் தொட்டியை உதைத்து உதைத்து என் கால்தான் சுளுக்கிக்கொண்டு விட்டது. நான் தினம் தினம் அதை உதைத்துத் தள்ளவேண்டியது

தான்; ஒவ்வொரு நாளும் கர்ம சிரத்தையாக யாரோ அதை இருந்த இடத்தில் கொண்டு வந்து வைத்து விடுகிறார்கள்!

நேற்றுத்தான் வரிப் பணத்தைப் பற்றி ஒரு கடிதம் வந்தது. எனக்கு இருந்த ஆத்திரம் சொல்லி முடியாது. இந்த இழவெடுத்த முனிசிபாலிட்டிக்கு இனிமேல் என்னால் எழுத முடியாது என்று தீர்மானித்தேன். ஆனால் அதை மூஞ்சியில் அடித்தாற்போல் அந்தத் தூங்குமூஞ்சி ராவிடம் எப்படித் தெரிவிப்பது? அதற்குப் பின்வரும் முறையைக் கையாண்டேன்:

**வாயாடிபுரம் முனிசிபல் சேர்மன் தூங்குமூஞ்சி ராவ் அவர்களுக்கு, நடுத்தெரு நாலாம் நம்பர் வீட்டிலிருக்கும் "நாடோடி" எழுதிக்கொள்வது.**

24—10—37.

ஐயா,

இப்படிக்கு,
**"நாடோடி"**

இந்தக் கடிதத்தை அவருக்கு அனுப்பிவிட்டேன். தூங்குமூஞ்சித் தடியர்! அவரை இப்படி அவமானப் படுத்தியதோடுகூட, அவர் எழுதிய கடிதங்களையெல்லாம் அதே குப்பைத் தொட்டியில் எறிந்து விட்டேன்.

○☆○

# காலணு வாண்டுகள்!

[ஒரு நாணயக் குடும்பம். தகப்பனர் வெள்ளையப்பர் சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறார். அவர் மனைவி அரை ரூபாய் அம்மாள் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிருள்.]

**அரை ரூபாய் அம்மாள் :** இது என்ன பத்திரிகையோ! தினம் பொழுது விடிந்தால் இதை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விடுகிறீர்கள். வீட்டுக் காரியமா, கவலையா ஒன்று கிடையாது!

**வெள்ளையப்பர் :** எதற்காகத் தினம் இப்படி என் கழுத்தை அறுக்கிருய்? என்னை என்ன பண்ணச் சொல்றே?

**அரை :** என்ன பண்ணச் சொல்றேனுவது? இப்படித் துளிக்கூட வீட்டுக் கவலை யில்லாமல், எப்பொழுது பார்த்தாலும் பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டால் நான் பொம்மனுட்டி, ஒண்டிக்காரி என்ன பண்ணுவேன்? உங்கள் பேரப் பிள்ளைகளான காலணு வாண்டுகளைக் கொஞ்சம் கண்டித்து வையுங்கோ என்று அடித்துக் கொண்டேன். நீங்கள் துளிக்கூடக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இப்ப என்னடான்னு, கொஞ்ச நாளாக இந்தப் பசங்கள் வெளியில் போனல் திரும்பி வருகிறதில்லை. யார் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிருர்களோ, தெரியவில்லை.

**வெள்ளை :** அதற்கு என்னை என்ன பண்ணச் சொல்றே?

**அரை :** என்ன பண்ணச் சொல்றேனுவது! அவர்களைச் சற்றுத் தேடிப் பார்த்து விட்டு வாங்கோன்னு --

**வெள்ளை :** இதற்குக் கூட என் கழுத்தை அறுக்க வேண்டுமா, என்ன? உன் பிள்ளைகள் நாலணு, இரண்

டணு, ஓரணு இவர்கள் மூவரும் என்ன வெட்டி முறிக்கிறார்கள்? அவர்களைப் போகச் சொல்லேன்!

அரை: நாலணுவும், இரண்டணுவும் எங்கே தொலைந்தார்களோ, தெரியாது. வீட்டில் ஓரணுத்தான் இருக்கிறான். பாவம், கொஞ்ச நாட்களாக அவன் தன் பிள்ளைகளான காலணுக்களைத் தேடித் தேடி யலைந்து நாயாய்க் கறுத்து விட்டான்.

வெள்ளை: பாவம், அவனைப் பார்த்தால் எனக்கும் ரொம்ப வருத்தமாகத்தான் இருக்கிறது. 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்று பெரியவர்கள் சொல்வது உண்மைதான். ஆனால் இந்தப் பசங்கள், காலணுவாண்டுகள் நாம் சொன்னபடி கேட்டால்தானே? "அட பசங்களா! வெளியிலே போகாதேங்கடா, கீழ் சகவாசம் வேண்டாண்டா, எவனாவது பிடித்துக்கொண்டு போய் விடுவாண்டா" என்று நானும் படித்துப் படித்துச் சொன்னேன். ஒருவனாவது கேட்டால்தானே? எனக்கு வெளியில் கிடைக்கும் மரியாதையைப் போலத்தான் இருக்கிறது, வீட்டில் கிடைக்கும் மரியாதையும்.

அரை: எதற்காக இப்படிச் சொல்றேள்? இப்ப என்ன உங்களுக்கு மரியாதை குறைந்துவிட்டது?

வெள்ளை: இன்னும் என்ன குறையவேண்டும் என்கிறாய்? இந்த யுத்தம் வந்தாலும் வந்தது, என் மதிப்பே போய் விட்டது. இப்பொழுது எனக்குப் பதிலாக நோட்டு வேறு வந்து விட்டதால் ஜனங்கள் என்னைப் பற்றிக் கவலையே படுவது கிடையாது. உனக்குத்தான் தெரியுமே, முன்னெல்லாம் இப்படியா இருந்தேன்? வெளியில் போனால் எவ்வளவு சாமான்கள் வாங்கிக் கொண்டு வருவேன்? கடைக்குப் போய் நின்றால், என் முக தாக்ஷண்யத்துக்காக ஐந்து படி அரிசி அள்ளிக் கொடுப்பான். இப்பொழுது என்னடா என்றால் இரண்டேகால் படி அரிசி கொடுக்க முக்கால் முனகுகிறான். முன்னெல்லாம் நாலு கஜம் துணி கொடுத்த கடையில் இப்பொழுது ஒரு கஜம் துணி கொடுக்க யோசனை பண்ணுகிறான். இந்தக் காப்பிக்

கொட்டைக்கு வந்த கிராக்கியைப் பாரேன்! முன்னெல் லாம் என்னைப் பார்த்தால் முக்கால் வீசை கொட்டை கொடுத்து அனுப்பின கடையில், இப்பொழுது காலே யரைக்கால் வீசை கொடுக்கக் கணக்குப் பார்க்கிறான். 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' என்னும் விஷயம் மிக வும் நிஜமாகப் போய் விட்டது. நான் செயலாக இருந்த வரையில் எல்லாம் என்னைச் சுற்றிக் கொண்டு திரிந்தார் கள். இப்பொழுது இருக்கிறாயா, போனாயா என்று கேட் கக் கூட ஆள் கிடையாது.

[பெருமூச்செறிகிறார்.]

அரை: ஏன் இப்படிக் குறைப்பட்டுக் கொள்ளுகிறீர் கள்? உங்களுக்கு இப்பொழுது என்ன வந்து விட்டது?

வெள்ளி: இன்னும் என்ன வர வேண்டும் என்கிறாய்? எனக்குப் போட்டியாக நோட்டு ஒன்று வந்து விட்டதே, அது போதாதா? என் தேஜஸ் மங்கி விட்டதே, அது போதாதா? முன்னெல்லாம் எந்தத் தேதியிலும் முக் கால் ரூபாய் பெறுமானத்துக்குக் குறையாத வெள்ளி என் கையில் இருக்கும். நானும் கிணீர், கிணீர் என்று எல்லா ருடனும் மிகச் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தேன். இப்பொழுது சர்க்கார் என்னிடமிருந்த வெள்ளியில் பெரும் பகுதியைப் பிடுங்கிக் கொண்டுவிட்டார்கள். நானும் வெளி யில் தலையைக் காட்ட வெட்கப் பட்டுக்கொண்டு வீட்டோ டேயே இருக்கிறேன். ஈச்வரா! என் கதி இப்படியா ஆக வேண்டும்!

[வருத்தப்படுகிறார்.]

அரை: எதற்காக இப்படி வருத்தப் படறேள்? உங் களுக்கு யார் மதிப்பு வைத்தால் என்ன, வைக்கா விட்டால் என்ன? நான் வைத்திருக்கிறேனா, இல்லையா? நான் என்றைக்கும் தங்களில் பாதியாக, தங்கள் 'அர்த்தாங்கி' யாகத்தானே இருக்கிறேன்? தங்கள் சுக துக்கங்களில் சரி பாதியை நான் ஏற்றுக் கொண்டுதானே வருகிறேன்? வீணாக ஏன் கவலைப் படுகிறீர்கள்?

**வெள்ளை**: குழந்தையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டின கதையைப்போல இருக்கிறது உன் செய்கை! இந்தக் கவலைகளையெல்லாம் மறந்து பத்திரிகையில் ஈடுபட்டிருந்த என்னை நீயாக வம்புக்கு இழுத்து என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டதல்லாமல் கண்ணை வேறு துடைக்கிறாய். சரி, உனக்கு என்ன வேண்டும், சொல்லித் தொலை.

**அரை**: போய் அந்தக் காலணா வாண்டுகளைச் சற்றுத் தேடி விட்டு வாங்கோன்னா—

**வெள்ளை**: என்னை எங்கே என்று போய்த் தேடச் சொல்லுகிறாய்?

**அரை**: நான் என்னத்தைக் கண்டேன்? பஸ்ஸிலும் டிராமிலும் ஏறி ஊர் முழுவதும் சுற்றி யலைந்து தேடிப் பாருங்களேன்!

**வெள்ளை**: அந்தப் பசங்களாவது, இப்பொழுது அகப்படுகிறதாவது! யார் பிடித்துப் பூட்டி வைத்திருக்கிறார்களோ! சரி, நான் என்ன சொன்னாலும் நீ கேட்க மாட்டாய். நீ சொன்னபடி நான் ஆடா விட்டால் உனக்கு மூக்குக்கு மேலே கோபம் வந்து விடும். சரி, இந்தக் காலணாப் பசங்களில் மூன்று பேரைக் கூட அனுப்பு. போய்த் தேடி விட்டு வருகிறேன்.

**அரை**: கூட இந்தக் காலணா வாண்டுகள் எதற்காக? நீங்கள் ஒருவர் போனால் போதாதோ!

**வெள்ளை**: விடிய, விடிய ராமாயணம் கேட்டு விட்டு, சீதைக்கு ராமன் என்ன வேண்டும் என்று கேட்கிறாயே! இத்தனை நாழி என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்? எனக்கு யாரும் மதிப்பு வைப்பது கிடையாதென்றால் இந்தப் பஸ்காரனும் டிராம்காரனும் மட்டும் மதிப்பு வைப்பானா? அவனுக்கும் என்னைக் கண்டால் எளக்காரம் தான். நான் தனியாகப் போனால் வண்டியில் ஏற்றிக் கொள்வதில்லை. கூட இந்தப் பசங்கள் இருந்தால்தான் ஏற்றிக் கொள்கிறான். வழியில் காப்பி சாப்பிடுவதற்காக

ஹோட்டலுக்குள் நுழைவோம் என்ருல் கூட, "இந்தப் பசங்களைக் கூடக் கூட்டிக்கொண்டு வந்தால் வா; இல்லாவிடில் வராதே" என்று போர்டு போட்டுவிட்டான். என்னமோ போ! எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. சரி, நாழியாகிறது. நீ வீட்டைப் பார்த்துக்கொள். நான் போய் விட்டு வருகிறேன். டேய், பேரப் பசங்களா! மூணு பேர் என் கூட வாங்கடா!

[திரை.]

○☆○

# டாக்டரும் டாக்டரும்

ஓர் ஊரில் டாக்டர் ராமன், டாக்டர் கிருஷ்ணன் என்ற இரண்டு டாக்டர்கள் இருந்தார்கள். டாக்டர் ராமனைக் கண்டால் டாக்டர் கிருஷ்ணனுக்குப் பிடிக்காது; டாக்டர் கிருஷ்ணனைக் கண்டால் டாக்டர் ராமனுக்குப் பிடிக்காது.

"நமக்குப் போட்டியாக வந்து முளைத்து விட்டாரே இந்த ராமன்" என்று டாக்டர் கிருஷ்ணன் நினைத்தார். அதே மாதிரிதான் டாக்டர் ராமனும் டாக்டர் கிருஷ்ணனைப் பற்றி நினைத்தார். இதனால் இவர்கள் இருவருக்கும் இடையே விரோதம் வளர்ந்தது; ஒருவரைப் பற்றி ஒருவர் தூஷிக்க ஆரம்பித்தார்கள்.

"டாக்டர் ராமனா! அவருக்கு என்ன தெரியும்? எப்படியோ காப்பி யடித்து டாக்டர் பரீட்சை கொடுத்து விட்டார். 'தர்மாமீட்டர்' என்றால் என்னவென்று தெரியுமா என்று கேளும்" என்பார் டாக்டர் கிருஷ்ணன். இதற்குப் பதிலாக டாக்டர் ராமன், "டாக்டர் கிருஷ்ணனா! அவருக்கு என்ன தெரியும்? ஏதோ சிபார்சின் மேல் பரீட்சை தேறிவிட்டார். 'ஸ்டதாஸ்கோப்' என்றால் எப்படி இருக்கும் என்று அவருக்குத் தெரியுமா?" என்பார்.

இதனால், இரண்டு பேருக்குமே கஷ்டம் விளைந்தது. டாக்டர் ராமன் சொல்வதைக் கேட்டு ஜனங்கள் டாக்டர் கிருஷ்ணனை ஆதரிப்பதை நிறுத்தினர். அதே மாதிரி டாக்டர் கிருஷ்ணன் சொன்னதைக் கேட்டு டாக்டர் ராமனையும் நிராகரித்தனர். இரண்டு பேருடைய 'ப்ராக்டி'சுக்கும் ஒரு பெரிய முற்றுப் புள்ளி வைக்க வேண்டியதாயிற்று.

ஒரு நாள் டாக்டர் ராமன் தம்முடைய நிலைமையைப் பற்றி ஆலோசித்தார். "டாக்டர் கிருஷ்ணனைத் தூஷிக்கப் போகத்தானே அவரும் என்னைத் தூஷிக்க ஆரம்பித்தார்? அதனால் அல்லவா 'ப்ராக்டிஸ்' போய் விட்டது?" என்று

வருத்தப்பட்டார். சரி, டாக்டர் கிருஷ்ணனைக் கண்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்வது என்று புறப்பட்டார்.

அதே சமயத்தில் டாக்டர் கிருஷ்ணனும் தம்முடைய நிலைமையைப் பற்றி யோசித்து, அவரும் அதே மாதிரியான முடிவுக்கு வந்தார்.

இரண்டு பேரும் ஒரு காப்பி ஹோட்டலுக்கு எதிரே சந்தித்தார்கள். காப்பி சாப்பிட்டுக்கொண்டே பேசுவது என்று தீர்மானித்து உள்ளே நுழைந்தார்கள். உள்ளே நுழைந்தவர்கள் பேசினார்கள், பேசினார்கள், அப்படிப் பேசினார்கள். பேச்சு ஸ்வாரஸ்யத்தில் காப்பி கூடக் குடிக்க மறந்து விட்டார்கள். கடைசியில் ஹோட்டலை விட்டு வெளியே வந்ததும், விடை பெற்று அவரவர் வீட்டை நோக்கிப் போய் விட்டார்கள்.

அன்றிலிருந்து ஒரு மாறுதல் ஏற்பட்டது. இரண்டு டாக்டர்களுடைய பெயர்களும் கொஞ்சம் கொஞ்சமாகப் பிராபல்யமடைய ஆரம்பித்தன. கொஞ்சம் கொஞ்சமாக நோயாளிகள் இரண்டு டாக்டர்களையும் தேடிக்கொண்டு போக ஆரம்பித்தார்கள். நாளடைவில் அந்த ஊருக்குள்ளேயே மிகவும் பிரபல டாக்டர்கள் இவர்கள் இரண்டு பேரும்தான் என்று பெயர் வாங்கி விட்டார்கள்.

இப்படி இவர்கள் முன்னுக்கு வந்ததற்குக் காரணம் என்ன? டாக்டர் ராமன் வீட்டுக்குப் போய்ப் பார்த்தால் காரணம் விளங்குமா என்று பார்ப்போம்.

இதோ டாக்டர் ராமன் வீடு. வீடு என்று சொல்லக் கூடாது, பங்களா என்று சொல்ல வேண்டும். ஒருவர் தம் குழந்தையை வைத்துக்கொண்டு டாக்டருக்கு முன்னல் நின்று கொண்டிருக்கிறார். டாக்டர் தம் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துச் சுழற்றிக் கொண்டே ஏதோ யோசிக்கிறார். இதோ வாயைத் திறந்து பேசவும் ஆரம்பித்து விட்டார்.

“ஆம், டாக்டர் கிருஷ்ணனிடம் குழந்தையைக் காண்பித்தீர்களோ?”

"இல்லையே."

"அடடடா! இந்த வியாதிக்கு வைத்தியம் செய்வதில் அவரைப் போல் கெட்டிக்காரர் வேறு ஒருவரும் கிடையாதே, ஐயா!"

தகப்பனார் பேசாமல் நிற்கிறார்.

"டாக்டர் கிருஷ்ணனையும் ஆலோசித்துக் கொண்டு தான் நான் ஏதாவது மருந்து கொடுக்க முடியும். ஏதாவது ஆபரேஷன் செய்யவேண்டி யிருந்தாலும் செய்யவேண்டி யிருக்கும். ஆனால் ஆபரேஷன் கேஸுக்கும் அவர்தான் கெட்டிக்காரர். என்னைக் கேட்டால் நீங்கள் உடனேயே டாக்டர் கிருஷ்ணனிடம் குழந்தையை எடுத்துக் கொண்டு செல்வதுதான் நலம் என்று சொல்வேன்" என்கிறார்.

அவ்வளவுதான்! தகப்பனார் குழந்தையை எடுத்துக் கொண்டு டாக்டர் கிருஷ்ணன் பங்களாவுக்கு ஓடு, ஓடு என்று ஓடுகிறார். டாக்டர் கிருஷ்ணன் வைத்தியம் செய்ய ஒப்புக் கொள்ளுகிறார். குழந்தைக்கு உடம்பு சொஸ்தமாகிறது. டாக்டர் கிருஷ்ணன் நிஜார் பாக்கெட்டிலும் ஐம்பது ரூபாய் பணம் போய்ச் சேருகிறது.

"இது என்ன, டாக்டர் ராமனுக்குப் பயித்தியமா, என்ன? இம்மாதிரி ஐம்பது ரூபாய் 'கேஸை' வேண்டாம் என்று டாக்டர் கிருஷ்ணனுக்குக் கொடுத்து விட்டாரே" என்று யோசிக்கிறீர்களோ? இதற்குப் பதில் வேண்டுமானால் டாக்டர் கிருஷ்ணன் பங்களாவுக்குப் போக வேண்டும்.

இதோ டாக்டர் கிருஷ்ணன் காதில் 'ஸ்டதாஸ்கோப்'பை வைத்துக்கொண்டு தமக்கு எதிரே இருக்கும் ஒரு வயதான நோயாளியைப் பரிசோதிக்கிறார். பிறகு 'ஸ்டதாஸ் கோப்'பைக் கழுத்தில் மாலையாக மாட்டிக் கொண்டு ஏதோ யோசனை செய்கிறார்.

"ஆம், டாக்டர் ராமனிடம் உடம்பைக் காண்பித்தீர்களா?"

"இல்லை; நேரே இங்கே வந்தேன்."

"அடடடே! இந்த வியாதிக்கு அவர்தான் 'எக்ஸ் பர்ட். இந்த வியாதியை அவர் பார்த்துச் சொஸ்தப்படுத் தினல்தான் உண்டு. என்னைக் கேட்டால் நீங்கள் உடனே அவரிடம் போய் உடம்பைக் காண்பித்தால்தான் நல்லது" என்கிறார்.

அவரும் டாக்டர் ராமனிடம் போகிறார். டாக்டர் ராம னுக்குப் 'பீஸ்' கிடைக்கிறது.

இம்மாதிரி அந்த டாக்டர் இந்த டாக்டரைப் புகழ, இந்த டாக்டர் அந்த டாக்டரைப் புகழ, இரண்டு பேருக்கும் புகழும், கூடவே செல்வமும் அதிகரித்துக் கொண்டு வரு கின்றன. வருமானம் ஒருவருக்கு அதிகம், ஒருவருக்குக் குறைச்சல் என்று இல்லாமல் இரண்டு பேர் வரும்படியை யும் ஒன்று சேர்த்து, ஆளுக்குப் பாதியாக எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

* * * *

இந்தக் கதையை எனக்குத் தெரிந்த எழுத்தாளர் ஒரு வரிடம் படித்துப் பார்க்கும்படி கொடுத்து, "எப்படி இருக் கிறது?" என்று கேட்டேன். "ஆஹா! அப்படியே செய்கிறேன்" என்று சம்பந்தம் இல்லாமல் பதில் அளித் தார். எனக்கு விஷயம் விளங்கவில்லை. "கதை எப்படி இருக்கிறது? தேவலையா?" என்று மறுபடியும் கேட் டேன். "அதற்கு என்ன! அப்படியே செய்கிறேன்" என்று தலையை ஆட்டினார்.

அப்பொழுதுதான் எனக்கு விஷயம் விளங்கிற்று. நானும், "அப்படியே செய்கிறேன்" என்று தலையை வெகு பலமாக ஆட்டி வைத்தேன்.

அன்றிலிருந்து அந்த எழுத்தாளரின் கதைகளை நான் போன இடமெல்லாம் புகழ்ந்து கொண்டு வருகிறேன். ஆனல் அவர் அப்படிச் செய்து கொண்டு வருகிறாரோ, என்னமோ, எனக்குத் தெரியாது.

○☆○

# கால வித்தியாசம்-1

## முன் காலத்தில்

**நசிகேதன் :** குணபால! என் கஷ்டத்தை என்னவென்று உரைப்பேன்! தாயைத் தேடி அலையும் கன்றைப் போல அலைந்து திரிகிறேன். என்னைச் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும் குருவைக் கண்டிலேன்!

**குணபாலன் :** பிரிய நண்ப நசிகேத! மனம் கலங்க வேண்டாம். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதை நீ அறியாயோ? பகவானுடைய அனுக்கிரகத்தினால் உனக்கு ஒரு குரு சீக்கிரமே கிடைப்பார்.

**நசி:** ஏது! இந்த ஜன்மத்தில் அத்தகைய பாக்கியம் எனக்குக் கிட்டாது என்றே நினைக்கிறேன். எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? போன ஜன்மத்தில் பசுவையும் கன்றையும் பிரித்து வைத்திருப்பேன், அதுதான் இந்த ஜன்மத்தில் என்னையும் என் குருவையும் பகவான் பிரித்து வைத்திருக்கிறார்.

**குண :** ஏன் இப்படி வருத்தப் படுகிறாய்? வசிஷ்ட மகா முனிவரைப் போய்ப் பார்ப்பதுதானே?

**நசி:** பார்த்தேன்! ஆனால் அவருக்கு ராஜ காரியங்கள் அதிகமாக இருப்பதால் யாரையும் சிஷ்யனாக எடுத்துக் கொள்ள முடியாது என்று கண்டிப்பாகக் கூறி விட்டார்.

**குண :** விசுவாமித்திரர்?

**நசி:** அவர்தான் கொஞ்ச காலமாக நிஷ்டையில் இருக்கிறாரே!

**குண :** காசியபர் தம் சிஷ்யர்களை மிகவும் அன்புடன் நடத்துகிறார் என்று கேள்விப்படுகிறேனே! அவரைப் போய்ச் சரண் அடைவது தானே?

நசி: காசியபரா? ஐயோ, பாவம்! அவர் எத்தனை சிஷ்யர்களை வைத்துக் கொண்டுதான் சமாளிப்பார்? நூற்றுக் கணக்கான சிஷ்யர்களை வைத்துக் கொண்டு அவர் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார். இதில் நான் வேறு போய்ச் சேர்ந்து அவருக்குச் சிரமம் கொடுக்க இஷ்டப்படவில்லை.

குண: பின் என்னதான் செய்யப் போகிறாய்?

நசி: எனக்கே ஒன்றும் புரியவில்லை. எல்லாம் நம்முடைய **கால வித்தியாசம்.** இல்லாவிடில் சற்குருவை அடைந்து நான் சுகமாக இருக்க மாட்டேனா?

## இக்காலத்திலோ!

**ராமசாமி ஐயர்:** என்ன கிருஷ்ணசாமி ஐயர்! உம் மார்க்கத்தில் ஏதாவது 'டியூஷன்' இருந்தால் பிடித்துக் கொடுமே!

**கிருஷ்ணசாமி ஐயர்:** டியூஷனுக்கு நான் எங்கே ஐயா போகிறது! நானே ஒரு டியூஷனுக்காக 'அலை' 'அலை' என்று அலைகின்றேன், ஒருவனும் கிடைத்த பாடில்லை.

**ராம:** என்ன போங்கள்! வாத்தியார் பிழைப்பே சுத்த மோசமாய்ப் போயிடுத்து!

**கிருஷ்:** மோசமா! சுத்த 'பேபார்சா' போயிடுத்து என்று சொல்லும்.

**ராம:** நானும் நாலு மாதமாக ஒவ்வொரு பையன் வீடாக நுழைந்து நுழைந்து புறப்பட்டு, 'டியூஷன் வேண்டுமா, டியூஷன் வேண்டுமா' என்று கேட்டுக்கொண்டு வருகிறேன். எவனாவது டியூஷன் வைத்துக் கொண்டால் தானே! நம்மைப் பார்க்கிறதற்கு முன்னால் முகத்தில் அடித்தாற்போல் டியூஷன் தேவையில்லை என்று சொல்லி விடுகிறார்கள்!

**கிருஷ்:** தேவலையே! நீர் அதிர்ஷ்டசாலிதான் ஐயா!

ராம: அதிர்ஷ்டமா! என் அதிர்ஷ்டத்தை நீர்தான் மெச்சிக்கொள்ளவேண்டும்.

கிருஷ்: அப்படி இல்லை, ஸ்வாமி. இங்கே நிலைமை உம்முடையதை விட மோசம் என்கிறேன். உமக்காவது டியூஷன் வேண்டாம் என்று ஒரே யடியாய்ச் சொல்லி விடுகிறார்கள். இங்கே அப்படி இல்லை. "நாளைக்கு வா, இன்றைக்கு வா" என்று நாற்பது தடவை அலைக் கழித்த பிறகு தேவை யில்லை என்று கையை விரிக்கிறார்கள்.

ராம: என்ன போங்கள், வெளியில் சொல்லிக் கொள்ள வெட்கக் கேடாய் இருக்கிறது. முன் காலத்தில் எல்லாம் குருவைத் தேடிக்கொண்டு சிஷ்யர்கள் போவார்கள் என்று கேள்விப்பட் டிருக்கிறேன். இப்பொழுது என்னடா என்றால் சிஷ்யர்களைத் தேடிக்கொண்டு நாம் போகவேண்டி யிருக்கிறது!

கிருஷ்: என்ன பண்ணலாம், கால வித்தியாசம்!

○☆○

# அட நாராயணா!

**நா**ன் சங்கீதம் என்றால் சிலரைப்போல் தூக்கு என்ன விலையென்று கேட்கமாட்டேன். படி என்ன விலை, கஜம் என்ன விலை என்று இம்மாதிரி ஏதாவது புதிய முறையில்தான் கேட்பேன். சங்கீதத்தில் எனக்கு அவ்வளவு ஞானம்! அதற்காக நான் ரொம்ப நாளாக சரசு என்ன கேட்டும் கிராமபோன் பெட்டி வாங்கித் தர முடியாது என்று சொல்லிக் கொண்டே வந்தேன். ஆனால் மனைவியின் பேச்சை அவ்வளவு எளிதில் தட்டிவிட முடியாது என்று கலியாணமான நண்பர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆகவே சரசு கடைசியில் என்னை எப்படியோ ஒரு கிராமபோன் பெட்டியும், அத்துடன் ஒரு இருபது பிளேட்டுகளும் வாங்கும்படி செய்து விட்டாள்.

ஒவ்வொருவர் ஒரு கிராமபோன் பெட்டி வாங்கி விட்டால் பலே பிசுக்காரம் செய்து கொள்கிறார்களே, நான் அப்படியெல்லாம் இருப்பதில்லை. என் கிராமபோன் பெட்டியையாவது அல்லது கிராமபோன் பிளேட்டுகளையாவது இரவல் கொடுக்கத் தயங்குவதே யில்லை. கிராமபோன் வீட்டில் இருந்தால் பிளேட்டுகள் இரவல் போயிருக்கும். பிளேட்டுகள் வீட்டில் இருந்தால் கிராமபோன் இரவல் போயிருக்கும். இல்லாவிடில் இரண்டும் இரவல் போயிருக்கும்.

ஒரு தடவை இந்த மாதிரிதான் கிராமபோன் பெட்டி வீட்டில் இருந்தது, பிளேட்டுகள் இரவல் போயிருந்தன. அந்தச் சமயத்தில் மயிலாப்பூரிலிருந்து என் நண்பன் சர்மா வந்து சேர்ந்தான். அவன் எனக்கு நேர் எதிரிடை. பாட்டு என்றால் போதும், பசி, தாகம் என்று கவனிக்காமல் நாள் முழுவதும் பாட்டு கேட்டுக் கொண்டே யிருக்கத் தயார்.

அன்று என் நண்பன் மிகவும் குஷியாகக் காணப்பட்டான். "இன்று ஒரு நூறு பாட்டுக்களாவது கேட்டால்

தான் என் மனது திருப்தியடையும்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

"அடடா! பிளேட்டெல்லாம் இரவல் போயிருக்கிறதே" என்றேன்.

"நான் உன்னையே நம்பி வந்துவிட்டேன் என்று நினைத்துக் கொள்ளாதே. இதோ பார்! சமயத்தில் உன்னிடம் பிளேட்டுகள் கிடைக்காதென்று தெரியும்" என்று தன்னுடன் கொண்டு வந்திருந்த ஒரு கட்டுப் பிளேட்டுகளைக் காண்பித்தான்.

"சரி, அதையே வைத்துக் கொள்ளேன்."

"இது போதாது. நீ போய் உன் பிளேட்டுகளை வாங்கிக்கொண்டு வா. அது வரையில் நான் இவற்றை வைத்துக்கொண் டிருக்கிறேன்" என்ருன்.

சரியென்று நான் நாணு வீட்டைத் தேடிக்கொண்டு போனேன். ஏனெனில் நாணுவிடம் தான் நான் பிளேட்டுகளை இரவல் கொடுத்திருந்தேன். நான் போனபோது நாணு வீட்டில் இல்லை.

"நாணு! நாணு!" என்று நாலு குரல் கூப்பிட்டேன்.

"அவர் வெளியே போயிருக்கிருர்" என்று உள்ளேயிருந்து ஒரு குரல் வந்தது.

"எப்ப வருவாரோ?"

"இன்னும் அஞ்சு நிமிஷத்தில் வந்து விடுவார்."

நான் நாணு அய்யருக்காக, ஒரு ஐந்து நிமிஷம் அல்ல, இரண்டு ஐந்து நிமிஷம் அல்ல, மூன்று ஐந்து நிமிஷம் காத்துப் பார்த்தேன். நாணு வந்த பாடில்லை.

"நாணு வர இன்னும் நாழியாகுமோ?" என்று கேட்டேன். உள்ளே யிருந்துகொண்டு நாணுவின் மனைவி தன் ஒரு வயதுக் கைக் குழந்தையைப் பார்த்து, "அம்பி! அப்பா வருவதற்கு இன்னும் நாழியாகும் போலிருக்கு. அவருக்கு என்னவேண்டும் என்று கேளு" என்று என்

காதில் படும்படி சொன்னாள். அந்த ஒரு வயது அம்பி இந்த சமாசாரத்தை என்னிடம் வந்து சொல்வதற்கு நான் காத்திராமல், "இல்லை. நான் கிராமபோன் பிளேட்டு கொடுத்திருக்கிறேன். அதை வாங்கிக்கொண்டு போக வந்தேன்" என்றேன்.

"பிளேட்டுகளா! அப்பவே சொல்லக்கூடாதோ அம்பி! பிளேட்டுகளை யெல்லாம் அவர் சிநேகிதர் ராமு வந்து சற்றுக் கேட்டார். அவரிடம் கொடுத்தார் என்று சொல்லுடா" என்றாள்.

நான் உடனே ராமுவைத் தேடிச் சென்றேன். நல்ல வேளையாக ராமு இருந்தான். ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு கிராமபோன் வைத்துக்கொண்டிருந்தான். "ராமு! நீ பிளேட்டு அப்புறம் வைத்துக்கொள்ளலாம். சர்மா வந்து கழுத்தையறுக்கிறான். என் பிளேட்டுகளைக் கொடேன்" என்றேன்.

"உன் பிளேட்டுகளா! அவை இங்கே ஏது? இதெல்லாம் நான் புதுசாக வாங்கிக்கொண்டு வந்ததாக்கும்!"

"நீ நாணுவிடமிருந்து வாங்கிக்கொண்டு வந்தாயே, அதெல்லாம் என்னுடைய பிளேட்டாக்கும்!"

"அது உன்னுடைய பிளேட்டா? எனக்குத் தெரியாதே. காலம் பரத்தான் கிட்டு வந்து கேட்டான். கொடுத்தேன்" என்றான். உடனே கிட்டு வீட்டுக்குப் போனேன்.

"என் பிளேட்டுகள் உன்னிடம் இருக்கின்றனவாமே?" என்று கிட்டுவைக் கேட்டேன்.

"உன் பிளேட்டுகள் இங்கு ஏது? நேற்று ராமுவிடம் அல்லவா சில பிளேட்டுகள் கடன் வாங்கிக் கொண்டு வந்தேன்."

"எல்லாம் என் பிளேட்டுகளைத்தான் ராமு உனக்குக் கொடுத்திருக்கிறான். நான் நாணுவுக்குக் கொடுத்திருந்தேன். நாணு ராமுவுக்குக் கொடுத்திருந்தான். அவன் உனக்குக் கொடுத்திருக்கிறான்."

"அட நாராயணு! (என் பெயர் நாராயணன் இல்லை. கிட்டு கூப்பிட்டது பகவான் நாராயணனை) இப்படியா சங்கதி! என்னமோ தன் சொந்த பிளேட்டுகள் போலல்லவா பெருமை யடித்துக் கொண்டான்!"

"சரி, அது இருக்கட்டும். என் பிளேட்டுகளைக் கொஞ்சம் கொடு."

"பிளேட்டா! உன் பிளேட்டுகளை இப்பொழுதுதான் சீனு வந்து கேட்டான். கொடுத்தேன்" என்றான்.

சரியென்று சீனுவைத் தேடிக்கொண்டு போனேன். சீனு என்னைக் கண்டதும், "வா அப்பா வா! நான் ஒரு புது கிராமபோன் வாங்கி யிருக்கிறேன். பார்த்தாயா?" என்றான்.

"உன் கிராமபோனைப் பார்ப்பது அப்புறம் இருக்கட்டும். என் பிளேட்டுகளை வாங்கிக்கொண்டு வந்தாயே, அவற்றைத் திருப்பிக் கொடு."

"உன் பிளேட்டுகள் என்னிடம் ஏது? கிட்டு தான் ஏதோ சில பிளேட்டுகள் இரவல் கொடுத்தான்—"

"அது என்னுடைய பிளேட்டுகள் தான்."

"உன்னுடைய பிளேட்டுகளா?"

"ஆம். என்னுடையவைதான். நான்கூட உன்னை இப்படி அவசரப்படுத்தி கேட்கமாட்டேன்—"

"நீ அவசரப்படுத்தித் தான் கேள், அவசரப்படுத்தாமல் தான் கேள். நீ வருவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னால்தான் சர்மா இங்கு வந்திருந்தான். அந்தப் பிளேட்டுகளை அவனிடம் கொடுத்தேன். எனக்கு உன்னுடைய பிளேட்டுகள் என்று தெரியாது."

"சர்மாவா? எந்த சர்மா? நம்முடைய மயிலாப்பூர் சர்மாவா?"

"ஏன் அத்தனை ஆச்சரியம்! அவனுக்குத் தான் பாட்டு என்றால் பசி, தாகம் தெரியாதே!"

அட நாராயணு! அப்படியானால் அவன் கையில் கொண்டு வந்தது என்னுடைய பிளேட்டுகள் தானு!

## கால வித்தியாசம்-2

### ரயில் வண்டி புறப்படுவதற்கு முன்

ரயில் வண்டி புறப்பட இன்னும் ஒரு நிமிஷம்தான் இருக்கிறது. விடாக்கண்ட விசுவநாதய்யர் லொங்கு லொங்கென்று ஓடி வருகிறார். அவருக்கு இருக்கும் அவசரத்தை விட அவருடைய வலது கால் செருப்புக்கு அதிக அவசரம்! அது காலை விட்டு நழுவி, இவருக்கு முன்னாலேயே ஒரு வண்டியண்டை போய் நிற்கிறது! விடாக்கண்ட விசுவநாதய்யர் செருப்பைப் பின் தொடர்ந்து, அந்த வண்டிக்குள் ஏறுவதற்காகக் கதவைத் திறக்கப் பார்க்கிறார். ஆனால் கதவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் கொடாக்கண்ட கோபாலய்யர் அவரைக் கதவைத் திறக்க விட்டால் தானே?

"இந்த வண்டியில் இடம் இல்லை. அடுத்த வண்டிக்குப் போம்."

"எல்லாம் இடம் இருக்கிறது. கதவைத் திற, ஐயா!"

"திறக்க முடியாது. போ, ஐயா!"

"என்ன ஐயா, உன் அப்பன் வீட்டு வண்டி என்று நினைத்தாயா? கதவைத் திறக்கப் போகிறாயா, இல்லையா?"

"திறக்க முடியாது. அப்பன், கிப்பன் என்று ஏதாவது பேசினையோ, பல்லை........"

இதற்குள் வண்டி நகர ஆரம்பித்து விட்டது. ஆகவே விடாக்கண்ட விசுவநாதய்யர் ஜன்னல் வழியாகத் தம்முடைய பெட்டி, சூட் கேஸ், படுக்கை, வெற்றிலை பாக்குப் பெட்டி எல்லாவற்றையும் உள்ளே தள்ளினார். அவை கொடாக்கண்டகோபாலய்யர் மீது தொப்பென்று விழுந்து, அவர் வாக்கியத்தைப் பூர்த்தி செய்யாமல் அடித்தது

மன்றி, அவரையும் கீழே உருட்டித் தள்ளிவிட்டன. அவர் ஒருவாறு சமாளித்துக்கொண்டு தலை நிமிர்ந்த சமயமும், விடாக்கண்ட விசுவநாதய்யர் தமது வலது கால் செருப்பை உள்ளே எறிந்ததும் ஒன்று சேரவே, கொடாக்கண்ட கோபாலய்யரின் பல் உடைபட்டு, ரத்தம் வரத் தொடங்கியது. "யார் பல்லை யார் ஐயா உடைக்கிறது?" என்று உறுமிக்கொண்டே, விசுவநாதய்யர் உள்ளே நுழைகிறார்.

### ரயில் வண்டி புறப்பட்ட பிறகோ!

அடடா! நம்ப விடாக்கண்ட விசுவநாதய்யரும் கொடாக்கண்ட கோபாலய்யருமா அப்படி அளவளாவிக் கொண்டிருக்கிறார்கள்? நம்பவே முடியவில்லையே!

**விசுவ :** அடாடாடா! நம்ப ராமசாமி அய்யருடைய அம்மாஞ்சிக்கு மாப்பிள்ளைக்குத் தம்பிக்கு மாமனரா நீங்கள்? அப்படிச் சொல்லுங்கள்! அப்படின்னு உங்களுக்கும் பூர்வீகம் விஷ்ணம் பேட்டையோ?

**கோபா :** ஆமாம், விஷ்ணம் பேட்டைதான்.

**விசுவ :** அப்படிச் சொல்லும்! அது தான் அத்தனை பிடிவாதமாய்க் கதவைத் திறக்க முடியாது என்று சண்டித்தனம் செய்தீர்!

[இரண்டு பேரும் கொல்லென்று விழுந்து, விழுந்து சிரிக்கிறார்கள்.]

**கோபா :** அது இருக்கட்டும். எங்கே இப்படிப் புறப்பட்டீர்?

**விசுவ :** எங்கே புறப்பட்டேனாவது! தை பிறந்து விட்டதோல்லையோ? நம் பெண்ணுக்கு வழி பிறக்காதா என்று ஜாதகக் கட்டைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டேன்.

**கோபா :** எனக்குத் தெரிந்து ஒரு நல்ல வரன் இருக்கிறது. என்ன சொல்லுகிறீர்?

**விசுவ :** பையன் என்ன பண்ணுகிறான்?

**கோபா :** டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கிறான்.

விசுவ: மனுஷ்யாள் எப்படியோ?

கோபா: மிகவும் தங்கமான மனுஷ்யாள். எங்கே, பெண் ஜாதகத்தை இங்கே கொடும் பார்க்கலாம்.

விசுவநாதய்யர் கொடுத்த ஜாதகத்தைக் கோபாலய்யர் தம் மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு பார்க்கிறார். பார்த்துவிட்டுத் தலையை யாட்டுகிறார். "பேஷ்! ஜாதகம் பொருத்தமாகத்தான் இருக்கிறது. இந்தாரும். பிள்ளை ஜாதகம்!" என்று தம் 'பாக்கெட்'டிலிருந்து ஒரு ஜாதகத்தை எடுத்துக் கொடுக்கிறார்.

விசுவநாதய்யருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "அந்தப் பையன் ஜாதகம் உங்கள் கைக்கு எப்படி வந்தது?" என்று கேட்கிறார். "என் பையன் ஜாதகம் என் கையில் இருக்காமல் வேறு எங்கே போகும்?" என்று பதில் வருகிறது.

"அதுதான் சம்பந்திச் சண்டையை முன்னமேயே ஆரம்பித்து விட்டீர்!" என்று விசுவநாதய்யர் சொல்கிறார். இரண்டு பேரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். வண்டியில் இருப்பவர்கள் இதைப் பார்த்து விட்டுத் திகைக்கிறார்கள். திகைப்பானேன்!

கால வித்தியாசம், ஐயா, கால வித்தியாசம்!

# ஞாபக மறதி

"டேய் தடியா! நான் படிச்சுப் படிச்சுச் சொன்னேனே, குடையை எங்கேடா வச்சுத் தொலைத்து விட்டு வந்தாய்?" என்று மிகவும் கோபமாகக் கிட்டுவைப் பார்த்துக் கேட்டார் என் தகப்பனார்.

என் தம்பி கிட்டுவிற்கு ஞாபக மறதி ஜாஸ்தி. பள்ளிக்கூடத்தில் வாத்தியார், "ஏண்டா பாடம் எழுதிக் கொண்டு வரவில்லை?" என்றால் "ஞாபகமில்லை" என்பான். அப்பா லாண்டரியிலிருந்து துணிகளை வாங்கிக்கொண்டு வாடா என்று சொன்னால் வாங்கிக்கொண்டு வரமாட்டான். அரை நாழிகை கழித்துக் கேட்டால், "ஞாபகமில்லை, மறந்து போய்விட்டேன்" என்பான். அவன் மறக்காமலிருக்கும் விஷயங்கள், என் தாயார் சொல்லுகிறபடி இரண்டே இரண்டு விஷயங்கள்தான். அவை, சாப்பிடுவதும், தூங்குவதும் தான்.

இவ்வளவு ஞாபக மறதியுள்ள கிட்டு அன்று குடையை எங்கேயோ தொலைத்துவிட்டு வந்ததில் ஆச்சரியமில்லை. அதில் அப்பாவுக்கு அசாத்தியக் கோபம்.

அவன் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்ததும், "குடை எங்கேடா? தொலைச்சாச்சோ, இல்லையோ?" என்றார்.

"எங்கேயோ வைத்து மறந்து விட்டேன், அப்பா!"

"எங்கேடா வைத்துத் தொலைச்சே? நான்தான் வேஷ்டியில் ஒரு முடிச்சு போட்டுக்கோ என்றேனே. போட்டுக்கொண்டாயா, இல்லையா?"

"வேஷ்டியில் முடிச்சுப்போட்டுக்கொண்டால் பையன்கள் பார்த்துச் சிரிப்பார்கள் என்று கைக்குட்டையில் போட்டுக் கொண்டேன்."

"சரி, கைக்குட்டையைச் சாயந்திரம் பார்த்துக்கொண்டாயா?"

"சாயந்திரம் பார்த்தேன். கைக்குட்டையைக் காணவில்லை."

"அப்படியென்ருல் குடையைப் பள்ளிக்கூடத்திலேயே வைத்துவிட்டுப் போய் விட்டாயா?"

"இல்லே. சாயந்திரம் பள்ளிக்கூடம் விட்டதும் ஞாபகமாய் எடுத்துக்கொண்டுதான் போனேன்."

"குடையை எடுத்துக்கொண்டவன் நேரே வீட்டுக்கு வந்து சேர்வதற்கென்ன?"

"வீட்டுக்கு வரணுமென்றுதான் புறப்பட்டேன். ஆனல் ராமு 'என் வீட்டுக் கொலுவுக்கு வாடா' என்று கூப்பிட்டான்."

"அப்போ குடை கையில் இருந்ததா, இல்லையா?"

"ஞாபகமில்லே."

"அங்கேயிருந்து எங்கே போனுய்?"

"இன்னெரு பையன் அவன் வீட்டுக் கொலுவுக்குக் கூப்பிட்டான்."

"அப்பொழுதும் குடை ஞாபகம் வரவில்லையா?"

"இல்லே."

"சரி. அங்கேயிருந்து எங்கே தொலைஞ்சே?"

"இன்னெரு பையன் வீட்டுக்குப் போனேன். அவனும் தங்கள் வீட்டுக் கொலுவைப் பார்த்தால் தானுச்சு என்று இம்சைப் படுத்தினன்."

"அங்கே யிருந்து எங்கே போனுய்?"

"நேரே நம்ம வீட்டுக்குத்தான் வந்தேன்."

"அப்பொழுதாவது குடை ஞாபகம் வந்ததா?"

"இல்லே."

"சரி, நீ போன வீட்டு அட்ரஸை எல்லாம் சொல்லித் தொலே. நான் போய்க் குடையைத் தேடி வருகிறேன்" என்றார்.

கிட்டு தன் நண்பர்கள் வீட்டு விலாசத்தை யெல்லாம் அப்பாவுக்குத் தெரிவித்தான். அப்பா அவன் சொன்னதை யெல்லாம் கேட்டுவிட்டு, "டேய் பயலே! குடை மாத்திரம் அகப்படாமல் இருக்கட்டும். உன் மென்னியைத் திருகி விடுகிறேன், பார்" என்று கர்ஜித்துக்கொண்டே குடையைத் தேடுவதற்காகப் புறப்பட்டார்.

அவர், கிட்டு முதல் முதலில் போனதாகச் சொன்ன நண்பன் வீட்டுக்குப் போனுர். வாசலில் ஒரு வாண்டுப் பயல் உட்கார்ந்திருந்தான்.

"ஏண்டா! கிட்டு இங்கே வந்தானடா?"

"எந்தக் கிட்டு? எனக்குத் தெரியாதே?"

"அவன் தாண்டா, உன்னேடு வாசிக்கிறுனே. நீ 'பாடாவதி' ஹைஸ்கூலில்தானே வாசிக்கிறுய்? முதல் பாரம்தானே?"

"ஆமாம்."

"அவனும் உன்னேடுதான் வாசிக்கிறுன்" என்று சொல்லி விட்டுத் தம் பிள்ளையின் அங்க அடையாளங்களே விஸ்தரிக்க ஆரம்பித்தார். ஆனல் பையனுக்கு அவர் குறிப்பிடும் பையன் யார் என்று புரியவில்லே.

கடைசியில் அப்பாவுக்கு ஞாபகம் வந்தது. "அவன் தலேயில் கூட ஒரு சின்னச் சுட்டி விழுந்திருக்குமே—"

பையனுக்கு அப்பொழுதுதான் விளங்கிற்று.

"ஓ! அவன?—வழுக்கைத் தலேயா?—அப்படிச் சொல்லுங்கோ. நாங்களெல்லாம் பள்ளிக்கூடத்தில் அவனே 'வழுக்கைத் தலே' என்று தான் கூப்பிடுவோம்."

"சரி, வழுக்கைத் தலே இங்கு வந்தான?"

"வந்து விட்டு அப்பவே போய் விட்டானே."

"அவன் குடை ஏதாவது இங்கே வைத்து விட்டுப் போய் விட்டானோ ?"

"அவன் குடை கொண்டு வந்தானே இல்லையோ, தெரியாது."

இதற்குள் உள்ளேயிருந்து அந்தப் பையனின் தகப்பனாரின் குரல் கேட்டது.

"டேய் ராமு! வாசலிலே யாரோடே பேசிக்கொண்டிருக்கே ?"

"வழுக்கைத் தலையோட அப்பா வந்திருக்கிறார்."

"ஏண்டா வாசல்லே நிற்கவைத்துப் பேசிண்டிருக்கே! உள்ளே கூப்பிடுடா" என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தார்.

"இல்லை. நம்ம பயல் குடையை எங்கேயோ வைத்து மறந்துட்டான். ஒரு வேளை இங்கே வைத்துவிட்டானோ என்று கேட்கலாம் என்று வந்தேன். இன்னொரு சமயம் வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தார் அப்பா.

அங்கிருந்து அடுத்த பையன் வீட்டுக்குப் போனார். அங்கேயிருந்த பையனையும் கிட்டுவைப்பற்றி விசாரித்தார். ஆனால் கிட்டு என்று சொன்னபோது புரியவில்லை. கடைசியில் 'வழுக்கைத் தலை' என்று சொன்னதும்தான் அவன் புரிந்து கொண்டான். ஆனால் "வழுக்கைத் தலை" குடை கொண்டு வந்தானா, இல்லையா என்று அவனுக்குத் தெரியாது.

கடைசியில் இன்னொரு பையன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். தம் பிள்ளையைக் குறித்துத் தாமே "வழுக்கைத் தலை" என்று குறிப்பிடுவதற்கு அவருக்குக் கஷ்டமாய்த் தானிருந்தது. இருந்தாலும் கால விரயத்தைக் கருதி, "'வழுக்கைத் தலை' இங்கு வந்தானா ?" என்று கேட்டார்.

"ஏன் ? வந்தான். நீங்கள் யார் ?"

"நான்தான் அவன் தகப்பனார்."

"'வழுக்கைத் தலை' தகப்பனரா! ஏன், உள்ளே வாங்களேன்! டேய் மணி! போய்ச் சுண்டல் எடுத்துக் கொண்டு வாடா."

"எனக்கு அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நம்ம பயல் குடையை எங்கேயோ வைத்துவிட்டு வந்துவிட்டான். அதைத் தேடுவதற்காக வந்தேன்."

"டேய் மணி! போய்ப் பாரடா, அவன் குடையை எங்கேயாவது வைத்துவிட்டு மறந்துவிட்டானு என்று!"

அந்தப் பையன் உள்ளே போனவன் அரை நிமிஷத்தில் திரும்பி வந்தான் ஒரு குடையுடன்.

"இந்தக் குடையா, பாருங்கோ!" என்ருன்.

"ஆமாம். இதுதான்" என்று சந்தோஷத்துடன் வாங்கிக் கொண்டு ஒரு ரிக்ஷாவில் ஏறி வீட்டுக்குத் திரும்பினர் அப்பா.

வழியெல்லாம் அவர் கிட்டுவைச் சபித்துக்கொண்டே வந்தார். கிட்டுவால் தமக்கு ஏற்பட்ட அவமானத்தை நினைத்து நினைத்து மனம் புழுங்கினர். "'வழுக்கைத் தலை'க்கு அப்பா" "வழுக்கைத் தலை'க்கு அப்பா" என்று சொல்லிச் சொல்லிப் பார்த்துக் கொண்டார்.

வீட்டுக்கு வந்ததும் ரிக்ஷாக்காரனுக்குக் கூலியைக் கொடுத்து அனுப்பினர்.

"டேய், வழுக்கைத் தலைத் தடியா! நீ குடையை எங்கேயாவது வைத்துவிட்டு வந்து விடுகிறது; நான் உனக்காக அவமானப் படுகிறது!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

"சரி, குடை எங்கே?" என்று கேட்டாள் என் தாயார்.

"குடையா? இதோ!—ஐயையோ! ரிக்ஷாவில் வைத்து மறந்து விட்டேண்டி!" என்று முழித்தார்.

அவ்வளவுதான். குடை போனது போனதுதான்.

"பிள்ளையும் அப்பாவைப் போலத்தானே இருக்கும்?" என்ருள் என் தாயார்.

# கால வித்தியாசம்-3

## கடன் வாங்கும் முன்

**நாயுடு:** யாரது! செட்டியார்வாளா! வரணும், வரணும்! டேய், தம்பீ! செட்டியாருக்கு ஒரு நாற்காலி கொண்டு வந்து போடுடா!

**செட்டியார்:** ஒண்ணும் வேண்டாம், ஐயா! இந்தப் பக்கம் ஒரு காரியமாக வந்தேன். அப்படியே தங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம்னு........

**நாயுடு:** நானே தங்களைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அதற்குள் நீங்களே........டேய் தம்பீ! நாற்காலி கொண்டு வருவதற்கு எத்தனை நாழியடா? செட்டியார் நிற்பது தெரியலே?

[தம்பி நாற்காலி கொண்டு வந்து போடுகிறான்.]

**நாயுடு:** டேய் தம்பீ! ஓடிப் போய்ப் பக்கத்து அய்யர் கிளப்பிலே செட்டியாருக்கு ஒரு கப் காப்பி வாங்கிக் கொண்டு வாடா!

**செட்டியார்:** அதெல்லாம் ஒண்ணும் வாணும், ஐயா!

**நாயுடு:** சேச்சே! அப்படியெல்லாம் தாங்கள் சொல்லக் கூடாது. டேய் தம்பீ! ஏண்டா நிற்கிறே? போய்க் காப்பி வாங்கிக் கொண்டு வாடான்னு!

[தம்பி ஓடுகிறான்.]

**செட்டியார்:** ஆமாம், என்னைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டேன் என்று சொன்னீர்களே, ஏதாவது, முக்கியமான காரியமோ?

**நாயுடு:** ஒண்ணும் பிரமாதம் இல்லை. அவசரமாய் ஆயிரம் ரூபாய் பணம் வேண்டியிருக்கிறது, அவ்வளவு தான்.

**செட்டியார்:** என் கையில் இப்பொழுது ஒன்றும் பணம் இல்லையே? யுத்தம் வந்தாலும் வந்தது........

**நாயுடு:** அப்படி யெல்லாம் சொல்லலாமா செட்டியார்? (தம்பி வருகிறுன்)........இந்தாருங்கள் செட்டியார் ....ஊஹும்; 'மாட்டேன்' என்று சொல்லக் கூடாது. நீங்கள் பணம் கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை. கட்டாயம் காப்பி குடிக்கத்தான் வேண்டும்.

[செட்டியார் காப்பி சாப்பிடுகிறுர்.]

**செட்டியார்:** ஆமாம், எவ்வளவு பணம் வேண்டும் என்று சொன்னீர்?

**நாயுடு:** ஒண்ணும் பிரமாதம் இல்லை, செட்டியார்! ஓர் ஆயிரம் ரூபாய். அவ்வளவுதான்.

**செட்டியார்:** சரி, தருகிறேன். ஆனல் முன்பு ஒரு தடவை செய்ததுபோல் தவக்கப் படுத்தாமல் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

**நாயுடு:** என்ன செட்டியார்! இதெல்லாம் எனக்குச் சொல்லணுமா?

## கடன் வாங்கிய பின்னரோ!

**செட்டியார்:** நாயுடுகாரு! நாயுடுகாரு!

**வீட்டுக்குள்ளிருந்து ஓரு பெண் குரல்:** நாயுடுகாரு வீட்டில் இல்லையே?

**செட்டியார்:** ஏம்மா பொய் சொல்றே? நாயுடு இப்பத் தானே உள்ளே நுழைந்தார்? அதைப் பார்த்து விட்டுத் தானே நான் வந்தேன்? (கத்துகிறுர்)........ஓய் நாயுடுகாரு! ஏன் ஐயா பொம்பளை மாதிரி வீட்டுக்குள்ளே ஒளிஞ்சிக் கிட்டே? மீசை முளைச்ச ஆம்பளையா யிருந்தால் வெளியே வா ஐயா!

[நாயுடு வீட்டுக்குள்ளே யிருந்து வெளியே வருகிறுர்.]

**நாயுடு:** ஓய்! செட்டியார்! இது என்ன வீடுன்னு நினைச்சியா, சந்தைக் கடைன்னு நினைச்சியா? எதுக்காக ஐயா கூச்சல் போடறே?

**செட்டியார்:** என்ன ஐயா, வாங்கின கடனைக் கொடுக்கப் பயந்துகிட்டு, வீட்டுக்குள்ளே ஒளிஞ்சிக்கிட்டயே? வந்தா, இன்னிக்கி வா எங்கிறே, நாளைக்கு வா எங்கிறே? என்னை என்ன மனுஷன் என்று நினைச்சுக்கிட்டியா, மாடுன்னு நினைச்சுக்கிட்டியா?

**நாயுடு:** கூச்சல் போடாதேன்னா திரும்பவும் கூச்சல் போடறயே? உன் கடனை யாரோ இல்லேன்னு சொல்லிட்டதுபோல் அல்லவோ கத்தறே?

**செட்டியார்:** கடனை இல்லேன்னு சொல்லித்தான் பாரேன்.

**நாயுடு:** இதோ பாரு, செட்டியார். சும்மா சத்தம் போட்டுப் பிரயோசனம் இல்லே. அடுத்த ஞாயிற்றுக் கிழமை வந்தால் கொடுக்கிறேன்.

**செட்டியார்:** என்ன ஐயா! உனக்கு இது யோக்யதையா இருக்கா? இது வரையில் எத்தனை ஞாயிற்றுக் கிழமை தவணை சொல்லி யிருப்பே?

**நாயுடு:** ஓய்! யோக்யதை கீக்யதை என்று பேசினா, கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவேன்..... போய்யா போ! பணம் தர முடியாது.

**செட்டியார்:** உன்னைக் குற்றம் சொல்லிப் பிரயோசனம் இல்லே ஐயா. கடன் வாங்குவதற்கு முன்னால் நாற்காலி போட்டே, காப்பி வாங்கிக் கொடுத்தே, உபசாரம் எல்லாம் பண்ணினே! இப்ப என்னடான்னா கழுத்தைப் பிடித்துத் தள்ளுவேன் எங்கிறே! கால வித்தியாசம் ஐயா, **கால வித்தியாசம்!**

# ஐயா, பழனிமலை வேலா!

## 1

நல்ல கடும் வெய்யில். மூன்றாவது வகுப்பு வண்டி ஒன்றில் மிஸ்டர் ராம்சிங் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவர் கையில் "சினிமா புலம்பன்" என்றொரு பத்திரிகை இருந்தது. அதை வாசித்துக்கொண்டிருந்தவர் நடுவில் நடுவில் 'சூ'க் கொட்டிக் கொண்டிருந்தார். அவர் அந்த மாதிரி செய்துகொண்டிருந்தது, ஏதோ மிளகாய்ப் பதார்த்தம் சாப்பிட்டு விட்டதனால் அல்ல. அவர் கையிலுள்ள "சினிமா புலம்ப"னில் கண்டிருந்த ஒரு கட்டுரையை வாசிக்கப் பொறுக்காததனால் தான்.

மிஸ்டர் ராம்சிங் ஒரு தமிழ் டாக்கி டைரக்டர். இவர் வட தேசத்தவரானாலும், தமிழ் டாக்கிகளிலேயே முழுவதும் ஈடுபடும் நோக்கத்துடன், தமிழ் பாஷையை நன்றாகக் கற்று அறிந்திருந்தார். அன்று அவர் ரயிலில் வாசித்துக்கொண்டிருந்த கட்டுரை, அவர் கடைசியாகப் பிடித்திருந்த ஒரு புராணக் கதைப் படத்தைப் பலமாகக் கண்டித்து எழுதியிருந்தது. அதில் படத்தைப் பற்றி அநேக குறைகள் சொல்லப்பட்டிருந்தன. புராணப் படம், பாட்டுகள் அதிகம், நடிப்பு போதாது, ஆள் பொருத்தம் வேஷப் பொருத்தம் முதலியவை இல்லை என்ற குறைகளும் அந்தப் படத்தைப் பற்றிக் கூறப்பட்டிருந்தன. மிஸ்டர் ராம்சிங் பிடிக்கும் படங்களிலுள்ள குற்றங் குறைகளையெல்லாம் ஒன்று விடாமல் எழுத வேண்டுமானால், அதை ராம்சிங் ஒருவர்தான் செய்ய முடியுமேயொழிய பிறரால் முடியாது. ஏனெனில் ராம்சிங் தம் படத்தின் குற்றங் குறைகளையெல்லாம் விமரிசனக்காரர்களுக்கு மேல் நன்கு உணர்ந்திருந்தார். அவைகளையெல்லாம் ஒழிக்க ராம்சிங் எவ்வளவோ பிரயத்தனப்பட்டார்.

ஆனல் அதற்கு எத்தனை இடைஞ்சல்கள்! முதலாவதாக, முதலாளியின் ஒத்துழைப்பு இல்லை. இரண்டாவதாக, நடிகர்கள் பொறுக்கும் விஷயத்தில், பட முதலாளி இவரைக் கலந்து கொள்வதேயில்லை. அதோடு சமூகக் கதைகளும், எவரும் நல்லதாக எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. ஒன்று இரண்டு இருக்கும் சமூகக் கதைகள் ஒன்றைப்போல் ஒன்று, பணக்காரக் குடும்பத்தில் பிறந்த ஒருவன் குடியிலும், கேளியிலும், கூத்திலும் தன் பணத்தைச் செலவழிப்பதும், மனைவியை ஹிம்சிப்பதும் கடைசியில் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்பதுபோல் அவனுக்குப் புத்தி வருவதுமாகவே முடிகின்றன. இந்தக் கதைகள் ஒரு நீதியைக் கற்பிக்கிறதாக இருக்கிறதேயொழிய, வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுவதாக இல்லையென்பது இவர் துணிபு. இவரே ஒரு சமூகக் கதை எழுதலாமென்றாலும், புராணக் கதைகளை ஒன்று மாற்றி ஒன்று டைரக்ட் பண்ணுவதிலேயே இவருடைய காலமெல்லாம் செலவழிந்து போகிறது. தாம் கொஞ்சம் பணம் சேர்த்து, ஒரு பட முதலாளியாகும் பொழுது, தமக்குத் தோன்றிய சீர்திருத்தங்களையெல்லாம் செய்யலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தார்.

இவர் வாசித்துக் கொண்டிருக்கும்பொழுது கிணீரென்று ஒரு சப்தம் கேட்டுத் திரும்பினர். வண்டியின், ஒரு கோடியில், "ஐயா, பழனிமலே வேலா!" என்று பாடிக் கொண்டு, ஒரு பிச்சைக்காரன் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். வாடி வதங்கிக் குழிந்த கன்னங்கள், ஒளியிழந்த கண்கள், ஒட்டின வயிறு, குச்சி போன்ற கைகால்கள், சடையுண்ட தலைமயிர், இடுப்பைச் சுற்றி ஓர் அழுக்கடைந்த கந்தல் இவ்வளவு லட்சணங்களுடன் அன்னிய ஆட்சியால் நமக்கேற்பட்டிருக்கும் தரித்திரத்திற்கு ஓர் அறிகுறிபோல் விளங்கினன். அவனைப் பார்க்கச் சகிக்காமல், மிஸ்டர் ராம்சிங் திரும்பவும் தம் பத்திரிகையில் ஆழ்ந்தார்.

பத்திரிகையில் ஆழ்ந்தும், அவர் ஞாபகம் எங்கெங்

கெல்லாமோ சஞ்சாரம் செய்துகொண்டிருந்தது. கொஞ்சம் நாழியானதும் அந்தப் பிச்சைக்காரன் இவரிடம் வந்து, "ஐயா, தரும துரையே! பசி காதை அடைக்கிறது. ஏதாவது தருமம் கொடுங்கள், ஐயா!" என்று சொல்லிவிட்டுத் திரும்பவும் தன் பாட்டைத் தொடங்கினன். இவனைக் கண்டதும் ராம்சிங்கிற்கு ஒரு யோசனை தோன்றியது. அவர் தயாரித்துக்கொண்டிருந்ததும், இதுவரையில் அதைப்போல் அவ்வளவு உயர்தரமான படம் வந்ததில்லையென்று சொல்லப்படப் போவதுமான சமூகப் படத்தில் பிச்சைக்காரர்கள் கட்டம் ஒன்று வருகிறது. அதில் இவனை நடிப்பதற்கு சேர்த்துக்கொண்டு விட்டால்! ஒருவனுக்குப் பிச்சைக்காரன் வேஷம் போட்டு, அவனை நடிக்கச் சொல்லி, கடைசியில் அவன் நடிப்பு நன்ருயில்லையென்று சொல்வதைவிட, ஒரு பிச்சைக்காரனையே அவ் வேஷத்திற்குப் போடுவது நல்லதல்லவா என்று தோன்றியது. அவனைப் பார்த்து, அன்பு ததும்பும் குரலில், "ஏனப்பா! ஏதாவது வேலை செய்து பிழைக்கக் கூடாதா?" என்ருர்.

"சுவாமி! செய்யாதே என்னுங்க? கூலி வேலையும் கிடைக்காமல் தான் இப்படி இந்தத் தொழிலில் இறங்கினேன். இரண்டு நாளாய்ப் பட்டினி. ஏதாவது தருமம் கொடுங்கள், ஐயா!" என்ருன்.

ராம்சிங் தம்முடைய கோட்டுப் பைகளைத் தடவினர். தம்முடைய பெயரும், விலாசமும் அச்சடித்த அட்டையை அவனிடம் கொடுத்து "இதோ, இதில் என்னுடைய பெயரும், விலாசமும் அச்சடித்திருக்கிறது. நாளைக் காலை எட்டு மணிக்கு இந்த விலாசத்தை விசாரித்துக்கொண்டு என்னை வந்து பார். நான் உனக்கு நல்ல வேலை பார்த்துத் தருகிறேன்" என்ருர்.

## 2

அடுத்த நாள் காலை எட்டு மணிக்குப் பிச்சைக்காரன் ராம்சிங்கைப் போய்ப் பார்த்தான். ராம்சிங் அவனைத் தம் சினிமாவில் ஒரு நடிகராகச் சேர்த்துக் கொள்வதாகச்

சொன்னார். பிச்சைக்காரன் ஒன்றும் புரியாமல் விழித்தான். "எனக்குப் படிக்கக்கூடத் தெரியாதே, சாமி! நான் எப்படி நடிக்கப் போகிறேன்?" என்றான். ராம் சிங், "அதெல்லாம் ஒன்றும் வேண்டியதில்லை. நீ இதற்காகப் புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயமும் ஒன்றும் இல்லை. நீ இதுவரையில் ஜீவனத்திற்காக என்ன பண்ணிக்கொண்டிருந்தாயோ, அதையே தான் இப்போதும் பண்ண வேண்டியது. 'ஐயா, பழனிமலை வேலா!' என்ற பாட்டைப் பாடிக்கொண்டு நடுவில் நடுவில் 'ஐயா, தரும துரையே! பசி காதை அடைக்கிறது. ஏதாவது தருமம் கொடுங்க, ஐயா!' என்று சொல்லவேண்டியது. உனக்கு மாதச் சம்பளம் ரூ. 50" என்று சொல்லிவிட்டு, ரூ. 50 முன் பணம் கொடுத்தார்.

இதைக் கேட்டதும், பிச்சைக்காரனுக்கு ஏதோ சுவர்க்க போகம் கிடைத்தது போலிருந்தது. கால் வயிற்றுக் கஞ்சிக்குக்கூட இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த இவனுக்கு, மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம் என்றால் சாமானியமா?

அடுத்த நாள் பிச்சைக்காரர்கள் கட்டம் ஒத்திகை. பிச்சைக்காரன் படம் பிடிக்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே சிலர் கிழிந்த உடைகளைக் கட்டிக்கொண்டு தங்கள் தலைமயிரைக் கோரமாக வைத்துக்கொண்டு நின்றனர். இவர்களுடைய முகங்களில் கறுப்பு வர்ணத்தினால் கோடுகள் இழுக்கப்பட்டிருந்தன. அவை முகச் சுருக்கத்தைக் காட்டுவதற்காகப் போடப்பட்டவை. அவர்கள் எல்லாரும் பிச்சைக்காரர்கள் வேஷம் போட்டுக்கொண்டிருப்பதாக எண்ணம்! ஆனால் அவர்களுடைய கட்டான தேகமும், கன்னங்களிலுள்ள கதுப்பும், அவர்கள் வேஷப் பொருத்தம் எவ்வளவு தூரம் தோல்வி யடைந்திருந்தது என்பதைக் காட்டின.

ஒத்திகை ஆரம்பமாயிற்று. நம் பிச்சைக்காரன் "ஐயா, பழனிமலை வேலா" என்ற பாட்டைப் பாடிக்கொண்டு, நடுவில் நடுவில், "ஐயா, தரும துரையே! பசி

காதடைக்கிறது, ஏதாவது தருமம் கொடுங்கள், ஐயா" என்ருன். அங்கிருந்தவர்கள் எல்லாரும் பிரமித்துப் போயினர். "ஆகா, என்ன பொருத்தம்! என்ன நேர்த்தி! எவ்வளவு அழகாய் நடிக்கிருன்!" என்று வியந்தனர். ஆனல் பிச்சைக்காரனுக்கு எல்லாம் வேடிக்கையாகவே இருந்தது. சென்ற பத்து வருஷ காலமாக ரயில் வண்டிகளில் அவன் செய்து கொண்டிருந்த காரியத்தையேதான் அவன் அன்றும் செய்துகொண்டிருந்தான்.

அடுத்த நாள் இதைப் படம் பிடிப்பது என்று தீர்மானமாயிற்று. ஆனல், அன்று சாயந்திரம், இன்னெரு படம் ஒன்றைப் பிடிப்பதற்காக ராம்சிங்கிற்குப் பம்பாயிலிருந்து அழைப்பு வந்தது. இவர் திரும்பிவர இரண்டு மாத கால மாகுமாதலால், இந்தக் கட்டத்தை மாத்திரம் தாம் திரும்பிவந்து பிடிப்பதாகச் சொல்லிவிட்டு அன்றிரவே பம்பாய்க்குப் பிரயாணமானர்.

3

இரண்டு மாதங்கள் கழித்து ராம்சிங் பம்பாயிலிருந்து திரும்பி வந்ததும், அந்தப் பிச்சைக்காரர்கள் கட்டம் திரும்பவும் ஒத்திகை போடப்பட்டது. அப்பொழுது நம் பிச்சைக்காரன் முன்போல, "ஐயா பழனிமலை வேலா" என்று பாடினன். அவன் முகத்தைப் பார்த்ததும் டைரக்டர் திடுக்கிட்டார். "யார் இது? பாட்டும் நன்ருயில்லை; வேஷமும் பொருத்தமாயில்லை; நான் இரண்டு மாதங்களுக்கு முன்பாகக் கொண்டுவந்து விட்ட பிச்சைக்காரன் எங்கே?" என்று கேட்டார்.

"அவன்தான் இவன்" என்ற பதில் வரவே, டைரக்டர் ஸ்தம்பித்துப் போனர். அவனைக் கூப்பிட்டு, "என்ன, உன்னை அடையாளமே தெரிய வில்லையே?" என்ருர்.

"தருமதுரையே! நீங்கள் கொடுக்கும் சம்பளத்தை வைத்துக் கொண்டு நான் சௌக்கியமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள் மவராசன், நன்ரு யிருக்க வேண்டும்" என்ருன். ஒரு நிமிஷ நேரம் ஒன்றும் பேசா

மல் நின்றார் ராம்சிங். அவர் மனது பட்ட அவஸ்தை அவருக்குத்தான் தெரியும்.

"சரி. இனிமேல் உன்னை இங்கு நான் வேலைக்கு வைத்துக்கொள்ள முடியாது. நான் உன்னை வேலைக்கு வைத்துக் கொண்டதெல்லாம், உன் பழைய குழிந்த கன்னங்களுக்காகவும், ஒட்டின வயிற்றுக்காகவும், உலர்ந்து வற்றிச் சுருங்கின தோலுக்காகவும், உன் ஒளியிழந்த கண்களுக்காகவும், உன் குச்சி போன்ற கை கால்களுக்காகவும் தான். உனக்காக வல்ல!" என்றார்.

"என்ன, சாமி! எனக்குச் சம்பளம் வேறு கொடுத்து விட்டு, என்னைப் பட்டினியா கிடக்கச் சொல்லுகிறீர்கள்?"

"அது என்னமோ, எனக்குத் தெரியாது. வாழ்க்கையில் உள்ளதுபோல் உள்ள நடிப்புத்தான் எனக்குப் பிரதானம்."

"என்ன சாமி! என்னைப் பட்டினி கிடந்தா சாகச் சொல்லுகிறீர்கள்? உங்களுக்கு இரக்கமில்லையா?" என்றான் பிச்சைக்காரன்.

* * * *

மிஸ்டர் ராம்சிங் திடீரென்று விழித்துக்கொண்டார். கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தார். இவ்வளவு நேரமும் கண்டது பகற்கனவென்று தெரிந்தது. எதிரே அந்தப் பிச்சைக்காரன் நின்றுகொண்டு "சாமி! உங்களுக்கு இரக்கமில்லையா? ஒரு நாழியாக நின்றுகொண்டிருக்கிறேனே! இரண்டு நாளாய்ப் பட்டினி, எஜமான்!" என்றான்.

○☆○

# கால வித்தியாசம்-4

## 1930-ல் நடந்தது

சென்னை
7—8—45

என் பிரியமுள்ள அப்பாவுக்கு,

அநேக கோடி நமஸ்காரம். நான் இங்கு சௌக்கியம். அங்கு நீங்கள், அம்மா, பாட்டி, தம்பி எல்லோரும் சௌக்கியமா?

இப்பவும், உடனே செலவுக்குப் பணம் அனுப்பும்படி நான் உங்களுக்கு இதுவரை நான்கு கடிதங்கள் போட்டும் தாங்கள் அவை ஒன்றுக்கும் பதில் போடாமல் பேசாமல் இருந்தால் நான் என்ன செய்வது? இங்கே எனக்கு ஹாஸ்டலுக்கே இரண்டு மாத பழம் பாக்கி கொடுக்கவேண்டி யிருக்கிறது. காப்பி ஹோட்டலுக்கு வேறே பழம் பாக்கி இருக்கிறது. எல்லாவற்றுக்கும் சேர்த்து கிட்டத்தட்ட ஐம்பது ரூபாயாவது ஆகும்.

"மாதா மாதந்தான் முப்பது ரூபாய் அனுப்புகிறேனே, அதைத் தவிர இது வேறா?" என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் என்னமோ முப்பது ரூபாயில் இந்த உலகத்தையே வாங்கி விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது.

ஆகவே தயவு செய்து ஐம்பது ரூபாய் உடனே தந்தி மணியார்டர் அனுப்பி என் மானத்தைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன். என் மானத்தைக் காப்பாற்றினால் உங்கள் மானத்தையும் காப்பாற்றினாற்போல். இங்கு எல்லோரும் இன்னார் பிள்ளையா இப்படி ஹோட்டலில் பாக்கி வைத்துக்கொண்டிருக்கிறான் என்று உங்கள் பெயரைச் சொல்லித்தான் ஏளனமாகப் பேசுகிறார்கள். ஆகவே உடனேயே ஐம்பது ரூபாய் தந்தி மணியார்டர் பண்ணுவீர்கள் என்று நம்பும்.

உங்கள் பிரியமுள்ள
**மணி.**

குறிப்பு:—ஒவ்வொரு பையனைப்போல் நான் இந்தப் புஸ்தகம் வாங்கவேண்டும், அந்தப் புஸ்தகம் வாங்க வேண்டும் என்று பொய் சொன்னால் பணம் அனுப்புவீர்கள். நிஜம் சொன்னால் அனுப்புவீர்களா?

மணி.

திருச்சினாப்பள்ளி
8—8—1930.

என் பிரியமுள்ள மணிக்கு,

நீ எழுதிய ஐந்து கடிதங்களும் கிடைத்தன. நீ இப்படி நினைத்தபொழுதெல்லாம் பணம் அனுப்பு, பணம் அனுப்பு என்று எழுதினால் நான் பணத்துக்கு எங்கே போவேன்? இங்கே என்ன பணம் முளைத்தா தொங்குகிறது? ஆகவே, இன்று ரூ. 25 மணியார்டர் அனுப்பியிருக்கிறேன். அதை வைத்துக் கொண்டு எப்படியாவது சமாளி. இதற்கு மேல் என்னால் ஒரு சல்லிக் காசு கூட அனுப்ப முடியாது.

உன் பிரியமுள்ள
அப்பா.

## 1945-ல் நடக்கிறது

திருச்சினாப்பள்ளி,
25—2—45.

என் பிரியமுள்ள மணிக்கு.

நாங்கள் எல்லோரும் சௌக்கியம். அங்கு நீயும், உன் அகமுடையாளும் சௌக்கியம் என்று நம்புகிறேன்.

இப்பவும் பணம் அனுப்பும்படி நான் நான்கு கடிதங்கள் எழுதியும் நீ பதில் போடாமலே இருக்கிறாய். நீ இப்படி பராமுகமாய் இருந்தால் இங்கே எப்படி குடித்தனம் நடக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?

நீ மாசா மாசம் அனுப்பும் கொள்ளை முப்பது ரூபாயில் இங்கே நாலு பேர் எப்படி குடித்தனம் பண்ணுகிறது

என்று நினைக்கிறாய்? இரண்டு மாதமாக வீட்டு வாடகை பாக்கி. பால்காரனுக்கோ மூன்று மாதமாக ஒரு சல்லி கொடுக்கவில்லை. எல்லாப் பழம் பாக்கியையும் உடனே தீர்க்காவிட்டால் பால் ஊற்ற முடியாது என்று பத்து நாளாய்ப் பயமுறுத்தி வருகிறான். நீயோ நான் நான்கு கடிதங்கள் போட்டும் காதில் போட்டுக்கொள்ளாமல் வாளா இருக்கிறாய். எனக்கு மானம் போகிறது. என் மானம் போனால் போகிறது. கூட உன் மானமும் போகிறதே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. எல்லாரும் இன்னார் தகப்பனரா இப்படி பழம் பாக்கி வைத்திருக்கிறார் என்று உன் பெயரைத்தான் சொல்லிச் சிரிக்கிறார்கள். மாதம் ரூ. 300 சம்பாதிக்கும் பிள்ளையா தகப்பனரை இந்த ஸ்திதியில் வைத்திருக்கிறான் என்று கேட்கிறார்கள். ஆகவே உடனேயே ரூ. 200 தந்தி மணியார்டரில் அனுப்பினால்தான் என் மானமும் பிழைக்கும், உன் மானமும் பிழைக்கும்.

இப்படிக்கு,
உன் பிரியமுள்ள அப்பா.

குறிப்பு:—ஒவ்வொரு தகப்பனரைப் போல் டாக்டருக்குக் கொடுக்க வேண்டும், டானிக் வாங்கவேண்டும் என்று பொய் சொன்னால்தான் நீ பணம் அனுப்புவாய் போலிருக்கிறது. நான் நிஜத்தைச் சொல்லுகிறேனே, இல்லையோ, அதுதான் அனுப்ப மாட்டேன் என்கிறாய்,

அப்பா.

சென்னை
26—2—45

என் பிரியமுள்ள அப்பாவுக்கு,

நீங்கள் எழுதிய ஐந்து கடிதங்களும் கிடைத்தன. நீங்கள் இப்படி நினைத்த பொழுதெல்லாம் பணம் அனுப்பு, பணம் அனுப்பு என்று எழுதினால் நான் பணத்துக்கு எங்கே போவேன்? இங்கே என்ன பணம் முளைத்தா

தொங்குகிறது? ஆகவே இன்று ரூ. 100 மணியார்டர் அனுப்பியிருக்கிறேன். அதை வைத்துக்கொண்டு எப்படியாவது சமாளியுங்கள். இதற்குமேல் என்னால் ஒரு சல்லிக் காசு கூட அனுப்ப முடியாது.

உங்கள் பிரியமுள்ள
மணி.

[பணம் அனுப்பு, பணம் அனுப்பு என்று தொந்தரவு படுத்திய அதே பிள்ளையிடம் பின்னர் பணம் அனுப்பு, பணம் அனுப்பு என்று தகப்பனாரே கேட்க வேண்டியிருக்கிறதே, அது அவர் கால வித்தியாசம்தான்!]

○ ☆ ○

# எலியும், பூனையும்

இந்தக் கட்டுரையில் என்னைப் பற்றியும், என் மனைவியைப் பற்றியும் சொல்லியிருப்பது என்னமோ உண்மைதான். நானும் அவளும் எலியும் பூனையும் போன்ற வாழ்க்கை நடத்துவதும் வாஸ்தவம் தான். ஆனால் இக் கட்டுரைக்கு நான் இந்தத் தலைப்பைக் கொடுத்ததற்கு இதெல்லாம் காரணமல்ல. இதில் எலியைப் பற்றியும், பூனையைப் பற்றியும் வருவது தான் முழுக்க முழுக்கக் காரணம்.

முதல் முதலில் நான்தான் இருந்தேன். பிறகுதான் எனக்கு ஒரு மனைவி வந்து சேர்ந்தாள். அதே மாதிரி முதல் முதலில் என் வீட்டில் எலிதான் இருந்தது. பிறகு தான் பூனை வந்து சேர்ந்தது. இப்பொழுது தெரிகிறதா, எங்களுக்குள் யார் எலி, யார் பூனை என்று ?

நான் குடி யிருந்த வீட்டிலெல்லாம் எலிகள் இருந்த படியால், நான் அவற்றுடன் பழகிப் பழகி, அவற்றின் மேல் எனக்கு ஒரு விதமான பிரியம் வளர்ந்து விட்டது. அதனால் அவற்றை வீட்டை விட்டுத் துரத்துவதற்கு நான் ஒரு முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் திடீ ரென்று எதிர்பாராத விதமாகச் சில சம்பவங்கள் நேர்ந் தன.

ஒரு நாள் எங்கள் டவுனில் தொண்ணூறு வயதுக் கிழ வன் ஒருவன் இறந்து போய்விட்டான். அதே வீட்டில் ஏதோ ஒரு எலியும் அகஸ்மாத்தாக இறந்துவிட்டது. அவ் வளவுதான். பார்த்தார் எங்கள் ஊர் முனிஸிபல் சுகாதார ஆபீஸர். கொஞ்ச நாளாக எங்கள் நகர சபை அங்கத் தினர்கள் அவருக்கு அதிக வேலை யில்லை யென்றும் சம்பளத்தை குறைக்க வேண்டுமென்றும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆகையினால் அவர்கள்மேல் உள்ள கோபத்தை வைத்துக் கொண்டு இதுதான் நல்ல சமய

மென்று இதைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தார் அவர்.

அடுத்த நாள் காலை ஊர் முழுவதும் நோட்டீஸ்கள் பறந்தன.

**“பிளேக்! பிளேக்!! பிளேக்!!!**

**கொல்லுங்கள்! கொல்லுங்கள்! கொல்லுங்கள்!”**

என்று கொட்டை எழுத்துக்களில் எங்கு கண்டாலும் நோட்டீஸ்கள் காணப்பட்டன. அந்த சுகாதார ஆபீஸர் தமக்கு இருந்த ஆத்திரத்தில், யாராவது தவறிப்போய் எலிகளுக்குப் பதிலாக அந்த நகர சபை அங்கத்தினர்களைக் கொன்றிருந்தால் கூட வருத்தப்பட்டிருக்க மாட்டார் என்றே தோன்றிற்று.

அவர் வெளியிட்ட அறிக்கையை வாசித்ததும் நான் நடுநடுங்கிப் போய்விட்டேன். “........எலி தொட்ட பாத்திரத்தை நீங்கள் தொட்டால் போதும். எலி சுவாசித்த காற்றை நீங்கள் சுவாசித்தால் போதும். எலியைக் கண்ணால் பார்த்தாலே போதும். உங்களுக்கு உடனே பிளேக் வியாதி கண்டு, நீங்கள் டாக்டருக்குச் சொல்லியனுப்புவதற்குள் இறந்துபோய் விடுவீர்கள்.......” என்றெல்லாம் போட்டிருந்தால் யாருக்குத்தான் நடுக்கமாயிருக்காது?

எலிக்கூண்டு வைத்து எலியைப் பிடிப்பது என்று தீர்மானித்தேன். அப்பாடியோய்! எலிக் கூண்டுகளுக்குத் தான் என்ன கிராக்கி! எலிக் கூண்டு வியாபாரிகளிடம் நல்ல கமிஷன் அடித்திருப்பார் எங்கள் சுகாதார ஆபீஸர் என்று இப்பொழுது தான் எனக்குத் தோன்றுகிறது. ஆகவே நான்கு அணவுக்கு சாதாரண நாட்களில் விற்றுக் கொண்டிருந்த எலிக்கூண்டை நான்கு ரூபாய்க்கு வாங்கினேன்.

எலியைக் கொல்லுவதற்கு மனமில்லையாதலால், எலிகளைப் பிடித்து வெளியில் விட்டுவிட்டால், அந்தக் கொலைத் தொழிலை வேறு யாரேனும் ஏற்றுக்கொள்ளட்டும் என்று

தினம் எலியைப் பிடித்து வெளியில் விட்டுக் கொண்டிருந்தேன். இந்த மாதிரி ஒரு வாரம் பண்ணியும் எலிகள் வீட்டை விட்டுப் போனதாகக் காணோம். எட்டாம் நாள் தான் எனக்குச் சமாசாரம் புரிந்தது. என்னைப் போலவே எலிகளிடம் "ஜீவகாருண்யம்" கொண்ட புருஷர் ஒருவர் எதிர் வீட்டில் இருக்கிறாரென்றும், அவர் வீட்டு எலிகள் எங்கள் வீட்டுக்கும், எங்கள் வீட்டு எலிகள் அவர் வீட்டுக்கும் மாறி மாறிப் போய்க்கொண்டிருந்தன வென்றும் அறிந்தேன்.

என் மண்டையை உடைத்துக்கொண்டு ஒரு வெகு நல்ல தீர்மானத்துக்கு வந்தேன். அது தான், ஒரு பூனை வாங்குவது என்று நிச்சயித்தேன். பூனை எலிக்கு சத்துரு அல்லவா ?

என் மனைவிக்கு இந்த யோசனை பிடிக்கவேயில்லை. பூனை பாலைக் குடித்துவிடும், மோரைக் குடித்துவிடும், குறுக்கே வந்து சகுனத்தடை உண்டுபண்ணும் என்று என்னென்ன வெல்லாமோ சொன்னாள்.

பூனை வாங்கின மறுநாள் காலை ஏழு மணிக்குப் பத்திரிகையைக் கையில் வைத்துக்கொண்டு காப்பி ஸ்மரணை பண்ணிக் கொண்டிருந்தேன். வழக்கமாக 6-30 மணிக்கு வரும் காப்பி அன்று 7 மணிக்குக்கூட வரவில்லை.

கொஞ்ச நாழி கழித்து என் மனைவி சமையல் கட்டிலிருந்து வெளியே வந்தாள். "இந்தாங்கோ! நான் சொன்னை நீங்களெல்லாம் கேட்பேளா ? இன்னிக்குக் காப்பி வாயில் மண்தான். நீங்கள் அழகாக வாங்கிக் கொண்டு வந்திருக்கேளே, அந்தப் பூனை பாலையெல்லாம் குடித்து விட்டது" என்று சொன்னாள்.

அப்பொழுதுதான் அந்தப் பூனை எங்களுக் கெதிரே தன் நாக்கை நீட்டிக்கொண்டு போயிற்று. அப்பொழுது அதைப் பார்ப்பதற்கு இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமோ என்றுதான் தோன்றிற்று. பரவாயில்லை, பூனை முதலில் எலியைப் பிடிக்கட்டும், பிறகு மனைவியைப் பேசிக் கொள்வோம் என்று பேசாமல் இருந்தேன்.

ராத்திரி பன்னிரண்டு மணி யிருக்கும். 'தடால்' என்ற சப்தம் கேட்டு விழித்துக்கொண்டேன். திரும்பவும் 'தடால்' என்று நிலைக்கண்ணாடி உடைந்த சப்தம் கேட்டது. சரி, திருடன் தான் வந்து விட்டான் என்று தீர்மானித்து, என் மனைவியை எழுப்பினேன். கையில் டார்ச் லைட்டையும், ஒரு தடியையும் எடுத்துக்கொண்டு கூடத்திற்குப் போனேன். "யார் அங்கே? நில்!" என்று சப்தம் போட்டு விட்டு டார்ச் லைட்டை அழுத்தினேன்.

பளிச்சென்ற வெளிச்சம். மேடையின் மேல் எங்கள் பூனை ஓர் எலியை வாயில் கௌவிக் கொண்டிருந்தது.

"சரசு! சரசு! இதைப் பார். பூனை பாலைக் குடித்து விட்டது என்று முனகினாயே. இதோ பார். எலியைப் பிடித்துவிட்டது. இனிமேல் பிளேக்கைப் பற்றி நமக்குப் பயமே யில்லை" என்றேன்.

"ஆமாம். உலகத்திலேயே உங்கள் பூனை ஒன்றுதான் எலி பிடிக்கிறதாக்கும்!" என்று சலிப்பாகச் சொல்லி விட்டு அதன் பக்கத்தில் போனாள்.

போனவள் ஒரு பெருத்த சிரிப்புச் சிரித்தாள். "இங்கே வந்து பாருங்கோ, உங்கள் பூனையின் லக்ஷணத்தை!" என்றாள்.

என்ன ஆச்சரியம்! பூனையின் மேலே நாலைந்து எலிகள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. ஆனால் பூனை இவையொன்றையும் கவனிக்காமல் மிக சுவாரஸ்யமாய் எங்கள் குழந்தையின் ரப்பர் எலியைக் கிழிக்க முயன்று கொண்டிருந்தது!

அடுத்த நாள் வீட்டில் பூனையைக் காணோம்!

○ ☆ ○

# ஸ்ரீமதி சாஸ்திரி

என் நண்பர் ராதாகிருஷ்ண சாஸ்திரியின் மனைவியைத் தான் நான் ஸ்ரீமதி சாஸ்திரி என்று குறிப்பிடுகிறேன்.

ஸ்ரீமதி சாஸ்திரிக்கு என்னென்ன காரியங்கள் தெரியுமென்று எனக்குத் தெரியாது. ஆனல் என்னென்ன தெரியாது என்று தெரிந்துகொண்டிருக்கிறேன்.

ஸ்ரீமதி சாஸ்திரிக்கு இரண்டு ஆண் குழந்தைகள் இருக்கின்றன. அவற்றை எப்பொழுது அழவிடுவது, எப்பொழுது அழவிடாமல் வைத்துக்கொள்கிறது என்கிற விஷயம் அவருக்குத் தெரியாது. நான் ஸ்ரீமான் சாஸ்திரியைப் பார்க்கப் போகும் போதெல்லாம், குழந்தைகள் தேள் கொட்டினதுபோல் கதறிக்கொண்டிருக்கும். ஒருவேளை என்னைக் கண்டதும், என்னை வீட்டைவிட்டுத் துரத்துவதற்காகத்தான், குழந்தைகளைக் கிள்ளிவிடுகிருரோ என்னமோ!

ஸ்ரீமதி சாஸ்திரிக்கு இன்னெரு விஷயமும் தெரியாது என்று என் சொந்த அனுபவத்தினின்றும், ஸ்ரீமான் சாஸ்திரி சொல்லக் கேட்டும் தெரிந்துகொண்டிருக்கிறேன். சமையல் செய்யும் பதார்த்தங்களுக்கு எவ்வளவு உப்புப் போடுவது என்கிற சமாசாரம் இவருக்குத் தெரியாது. எப்பொழுதும் உப்பு அதிகமாய்ப் போடுவாரே யொழிய ஒரு நாளும் குறைத்துப்போட்டது கிடையாது. ஒருவேளை இந்த காந்திச் சண்டைக்குப்பிறகு, கடையில் உப்பு இலவசமாகக் கொடுக்கிருன் என்று நினைத்தாரோ என்னமோ? இல்லாவிடில், உப்பு அதிகம் போட்டு சமைத்தால் ஸ்ரீமான் சாஸ்திரியின் சிநேகிதர்கள் அடிக்கடி வீட்டிற்குச் சாப்பிட வர மாட்டார்கள் என்று இருக்கலாமோ என்னமோ?

கடைசியில் சொன்ன எண்ணத்தின்பேரில் இந்தக் காரியத்தைச் செய்திருந்தால், ஸ்ரீமதி சாஸ்திரி கெட்டிக்காரர் தான்.

ஏனெனில் குடித்தனம் வைத்த முதல் நாளே, ஸ்ரீமான் சாஸ்திரி, என்னையும் அவருடைய மற்ற நண்பர்களையும் சாப்பிடக் கூப்பிட்டிருந்தார். அதிகம் சொல்லுவானேன், அன்றைய சமையல் சமுத்திர ஜலத்தையும் தோற்கடித்து விட்டது. கடைசியில் ஸ்ரீமான் சாஸ்திரியும் நாங்களும், எங்களுடைய விருந்தை ஒரு ஹோட்டலில் நடத்திக்கொண்டோம். இதிலிருந்து, வருந்தியழைத்தாலும் நாங்கள் ஸ்ரீமான் சாஸ்திரி வீட்டிற்குச் சாப்பிடப் போவது கிடையாது.

ஆனால் இதோடு விட்டதா என் தலைவிதி? அன்றிலிருந்து ஸ்ரீமான் சாஸ்திரி அடிக்கடி என் வீட்டிற்குச் சாப்பிட வந்துவிடுகிறார். வந்த போதெல்லாம், ஸ்ரீமதி சாஸ்திரியைப்பற்றியும், அவருடைய சமையல் குணாதிசயங்களைப் பற்றியும் ஒரு புராணம் வாசிக்கத் தொடங்கிவிடுகிறார். பாவம் அவரைக்கண்டால் பரிதாபமாகத்தான் இருக்கிறது. கலியாணத்திற்கு முன்னெல்லாம் ஹோட்டலில் வெங்காய சாம்பாரும், உருளைக்கிழங்கு வறுவலும், நாக்கை நாலு முழம் நீட்டிக்கொண்டு சாப்பிட்ட இவருக்கு இப்பேர்ப்பட்ட மனைவியா வந்து சேரவேண்டும்! ஆனால் யார்மேல் குற்றம்? கலியாணம் பண்ணிக்கொள்ளு முன், பெண்ணுக்குப் பாடத்தெரியுமா, ஆடத்தெரியுமா, பின்னத் தெரியுமா என்றெல்லாம் பார்த்தவர், பெண்ணைச் சமைத்துப் போடச்சொல்லி சாப்பிட்டுப் பார்க்கிறதுதானே!

இருந்தாலும், நிலைமை வரவர மோசமாய்விட்டது ஸ்ரீமான் சாஸ்திரி நிரந்தரமாக என் வீட்டிலேயே சாப்பிட ஆரம்பித்துவிட்டார். அவர் எங்கள் வீட்டில் சாப்பிடுவதில் எனக்கு ஆக்ஷேபணை கிடையாது என்றாலும், என் மனைவி சரசுவுக்கு அப்படியில்லை. சரசு, இரண்டு மூன்று தடவை என்னிடம் சொல்லிப் பார்த்தாள். ஆனால் நான் கேட்கிற வழியாயில்லை. அடுத்த நாள் தன் சாமர்த்தியத்தைக் காட்டிவிட்டாள் சரசு. எங்கள் வீட்டிலும் சமையல் ஒரே உப்பு!

பார்த்தார் சாஸ்திரி! தன் வீட்டு நிலைமையை எப்படியாவது சரிபண்ணவேண்டுமென்று தீர்மானித்தார். இரண்டு

நாள் என் கண்ணெதிரே தென்படவில்லை. மூன்றும் நாள் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் தலையைக் கண்டதும், காய்ந்து கொண்டிருந்த குழம்பில் ஒரு கால்படி உப்பை அள்ளிப்போட்டாள் சரசு. சாப்பிடத்தான் வந்துவிட்டாராக்கும் என்று நினைத்துக் கேட்டேன். இல்லை யில்லை! என்னைத்தான் அவர் வீட்டிற்குச் சாப்பிட அழைக்க வந்தாராம்.

"ஐயோ! மாட்டவே மாட்டேன். நீர் வேண்டுமானல் எங்கள் வீட்டில் சாப்பிட்டுவிட்டுப் போம்" என்றேன்.

"இல்லை, நீர் இன்று கட்டாயம் வரவேண்டும். உம்மை ஒரு காரணமாய்த்தான் கூப்பிடுகிறேன். உமக்கும் சேர்த்துச் சமைக்கச் சொல்லியிருக்கிறேன்" என்றார்.

"மிஸ்டர் சாஸ்திரி! என்னைத் தொந்தரவு படுத்ாதேயும். வேண்டுமானல் நான் கந்துக மதக்கரியை வசமாக நடத்துகிறேன்; கரடி வெம்புலி வாயையும் கட்டுகிறேன். ஆனல் உங்கள் வீட்டில் சாப்பிட முடியாது" என்று தாயுமான சுவாமிகள் பாடலைத் திருத்தி யமைத்துப் பாடினேன்.

"இல்லை, இன்று ஒருவேளை மாத்திரம் வாரும். நீர் செய்ய வேண்டியதெல்லாம், சமையல் உப்பாயிருக்கிறது என்று சொல்லவேண்டும். அவ்வளவுதான்" என்று பரிதாபமான குரலில் சொன்னர்.

அவர் இப்படிச் சொன்னதும் என் கண்களில் ஜலம் வழிந்தது. என்ன செய்வது? இருதலைக் கொள்ளி எறும்பு போல் விழிக்கவேண்டி வந்தது. ஸ்ரீமான் சாஸ்திரி வீட்டிற்குச் சாப்பிடப் போவோமென்ருல் உப்புச் சமையலை சிவனே யென்று விழுங்கவேண்டும். இல்லாவிடில் ஸ்ரீமான் சாஸ்திரி இங்கேயே தங்கிவிடுவார். பரவாயில்லை யென்ருலும், அவர் தலையைக் கண்டதும், குழம்பில் உப்பை அள்ளிக் கொட்டி விடுவாளே நம் தர்மபத்தினி சரசு. சரி, சரி, நம் தலைவிதி இன்று எப்படியும் உப்புச் சமையல்தான் சாப்பிடவேண்டும் என்று எழுதியிருக்கிறது என்று தீர்மா

னித்து, ஸ்ரீமான் சாஸ்திரி வீட்டிலேயே சாப்பிடுவதாக ஒப்புக்கொண்டேன். என்ன இருந்தாலும், சிநேகிதர் என்ருல் இந்த உபகாரம்கூட வேண்டாமா?

காலை பதினெருமணி. ஸ்ரீமான் சாஸ்திரியின் வீட்டுச் சமையலறை. வழக்கம்போல் குழந்தைகள் இரண்டும் கதறிக்கொண்டிருந்தன. நானும் ஸ்ரீமான் சாஸ்திரியும் சேர்ந்து சாப்பிட உட்கார்ந்திருக்கிரேம்.

பச்சடி, கறி, கூட்டு முதலியன பரிமாறியாய்விட்டன. கடைசியில் சாதமும் பரிமாறப்பட்டது. பரிசேஷணம் பண்ணும்போது சாதத்தை ருசி பார்த்தேன். சாதம் நன்ருய்த்தானிருந்தது. அதில் உப்பு ஒன்றும் இல்லை. நல்ல வேளை, நிலைமை இன்னும் மோசமாகவில்லை. பாக்கி கறி குழம்பு, ரஸம் முதலியன உப்பாயிருந்தாலும், வெறும் சாதத்தைச் சாப்பிட்டாவது உயிர் வளர்க்கலா மென்று தோன்றியது.

இது மாதிரி நான் "எண்ணாத எண்ணமெல்லாம்" எண்ணிக்கொண்டிருக்கையில், ஸ்ரீமான் சாஸ்திரி என்னைக் குறிப்பாகப் பார்த்தார். அப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது, அவர் என்னைச் சாப்பிடக் கூப்பிட்டதின் காரணம். நான் சாதத்தைத் தவிர, பாக்கி பதார்த்தங்களைக் கையால் கூடத் தொடவில்லை. இருந்தாலும் தைரியமாக,

"என்ன, சாஸ்திரி, சமையல் எல்லாம் உப்பாயிருக்கிறப்போலேயிருக்கே. ஏது, எங்கேயாவது உப்பு இலவசமாக வாங்கிக்கொண்டு வருகிறீரா?" என்றேன்.

"நீங்கள்தான் சொல்லுங்கோ, சார்! நான் சொன்னல் கேட்கிறதில்லே. நாலுபேர் சொன்னல்தான் தெரியும். இது மாதிரி தினம் உப்பை அள்ளிக் கொட்டினல், எப்படி சார் சாப்பிடுவது? சோறு வாயிலே வைக்க முடியல்லையே" என்ருர் ஸ்ரீமான் சாஸ்திரி பதிலுக்கு.

இதற்குள் குழம்பு பரிமாறப்பட்டது. நான் குழம்பையும் தொடாமலே, "என்ன, இது! குழம்பும் உப்புக் கரிக்கிறதே" என்றேன்.

ஸ்ரீமான் சாஸ்திரியும் பின்பாட்டுப் பாடினர். இவர் பேசி முடித்தாரோ, இல்லையோ, எங்கிருந்தோ இடி இடிக்கிற சப்தம். ஆம், ஸ்ரீமதி சாஸ்திரியின் குரல்தான்.

"உங்களைத்தான், சோற்றைத் தின்னு பார்த்துவிட்டுப் பேசுங்கோ! இன்னிக்கி உங்கள் ஒஸ்தி சிநேகிதர் வருகிறரென்று தெரிந்து, ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்தேன். நான் ஒன்றும் சமைக்கவில்லை."

இந்தக் கெட்டிக்காரத்தனத்தை ஸ்ரீமதி சாஸ்திரி சரசுவுக்குச் சொல்லிக் கொடுத்துவிடப் போகிருர்! சரசுவுக்குத் தெரிந்தாலோ, வந்தது ஆபத்து. ஒன்று வீட்டில் உப்புச் சமையலைச் சாப்பிடவேண்டும், அல்லது என் சொல்ப சம்பளத்தில் ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்துக் கொள்ளவேண்டும்.

○ ☆ ○

# என்ன ஸார் டிபன்?

"என்ன ஸார் டிபன்? வழக்கம் போல் தயிர் வடை தானே?" என்று ராமசாமி அய்யரைப் பார்த்துக் கேட்டேன்.

"ஆமாம் ஸார். நீங்கள் என்ன, புளியோதரையா, தயிர் சாதமா?........ஆம், தயிர் சாதம்தான். இந்த மாதம் முழுவதும் தயிர் சாதம் தானே!" என்றார்.

ஆபீசில் மணி ஒன்று அடித்ததோ, இல்லையோ, நாங்கள் ஒருவரை யொருவர் கேட்டுக் கொள்ளும் கேள்வி ஒன்றே ஒன்றுதான். "இன்றைக்கு என்ன ஸார் டிபன்?" என்பதுதான் அந்தக் கேள்வி. கேள்வி ஒன்றாயிருந்தாலும் பதில்கள் மாத்திரம் பலவிதமாயிருக்கும். ஒருவர் இட்டலி, ஒருவர் தோசை, ஒருவர் உப்புமா, ஒருவர் பூரி, ஒருவர் போளி இப்படியாக உலகத்திலுள்ள டிபன்கள் பெயர்களெல்லாம் அப்பொழுது எங்களிடம் அடிபடும். பிறகு டிபன்கள் எங்கள் வாயில் அகப்பட்டுக் கொண்டு விழிக்கும்.

இந்த டிபன் கொண்டு வருவதில் எங்களுக்குள் ஒருவருக்கொருவர் எவ்வளவோ வித்தியாசம். ஒரு சிலர் ஒரே விதமான டிபனைத்தான் நாள் தவறாமல் கொண்டு வருவார்கள். சூரியனாவது ஒரு நாள் மறந்துபோய் உதிக்காமலிருந்து விடலாம். ஆனால் இவர்கள் தாங்கள் வழக்கமாகக் கொண்டு வரும் டிபனைக் கொண்டு வர மறக்கவே மாட்டார்கள். எப்படியும் இந்த வழக்கத்தை அவர்கள் கைவிடும்படி பண்ணுவதற்காக நாங்கள் ஒரு யுக்தியைக் கையாண்டோம். அவர்கள் கொண்டுவரும் டிபன் காரணமாக அவர்களுக்கு சில அழகான பெயர்கள் கொடுத்தோம். தயிர் வடை ராமசாமி அய்யர், இட்டலி கிருஷ்ணய்யர், பொங்கல் பொன்னுசாமி, போளி ராயர் இத்தியாதி. ஆனால் அவர்

கள் இதற்கெல்லாம் அசைந்து கொடுக்கும் வழியாயில்லை. இதற்குப் பதிலாகத் தங்களுக்கு ஏதோ திவான் பகதூர் பட்டம் கிடைத்து விட்டதுபோல் சந்தோஷப் பட்டார்கள்.

வேறு சிலர் இவர்களுக்கு நேர் எதிரிடை. இவர்கள் விதம் விதமாகத் தினத்துக்கு ஒரு டிபன் கொண்டு வருவார்கள். இவர்கள் என்ன டிபன் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிப்பதிலேயே எங்கள் பாதி டிபன் நேரம் போய்விடும்.

"என்ன சார்! உப்புமாவா?"

"இல்லை."

"போண்டாவா?"

"இல்லை."

"தயிர் சாதமா?"

"இல்லை."

"வடையா?"

"இல்லை."

இப்படியாக நாங்கள் எங்களுக்குத் தெரிந்த டிபன் பெயர்களையெல்லாம் கேட்டுத் தோல்வியுற்று, கடைசியாகச் சற்று சலிப்பாகவே, "என்னதான் டிபன், சொல்லுங்களேன்!" என்றால், "டில்லி தர்பார்" என்று சற்றுப் பெருமையாகவே சொல்லுவார்.

"அதென்னய்யா அது, டில்லி தர்பார்? அதுதான் இந்தக் காங்கிரஸ் காரர்களுக்குப் பயந்துகொண்டு இல்லையென்று சொல்லி விட்டார்களே!" என்று ஒரு நண்பர் கேட்பார்.

"அந்த தர்பார் இல்லை ஸார், இது. சாதத்தில் குழம்பையும் தயிரையும் கலந்து பிசைந்தால் அதற்கு டில்லி தர்பார் என்று பெயர்" என்று விளக்கிச் சொல்வார், "டில்லி தர்பா"ரை விழுங்கப்போகும் நண்பர்.

என்னுடைய டிபனைப் பற்றி மாத்திரம் இத்தனை ருசிகரமான விஷயங்கள் ஒன்றும் சொல்லமுடியாது. என்

மனைவி சரசுவுக்குத் தெரிந்த டிபன் இரண்டே இரண்டு தான். அவை தயிர் சாதம், புளியோதரை. தயிர் சாதம் ஒரு மாதம் கொடுத்தால், புளியோதரை ஒரு மாதம் கொடுப்பாள். புளியோதரைக்கு வேண்டிய புளிக் காய்ச்சலை ஒவ்வொரு தடவையும் ஒரு மாதத்திற்குக் காணும்படியாகக் காய்ச்சி வைத்து விடுவாள் போலும்!

எனக்கு நல்ல நல்ல டிபன்கள் சாப்பிட வேண்டுமென்றுதான் ஆசை. அதற்காக ஒரு தடவை சரசுவிடம் ஒரு அட்டவணை கூடப் போட்டுக் கொடுத்தேன். அதில் வியாழக்கிழமை ஒரு நாளைக்கு மாத்திரம், போனால் போகிறதென்று, "தயிர் சாதம்" என்று போட்டிருந்தேன். ஆனால் பாக்கி நாட்களில் கூட ஆபீசில் டிபன் பொட்டலத்தைத் திறந்து பார்த்தால் தயிர் சாதமாயிருக்கும்! சாயந்திரம் வீட்டிற்குப் போய் சரசுவைக் கோபித்துக்கொண்டால், "இன்றைக்கு வியாழக்கிழமை என்று நினைத்துக்கொண்டு விட்டேன்" என்று சாக்கு சொல்லி விடுவாள்.

இப்படியாக சரசுவும் பிடிவாதமாக நல்ல டிபன்கள் பண்ணித் தருவதில்லை. ஹோட்டலுக்குப் போவோமென்றால் அதற்குப் போதிய சம்பளம் கிடையாது. இதற்கு என்ன பண்ணுவது என்று ரொம்ப நாளாகவே யோசனை பண்ணிக் கொண்டிருந்தேன்.

அன்று ராமசாமி அய்யர் என்னைப் பார்த்துக் குத்தலாக "தயிர் சாதம் தானே?" என்று கேட்டது எனக்கு மிகவும் வெட்கமாய்ப் போய்விட்டது. அங்கேயே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு பிராணனை விட்டு விடலாமா வென்று தோன்றியது. ஆனால் நான் இன்னும் என்னை "இன்ஷியூர்" பண்ணிக் கொள்ளவில்லையாதலால் இந்தக் காரியத்தை "இன்ஷியூர்" பண்ணிக்கொண்ட பிறகு யோசித்துக் கொள்ளலாம் என்று பேசாமல் இருந்து விட்டேன்.

டிபன் சாப்பிட்டானதும் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அதை எல்லா நண்பர்களையும் கூப்பிட்டு அவர்களிடம் தெரிவித்தேன். எல்லாரும் அவரவர்கள் கொண்டு வரும் டிபனைக் கொண்டுவர வேண்டியது. எல்லா

டிபன்களையும் எல்லாரும் பங்கு போட்டுக் கொள்ளவேண்டியது. எப்படி யோசனை? இப்படியாவது நல்ல நல்ல டிபன்கள் சாப்பிடலாமென்பது என் நம்பிக்கை. இந்த யோசனையை என் நண்பர்களிடம் சொன்னபோது அவர்கள் இதற்கு ஒப்புக் கொள்வார்களோ, மாட்டார்களோ என்று எனக்குச் சந்தேகம் தான். ஆனால் அவர்கள் இதற்கு ஒப்புக்கொண்டதும் எனக்கு உண்டான சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல. எனக்குண்டான சந்தோஷ மிகுதியில் என் தயிர் சாதத்திற்குள் ஒளிந்துகொண்டிருந்த நாரத்தங்காய் ஊறுகாயைக் கூடத் தேடிக் கண்டுபிடிக்கச் சிரமப்படாமல் அப்படியே ஒரே வாயில் முன்னிருந்த டிபனைத் தீர்த்து விட்டேன்.

அடுத்த நாள் மணி ஒன்று அடித்தது. நல்ல நல்ல டிபன்கள் சாப்பிடலாம் என்று நாக்கைத் தீட்டி வைத்துக் கொண்டேன். டிபன் அறையில் எல்லாக் குமாஸ்தாக்களும் குழுமினோம். "என்ன ஸார் டிபன்?", "என்ன ஸார் டிபன்?" என்ற குரல்கள் எழுந்தன. எல்லாரும் தத்தம் டிபன் பொட்டலத்தைப் பிரித்தார்கள்! ஒருவர் டிபனை ஒருவர் வெகு ஆவலாகப் பார்த்தோம். எல்லாருக்கும் மேல் வெகு ஆவலாக எல்லார் டிபனையும் நான் பார்த்தேன்!

ஒருவர் அல்வா, ஒருவர் ஜாங்கிரி, ஒருவர் தோசை, ஒருவர் வடை, ஒருவர் சேமியா பாயசம் ஒருவர் இட்டலி இந்த மாதிரி கொண்டு வந்தார்கள் என்று நினைக்கிறீர்கள்? அது தான் இல்லை. சொல்லுவதற்குக் கூட வெட்கமாய் இருக்கிறது. எல்லாருடைய டிபனும் தயிர் சாதம்தான்!

○ ☆ ○

# ராக லக்ஷணங்கள்

## (ராக ஞானம் இல்லாதவர்களுக்கு மட்டும்)

அன்று ஒரு நாள் ஒரு நண்பர் என்னை ஒரு கேள்வி கேட்டார். "ஏன், ஸார்! யாராவது பாடினால் அவர்கள் பாடுவது என்ன ராகம் என்று கண்டுபிடிக்கச் சுலபமான வழி யொன்றும் கிடையாதா? ரொம்ப சங்கீத ஞானம் உள்ளவர்கள் கூட கச்சேரி கேட்கும்போது திண்டாடிப் போய் விடுகிறார்களே! பாடகர் பாடியது ஆரபியா, தேவ காந்தாரியா என்று கேட்க ஆரம்பித்து விடுகிறார்களே! என் போன்று ராக ஞானம் இல்லாதவர்கள் என்ன பண்ணுவது?" என்று கேட்டார்.

நண்பர் கேட்டது மிகவும் சரியான கேள்விதான். ஆனால் நம் பெரியோர்கள் இது விஷயத்தைக் கவனிக்காமல் சென்று விட்டார்கள் என்று நினைத்து விடாதீர்கள். பகவான் பாதார விந்தத்தை யடைவதற்குக் கூட அவரவர்களுக் கேற்ற வழி காட்டி யிருக்கும் நம் பெரியோர்கள் இது விஷயமாக ஒன்றும் செய்யாமலா யிருப்பார்கள்? செய்தே இருக்கிறார்கள். காதால் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்று இல்லாமல், கண்ணாரக்கண்டே இன்ன ராகம் என்று தீர்மானித்து விடச் சில ஹேதுக்கள் கொடுத்திருக்கிறார்கள்.

உதாரணமாக, பாடகர் பாடிக்கொண்டிருக்கும் சமயத்தில் மான் வந்தால் தோடி ராகம் என்று தீர்மானித்து விடலாம். சிராஜ் உட்டௌலா அரசன் காட்டில் கச்சேரி நடத்திக்கொண்டிருக்கையில் தோடி ராகம் பாடினால் மான் வருமாம். இக் காலத்துக் கச்சேரிகள் காட்டில் அல்லாமல் நாட்டில் நடப்பதால் மானுக்குப் பதில் மானை யொத்த மங்கையர் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

நாகவராளி, புன்னுகத் தோடி போன்ற ராகங்கள் வாசித்தால் பாம்பு வரும் என்கிற விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததே. ஆனல் இக் காலத்தில் அக்கம் பக்கத்தில் பாம்பு இருந்தால்தானே வருவதற்கு? ஆகவே பாம்பைக் கண்டு எவ்வளவு நடுங்குகிருேமோ அவ்வளவு நடுங்கும் முனிசிபாலிடி யில் கலெக்டர் வந்தால் பாடகர் பாடியது நாகவராளி அல்லது புன்னுகத்தோடி என்று தீர்மானிக்க லாம்.

தீபக் என்ற ராகத்தைப் பாடினல் பாடகர் எரிந்து சாம்பலாகி விடுவாராம். அக்பர் சக்ரவர்த்தி காலத்தில் நாயக் கோபால் என்ற பிரசித்தி பெற்ற சங்கீத வித்வான் இருந்தாராம். ஒரு நாள் அக்பர் சக்ரவர்த்தி இவரைக் கூப்பிட்டனுப்பி, தீபக் ராகம் பாடும்படி கேட்டாராம். அப்படிப் பாடினல் ஏற்படக் கூடிய ஆபத்தைப் பாடகர் என்ன எடுத்துக் காட்டியும் அக்பர் சக்ரவர்த்தி கேட்க வில்லே. ஆகவே இவர் ஆறு மாத கால விடுமுறை பெற்று, உற்ருர், உறவினரிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பி வந்தார். யமுனு நதியில் கழுத்தளவு ஆழத்தில் நின்று கொண்டு இந்த ராகத்தைப் பாட ஆரம்பித்தார். இவர் பாடப் பாட, நதி ஜலம் கொதித்துக் கொண்டே வந்து, கடைசியில் பொங்க ஆரம்பித்தது. கடைசியில் இவர் உடலி லிருந்தே நெருப்பு ஜ்வாலேகள் கிளம்ப இவர் ஜலத்திலேயே எரிந்து சாம்பலானுராம்.

குண்டக்ரியா என்னும் ராகத்தைப் பாடினல் கல்லும் உருகுமாம். ஒரு சமயம் சங்கீதத்தில் யார் வல்லவர் என்று நாரதருக்கும் தும்புருவுக்கும் இடையே போட்டி எழுந்த தாம். இது விஷயமாகத் தீர்ப்பளிக்கும்படி அனுமாரைக் கேட்டுக் கொண்டார்களாம். அப்பொழுது அனுமார் வீணே யில் இந்த ராகத்தை வாசிக்கவே பக்கத்தில் இருந்த கல் அப்படியே உருகி, அங்கு ஒரு குளம் ஏற்பட்டு விட்டதாம். கல்லே உருக்கின இந்த ராகம் பிரிட்டிஷார் மனதை உருக் குமா என்பது சந்தேகந்தான்.

மேகரஞ்சினி என்னும் ராகத்தைப் பாடினல் மழை கொட்டுமாம். கொட்டுகிற மழையை நிறுத்துவதற்கு ஏதாவது ராகம் இருக்கிறதா என்று தெரியவில்லை.

ஆஹிரி ராகம் பாடினல் அன்று முழுவதும் அன்னம் கிடைக்காது என்கிற விஷயம் எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். இது விஷயமாக ஒரு பாடகருக்குச் சந்தேகம் விழ, அவர் கட்டுச் சாதம் கட்டிக்கொண்டு புறப்பட்டார். வழியில் மூங்கில் தோப்பு ஒன்று தென்பட, அங்கிருந்த மூங்கில் ஒன்றில் கட்டுச் சாத மூட்டையை மாட்டிவிட்டு, கீழே உட்கார்ந்து ஆஹிரி ராகம் பாட ஆரம்பித்தார். பாடி முடித்த பிறகு கட்டுச் சாத மூட்டையை எடுக்கப்போனர். ஆனல் வெயில் அதிகமாக அதிகமாக, வளைந்திருந்த மூங்கில் நிமிர்ந்து விடவே அவர் கட்டுச் சாத மூட்டை கைக்கெட்டாத உயரத்துக்குப் போய்விட்டது. கட்டுச் சாத மூட்டை கை தவறினதற்குக் காரணம், தம் அஜாக்கிரதையேயொழிய, ஆஹிரி ராகம் அல்ல என்று அவர் தீர்மானித்து, அன்று சாயந்திரம் பக்கத்து ஊர் சத்திரத்தைப் போயடைந்தார். எல்லாருடனும் அவருக்கும் இலை போட்டு அன்னம் பரிமாறப் பட்டது. வழக்கப்படி அந்த ஊர் ராணியே எல்லார் கலத்திலும் நெய் ஊற்றிக்கொண்டு வந்தார். கலத்தில் நெய் விழுந்தானதும் பாடகரால் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "ஆஹிரி! அகப்பட்டுக் கொண்டாயா!" என்றார். பாவம், இவருடைய துரதிர்ஷ்டம் அந்த ராணியின் பெயரும் ஆஹிரியாக இருந்தது. ஆகவே ராணியை அவமரியாதையாகப் பேசினதற்காக இவரை அடித்து விரட்டினர்கள்.

ஆக இம்மாதிரி எல்லா ராகங்களுக்கும் நம் பெரியோர்கள் லட்சணம் சொல்லி யிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனல் ஒரு ராகம் மாத்திரம் எல்லா கிரகஸ்தர்களும் தாங்களாகவே தெரிந்து கொண்டிருப்பார்கள். புடவை வாங்கிக் கொடுக்க நாம் மறுக்கும் போதெல்லாம் வீட்டு ஸ்திரீகள் பாடும் ராகம் முகாரி என்பது எந்தப் புருஷனுக்குத்தான் தெரியாது?

# ஏன் ஸார் லேட்?

ஏன் தாயாருக்கும் என் மனைவிக்கும் எத்தனையோ விஷயங்களில் அபிப்பிராய பேதம் இருந்து, நான் மத்தியஸ்தம் செய்யும்படி நேர்ந்தாலும், ஒரே ஒரு விஷயத்தில் மாத்திரம் அவர்கள் இருவருக்கும் மகா ஒற்றுமை! தினம் காலையில் நாழி கழித்துச் சமைத்துப்போடுவதில் அவர்கள் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல.

என் தாயார் எனக்குச் சமைத்துப் போட்டதெல்லாம் முழுக்க முழுக்க நான் பள்ளிக்கூடத்தில் வாசித்தபோது தான். எனக்குக் கலியாணம் ஆன பிறகு என் தாயார் அடுப்பண்டையே போகிறதில்லை. இத்தனை நாள் அவருக்குச் சமையல் வேலை நிச்சயமாய் மறந்தே போயிருக்கும். அப்பொழுதெல்லாம் பள்ளிக்கூடத்திற்குத் தினம் ஒரு நாள் பார்த்தாற்போல் ஒரு நாள் நாழி கழித்துத் தான் போவேன். அப்பொழுதெல்லாம் வாத்தியார் "ஏண்டா இத்தனை நாழி?" என்றால் "லேட்டாய்ப் போயிடுத்து ஸார்!" என்பேன். இல்லாவிடில் "ஏண்டா லேட்?" என்றால், "நாழியாகி விட்டது!" என்பேன். போயும் போயும் அவர் கொடுக்கும் தண்டனையெல்லாம் என்னைப் பெஞ்சிமேல் நிற்க வைப்பதோ, அல்லது இரண்டு அடி அடிப்பதோ, அல்லது "இனிமேல் நான் வகுப்புக்கு நாழி கழித்து வரமாட்டேன்" என்று 'இம்போஸிஷன்' எழுதச் சொல்வதோ தான். அவர் அடிக்கடி 'இம்போஸிஷன்' கொடுப்பார் என்று தெரியுமாதலால், முன்கூட்டியே ஒழிந்த போதெல்லாம் "நான் இனிமேல் வகுப்புக்கு நாழி கழித்து வரமாட்டேன்" என்று எழுதி வைத்துக்கொள்வேன்.

ஆனால் இப்பொழுது, எனக்குக் கலியாணம் ஆனதும், ஓர் ஆபீஸில் வேலையானதும், என் தாயார் தன் "கரண்டி ஆபீஸ் உத்தியோக"த்திலிருந்து "ரிடயர்', ஆனதும்,

அந்த உத்தியோகத்தை என் மனைவி ஏற்றுக்கொண்டதும் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டன. இனிமேல் கேட்கவா வேண்டும்? தினம் ஆபீசுக்கு நாழி கழித்துத்தான் போவேன். நான் மாம்பலத்தில் குடி யிருந்து கொண்டு தினம் டவுனுக்கு எலெக்டிரிக் வண்டியில் போய்க் கொண்டிருந்ததால், ஒரு நாள் பார்த்தாற்போல் ஒரு நாள், தினம் 9-30 மணி வண்டியைப் பிடிப்பதற்குப் பதிலாக 9-45 மணி வண்டியைப் பிடித்து, ஆபீசுக்குப் பத்து மணிக்குப் போவதற்குப் பதிலாக பத்தே கால் மணிக்குப் போய் வந்தேன்.

"ஏன் ஸார் லேட்?" என்பார் மானேஜர். பள்ளிக்கூடத்து நாட்களில் சொன்னது போல் நாழியாகி விட்டது என்று இங்கேயும் சொல்ல முடியுமா?

"நான் ஏறிக்கொண்டு வந்த பஸ் ஒருவர் மேல் மோதி விட்டது" என்பேன்.

"பஸ்தான் மனுஷாளைக் கண்டால் மோதுமென்று தெரியுமே. ஏதாவது டிராமில் வந்து தொலைவதற்கென்ன?" என்பார்.

அடுத்த நாள் "ஏன் ஸார் லேட்?" என்பார். "டிராம் கம்பியில் கரண்டு நின்று போய் விட்டது. அதனால் லேட்" என்பேன்.

"இந்தச் சனியன் பிடித்த டிராம் வண்டிக்குத்தான் இந்த மாதிரித் தொல்லைகள் வருமென்று தெரியுமே. ஏன் சைகிளில் வரக்கூடாது?" என்று கேட்பார்.

அடுத்த நாள், "ஏன் ஸார் லேட்?" என்பார்.

"சைகிள் வழியில் பங்ச்சர் ஆகிவிட்டது" என்று சொல்வேன்.

தினம் இந்த மாதிரி ஏதாவது பொய் சொல்லிக் கொண்டு வந்தேனே யொழிய, ஒரு நாளாவது உண்மைக் காரணத்தை—அது தான் என் மனைவி சமைத்துப் போடுவதற்கு நாழிகையாகிறது என்பதைச் சொன்னது கிடையாது. அவர் பாட்டில், "வேறு மனைவி பார்த்துக் கொள்

வதுதானே, அல்லது நீர்தான் சமைத்து உம் மனைவிக்குப் போட்டுவிட்டு வருவதுதானே?" என்று கேட்டு விட்டால்!

கடைசியாக மானேஜர் என்னை ஒரு நாள் கூப்பிட்டு அனுப்பினர். "ஸார்! நீங்கள் ஆபீசுக்கு நடந்துதான் வருவீர்களோ, அல்லது உருண்டுதான் வருவீர்களோ, அல்லது பறந்துதான் வருவீர்களோ, எனக்குத் தெரியாது. இனிமேல் என்னல் பொறுக்க முடியாது. நாளைக்கு நாழி கழித்து வந்தால், உம் உத்தியோகம் போய்விடும். ஊம், ஜாக்கிரதை!" என்ருர்.

அடுத்த நாள் காலை என் ஞாபக மெல்லாம் எப்படியாவது அன்று சீக்கிரமாக ஆபீசுக்குப் போய்விட வேண்டும் என்று இருந்தது. என் மனைவியும் வெகு மும்முரமாக வேலை செய்துகொண்டிருந்தாள். நானும், என் தாயார் அந்தண்டை இந்தண்டை போனபோதெல்லாம் என் மனைவிக்கு ஒத்தாசை புரிந்து கொண்டிருந்தேன். கடைசியில் வெந்ததும், வேகாததுமாகச் சோறு கிடைத்தது. எனக்கு இருந்த அவசரத்தில் ஷர்ட்டுப் போட்டுக் கொள்ளாமல் 'ஓபன்' கோட்டை மாட்டிக்கொண்டு ஸ்டேஷனுக்கு ஓடினேன். அப்பாடா? ஸ்டேஷனுக்கு 9-25 க்கே போய்ச் சேர்ந்து விட்டேன். ஆபீசுக்கும் சரியாகப் பத்து மணிக்குப் போய்விட்டேன்.

ஆபீஸ் கதவு மூடி யிருந்தது. முன்னல் "வாச்மேன்" உட்கார்ந்திருந்தான். "என்னடா தாமஸ்! மணி பத்தாச்சு. இன்னும் ஏன் கதவு திறக்கவில்லை?" என்றேன்.

"என்ன ஸார்! இன்று ஆபீசு லீவு இல்லீங்களா? இன்று ரம்ஸான் ஆச்சே!" என்ருன்.

என்னைத் தூக்கி வாரிப்போட்டது.

# சில அபிப்பிராயங்கள்

**தினமணி**

சில வக்ர சுபாவங்களை கூர்மையாகக் கவனித்துள்ள இந்த ஆசிரியர் தமக்குள்ள ஒரு அலாதியான திறமையுடன் ஹாஸ்யம் ததும்ப எழுதி யிருப்பதை ரஸிக்காமல், சிரிக்காமல் படிக்க முடியாது.

வாழ்க்கையில் காணும் சில கேவலமான அசட்டுத் தனங்களை குற்றவாளிகளின் முதுகில் "பட் பட்" என்று வீறுவதுபோல எடுத்துக் காட்டுவது இவர் எழுத்திலுள்ள ஒரு பாராட்டத்தக்க அம்சம். ஒரு அத்தியாயத்தைப் படித்துவிட்டு பிறகு படித்துக்கொள்ளலாமென்று புத்தகத்தை மூடிவைக்க முடியாமல் ஒரு அத்தியாயத்திலிருந்து வாசகரை இன்னொரு அத்தியாயத்துக்கு இவர் ஓட்டும் பாணி குறிப்பிடத் தக்கதாயிருக்கிறது.

"பலே! பலே! நாடோடி" என்று ஸ்ரீ. டி. கே. ஸி. தட்டிக் கொடுக்கிறார். இந்த விஷயத்தில் இவருடன் தமிழர்களுக்கு அபிப்பிராய பேதம் இருக்கமுடியாது, சிரிக்காமலும் இந்தப் புத்தகத்தைப் படிக்க முடியாது.

**INDIAN EXPRESS**

The author has demonstrated with what great ease, a clever writer can humourously portray the faults and foibles of our society. A score of such books can do more social reforms than a thousand platform politicians. The characters are well delineated and a mastery of the art of the dialogue is displayed in each sketch.

**SUNDAY TIMES**

That unwinking humourist, "Nadodi".

**ஹிந்துஸ்தான்**

நாடோடியின் கட்டுரைகளுக்கே ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. அவர் எழுத்தை படித்தவுடன் துக்கத்தை

மறந்து சிரிக்க ஆரம்பிக்கிறோம். அவர் நம்மையே கேலி செய்தாலும் கோபம் வருவதில்லை. சிரிக்கவும் சிரிக்கிறோம்.

**கலைமகள்**

ஹாஸ்ய சிருஷ்டிகளில் நாடோடியின் எழுத்து ஒரு வகை. தினந்தோறும் நம் முன்னே நிகழும் நிகழ்ச்சிகளையும் நடமாடும் மனிதர்களையும், கொண்டுவந்து நிறுத்தி நாடகமும் கதையும் கட்டுரையும் ஆக்கி விடுகிறார் அவர்.

**ஹநுமான்**

உணவு, உடை, உரிமை இவைகளுக்கு ஏற்பட்ட ஆபத்தினால் மனம் நொந்து, உடல் தளர்ந்து சோர்வடைந்து கிடக்கும் ஜனங்களுக்கு "நாடோடி" போன்றவர்களின் "தமாஷ் இலக்கியம்" சோர்வை நீக்கி ஊக்கமளிக்கும் டானிக்காகும். "சிரித்துக்கொண்டிருக்க தயாராயில்லாதவர்கள் புத்தகத்தைக் கையாலே தொடக்கூடாது, தொட்டால் ஆபத்துதான்," என்கிறார் ஸ்ரீ. டி. கே. ஸி. ரொம்ப பொருத்தமான வார்த்தை.

**கிராம ஊழியன்**

நாடோடியின் பெயரை தமிழுலகம் நன்கறியும். தமிழ் ஹாஸ்ய எழுத்தாளர்களில் சிறந்தவர்களில் ஒருவர் இவர்.

**வீரகேசரி**

"பரீட்சையில் ஏன் தேறவில்லை ?" என்ற கட்டுரையையும் மற்றவைகளையும் படித்த பிறகு இம்மாதிரி எழுதும் பரீட்சையில் நாடோடி தேறிவிட்டார் என்றே சொல்லலாம்! கட்டுரையின் அமைப்பு அதில் சித்திரிக்கப்படும் சம்பவம், கருத்து, எல்லோரையும் பரவசப்படுத்தும் ஹாஸ்ய ரசம் எல்லாம் 'நாடோடி'யின் பேனாவில் ஓர் தனி இயல்பைப்பெற்று விளங்குகின்றன. சிரித்து சிரித்து நாம் நாடோடியைச் சிரிப்பாய்ச் சிரிக்க வைக்க வேண்டும்!

**நவயுவன்**

தமிழ் நாட்டு பிரபல ஹாஸ்ய எழுத்தாளரான 'நாடோடி'யின் கட்டுரைகளின் தலைப்பைப் பார்த்தாலே படிக்க வேண்டும் என்ற ஆவேசம் உண்டாகிறது! தமது பெயர்போன சரளமான, ஹாஸ்ய நடையைக் கொண்டு ஒன்றுமே இல்லாத விஷயங்களை படித்து மகிழும்படி செய்து விடுகிறார் நாடோடி. வாழ்க்கையிலுள்ள கஷ்ட நிஷ்டூரங்களை, உயர்வு தாழ்வுகளை தமது ஹாஸ்ய எழுத்தைக்கொண்டு சுரண்டி எடுத்து நம்மிடையே ஆஜர்படுத்துகிறார்.

**டி. கே. ஸி.**

ஆசிரியர் நாடோடி வௌவால்த் தொங்கிக்கொண்டு உலகத்தைப் பார்த்து அனுபவிக்கிறார். நம்மையும் அருமையாய் அனுபவிக்கச் செய்கிறார். ஆனால் நமக்கு விட்டத்தில் காலை மாட்டிக்கொள்ளவேண்டிய அவசியமாவது தலை கிறுக்க வேண்டிய அவசியமாவது கிடையாது. அதெல்லாம் அவர்பாடு. நாம் செய்யவேண்டியதெல்லாம் சிரித்துக்கொண்டே யிருக்கவேண்டியதுதான். சிரித்துக்கொண்டிருக்கத் தயாராய் இல்லாதவர்கள் புத்தகத்தைக் கையாலே தொடக்கூடாது. தொட்டால் ஆபத்துத்தான்.

எத்தனையோ விஷயங்களைச் சொல்லித் தீர்த்துவிட வேண்டுமென்ற ஆத்திரம் நமக்கும் வரத்தான் செய்கிறது. ஆனால் எப்படிச் சொல்கிறது என்று சங்கோஜப் பட்டோ பயப்பட்டோ சொல்லாமலே இருந்துவிடுகிறோம். காலமும் கழிந்துவிடுகிறது. நாடோடிக்கு எதையும் சொல்ல ஒரு தந்திரமோ மந்திரமோ கைக்கு வந்திருக்கிறது. புண் படுத்தாமலே ஊசியை இறக்கி விடுவார். ஈட்டியையே இறக்கி விடுவார்!!

ஆசிரியரது உள்ளம் ஒரு பெரிய ஹாஸ்யச் சுரங்கம். தோண்டத் தோண்ட வந்துகொண்டே யிருக்கிறது சரக்கு.

**கல்கி**

தமிழ் நாட்டு வசன இலக்கியத்தில் நாடோடி ஒரு தனி வழியை உண்டு பண்ணிக்கொண்டார். அதிலே மேலும்

மேலும் முன்னேறிச் சென்று வருகிறார். நல்ல வசன நடைக்கு இருக்கவேண்டிய எல்லா இலட்சணங்களும் அவருடைய நடையில் நன்கு அமைந்திருக்கின்றன. அதில் எளிமை இருக்கிறது; தெளிவு இருக்கிறது; இலேசான, உயர்தர நகைச்சுவை இருக்கிறது.

உண்மையான நகைச்சுவை ஆசிரியனை வேதாந்திக்கு ஒப்பிடலாம். உலகிலுள்ள இன்பங்களையும் துன்பங்களையும் வேதாந்தி சம நோக்குடன் பார்க்கிறான். நகைச்சுவை ஆசிரியனும் அப்படித்தான். வாழ்க்கையிலுள்ள கஷ்டங்கள், சுகங்கள் எல்லாவற்றிலும் அவன் நகைச்சுவையைக் காண்கிறான். தான் காண்பதோடு நில்லாமல் நமக்கும் எடுத்துக் காட்டுகிறான். நகைச்சுவை ஆசிரியனுடைய கண்கள் வழியாகப் பார்க்கும்போது நமக்கும் உலகத்திலுள்ள இன்ப துன்பங்கள் எல்லாம் சமமாகப் போய் விடுகின்றன. எல்லாவற்றிலும் சிரித்து மகிழ்வதற்குரிய அம்சங்களையே காண்கிறோம். அப்போது உலகத்து இன்பங்களை நன்கு அநுபவிக்க முடிகிறது; உலகத்தின் துன்பங்களோ சகிக்கக்கூடியவை ஆகின்றன.

நாடோடி தமிழ் நாட்டுக்கு அத்தகைய அரிய தொண்டைச் செய்து வருகிறார். நமது தினசரி வாழ்க்கையை நகைச்சுவைக் கண்கொண்டு பார்த்து, அதில் நாம் காணாத அதிசயங்களையும் ஹாஸ்யங்களையும் கண்டு, நமக்கும் எடுத்துச் சொல்கிறார். அவருடைய கட்டுரைகளைப் படிக்கும்போது நமக்கு வார்த்தைகளின்மேல் ஞாபகம் இருப்பதில்லை. அநேகமாய் முதல் வரியிலேயே விஷயத்துக்குள் போய் விடுகிறோம். கடைசி வரியில் வந்துதான் நிற்கிறோம்.

இப்படி வார்த்தையில் நமது கவனத்தை நிறுத்தாத நடைதான் உயர்ந்த நடை; அதுதான் எழுதுவதற்கு மிகவும் கடினமான நடை. படிக்கும்போது "ஒன்றும் கஷ்டமில்லையே; ரொம்ப எளிதாயிருக்கிறதே!" என்று தோன்றும். எழுதிப் பார்த்தால்தான் அதன் கஷ்டம் தெரியும்.

---

Printed at Commercial Printing & Publishing House, G. T., Madras.
P. I. Card Q. H. No. MS. 120 B
For Nadodi P. I. Card Q. H. No. MS. 120

# நாடோடியின் அடுத்த புத்தகங்கள்




"புருஷர்களுக்கு மட்டும்" என்று போட்டிருக்கும் புத்தகத்தை அந்த ஸ்திரீ ரகசியமாக எடுத்து வைத்துக் கொண்டு படிப்பதிலிருந்தே அது எவ்வளவு சுவாரஸ்யமாக இருக்கும் என்று தெரிந்து கொள்ளலாம்.

★

தமிழர்கள் சிரித்துச்சிரித்து வயிறு புண்ணாக வேண்டும் என்ற ஒரே ஒரு "நல்ல" நோக்கத்துடன் தொகுக்கப்பட்ட புத்தகம். அறிஞர் டி. கே. சி. கூறியுள்ளதுபோல் சிரித்துக்கொண்டிருக்கத் தயாராக இல்லாதவர்கள் புத்தகத்தைக் கையால் கூட தொட வேண்டாம். தொட்டால் ஆபத்துத்தான்!




கிடைக்குமிடம்:

**நாடோடி** – தியாகராயநகர்
சென்னை

Cover Printed at P. A. S. Press – P.I.C. No. MS 268 – 7th Nov. '45 – 1600 Copies